விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 மார்கழி 03 வியாழக்கிழமை (18.12.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 364

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# அரசியல் ரீதியாக அடிபணிந்து உரிமையைப் பெற தயாரில்லை

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

அரசியல் ரீதியாக அடிபணிந்து எமது உரிமைகளைப் பெற நாங்கள் தயாராக இல்லை. தெற்கிலிருந்து எமது தமிழ்ப் பேசும் மக்கள் எவ்வாறு வன்முறைகளினால் வெளியேற்றப்பட்டார்களோ அதேபோல் வடகிழக்கு வாழ் தமிழ் மக்களினையும் வெளியேற்றுவதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறு இராணுவ மற்றும் அரசின் பிடிக்குள் சிக்கித்தவித்து பல இழப்புகளின் மத்தியில் தான் வட மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டு நியதிச் சட்டம் சமர்ப்பிக்கப்படுகின்றது என வட மாகாண முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் 22ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைப் செயலக கட்டத்தில் நேற்றுக் காலை 10 மணியளவில் ஆரம்பமாகி நடைபெற்றது.

இதில் 2015 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டம் சம்பந்தமான அறிமுகவுரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

24ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவம் சுற்றிவளைத்து பிரபாகரனை கைது செய்தது

### சாட்சியமளிப்பில் தெரிவிப்பு

(கொழும்பு)

தனது கணவரான வேலுப்பிள்ளை பிரபாகரன் (வயது 26) முகமாலைப் பகுதியில் கடந்த 2006-ம் ஆண்டு இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டு பிடிக்கப்பட்டார். இதுவரை அவர் குறித்த எந்தத் தகவலும் எனக்குக்கிடைக்கவில்லை என அவரது மனைவி பிரபாகரன் பாலேஸ்வரி சாட்சியமளித்தார்.

ஆணைக் குழுவின் இறுதி நாள் அமர்வு நேற்று புதன்கிழமை வவுனியா பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதில் சாட்சியமளித்த குறித்த பெண் நாங்கள் வவுனியா ஈச்சங்குளத்தில் வசித்து வந்தோம். பின்னர் இடம்பெயர்ந்து கிளிநொச்சி, முரசுமோட்டைப் பகுதியில் குடியேறிய போது எனது கணவர் தொழிலுக்காக வேறு பலருடன் முகமாலைக்குச் சென்றார்.

கடந்த 2006.09.09 அன்று எனது கணவர் முகமாலையில் வேலை செய்து கொண்டிருந்த சமயம்,

24ஆம் பக்கம் பார்க்க....

## மைத்திரிபாலவை கண்காணிக்கும் அரசு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவும் அவரின் முக்கிய உதவியாளர்களும் கண்காணிக்கப்பட்டு வருவதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மேலும் தெரிவித்துள்ளதாவது,

24ஆம் பக்கம் பார்க்க....

## மோதல் குறித்து பொலிஸ் விசாரணை

(கொழும்பு)

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மோதலுடன் தொடர்புடைய இரண்டு தரப்பினரும் முறைப்பாடு செய்துள்ள

24ஆம் பக்கம் பார்க்க....

## பொது வேட்பாளரின் கூட்டத்தை குழப்புவதற்கு சதித்திட்டம்

(கொழும்பு)


பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் பிரசாரங்களை குழப்பும் ஒருங்கிணைக்கப்பட்ட திட்டம் செயற்படுத்தப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

வந்துரம்ப பிரதேசத்தில் நேற்று நடைபெறவிருந்த மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்திற்காக அமைக்கப்பட்டிருந்த மேடையை பிரதியமைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிகம, வேறு சில இளைஞர்களுடன் சென்று நேற்றுமுன்தினம் தீ வைத்தமை சம்பந்தமான வீடியோ இருக்கின்றது.

ஜனாதிபதி அனுமதிக்காத விடயங்களை அவர்களின் ஆதரவாளர்கள் மேற்கொள்வது நாட்டில் நல்லாட்சி வீழ்ச்சியடைந்துள்ளதை காட்டுகிறது.

24ஆம் பக்கம் பார்க்க....

## பொது விவாதத்துக்கு மைத்திரி அழைப்பு



(கொழும்பு)

அரசாங்கத்தில் இருக்கும்

24ஆம் பக்கம் பார்க்க....

## வவுனியா சாட்சிப்பதிவு நேற்றுடன் நிறைவு

(கொழும்பு)

காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் வவுனியா மாவட்டத்திற்கான பகிரங்க சாட்சிப் பதிவுகள் நேற்றுடன் நிறைவடைந்தன.

கடந்த 14 ஆம் திகதி முதல் செட்டிக்குளம் மற்றும் வவுனியா பிரதேச செயலகப் பிரிவுகளில் நான்கு நாட்களாக சாட்சி விசாரணைகள் இடம்பெற்றன.

ஆணைக்குழு முன் சாட்சியமளிப்பதற்காக நேற்று 60 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும், 33 பேர் மாத்திரமே சமுகமளித்திருந்ததாகவும், அவர்களிடம் சாட்சியங்கள் பதிவுசெய்யப்பட்டதாகவும் ஆணைக்குழுவின் செயலாளர்

23ஆம் பக்கம் பார்க்க....

## கட்டுநாயக்க இல்லாவிட்டால் இருக்கிறதே மத்தல-நாமல்

(கொழும்பு)

எதிர்வரும் 8ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்தை மூடப்போகின்றார்களாம். ஆனால் எமக்கு மத்தல விமான நிலையம் உள்ளது. அதனூடாக யாரும் செல்ல முடியும் என பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் புதல்வருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, தேர்தல் பிரசார கூட்டங்கள் சிலவற்றில் கலந்து கொண்டார்.

கொலன்ன பிரதேசத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 8ஆம் திகதி மைத்

24ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவ ஆக்கிரமிப்பு எமது ஆட்சியில் இருக்காது

### ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

அபிவிருத்தி என்ற பெயரில் அனைத்து துறைகளிலும் இராணுவ ஆக்கிரமிப்பினை மேற்கொள்ளும் இராணுவ ஆட்சி எமது அரசாங்கத்தில் இருக்காது. எமது ஆட்சியில் அதன் கடமையினை மட்டுமே இராணுவம் செய்யும் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சர்வதேசத்தின் மத்தியில் இலங்கை மறைக்கப்பட்டு விட்டது. அதனை மீட்டெடுக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

சுற்றுலாத்துறை சார் வர்த்தகர்களுடனான சந்திப்பொன்றை எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சி தலைவர் காரியாலயத்தில் மேற்கொண்டிருந்தார். இதில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு

23ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 28ஆம் திகதி விசேட தினம்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் விசேட தினமாக எதிர்வரும் 28 ஆம் திகதியை பிரகடனப்படுத்தியுள்ளதாக தேர்தல்கள் செயலகம் குறிப்பிடுகின்றது.

ஒரு கோடியே 50 இலட்சத்து 44 ஆயிரத்து 490 வாக்குச் சீட்டுகளை எதிர்வரும் 20 ஆம் திகதி தபாலில் சேர்க்கவுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் யூ.அமரதாச தெரிவிக்கின்றார்.

மாவட்ட தேர்தல் அலுவலகங்கள் ஊடாக வாக்காளர் அட்டைகள் தபாலில் சேர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அவர் கூறினார்.

இதன் பின்னர் தபால் திணைக்களத்தினால் 25 மாவட்டங்களிலும் எதிர்வரும் 28 ஆம் திகதி வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளன.

வாக்காளர் அட்டை விநியோகம் டிசம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக இந்த திகதியின் பின்னர் தபால திணைக்களத்தினால் வீடுவீடாக வாக்காளர் அட்டை விநியோகம் முன்னெடுக்கப்படமாட்டாது என்றும் அவர் கூறினார். (எ-11)

## பிக்கப்பை மோதிய ரயில்

கொழும்பிலிருந்து யாழ் நோக்கி வந்து கொண்டிருந்த யாழ்தேவி புகையிரதம் பிக்கப் ரக வாகனத்தை மோதியதில் அதில் பயணித்த இருவர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று மாலை 6.50 மணியளவில் கிளிநொச்சி கரடிப்போக்கு எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் உள்ள பாதுகாப்பற்றபுகையிரதக்கடவையில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த இருவரும் சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

குறித்தகடவையின்ஊடாகஅதிகபொதுமக்கள் பயணிப்பதனால் அதனை பாதுகாப்புள்ளதாக அமைக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (எ-273)

# ஆளுநர் தடையென்றால் ஆதரவாளர்களை நாடுங்கள்

## ஆதரவு வழங்க தயார் என்கிறார் தவராசா

வடமாகாண சபையின் செயற்பாடுகளுக்கு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தடையாக இருக்கின்றார் என்பதற்கு ஆதாரங்களுடன் உரிய விடயங்களை படிமுறையாக தந்தால், வடமாகாண ஆளுநருக்கு எதிராக வடமாகாண சபை எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்க தயாராகவிருப்பதாக வடமாகாண எதிர்க்கட்சி தலைவரும் ஈ.பி.டி.பி கட்சி உறுப்பினருமான சின்னத்துரை தவராசா சபையில் தெரிவித்தார்.

வடமாகாண சபையின் 2015ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் தொடர்பான விவாதத்துக்கான முதல் நாள் அமர்வு கைதடியில் அமைந்துள்ள வடமாகாண சபையில் நேற்று நடைபெற்றது. அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், எதிர்க்கட்சி தலைவருக்கு உரையாற்ற வழங்கிய சந்தர்ப்பத்திலேயே தவராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுக்கு முன்பாக வடமாகாண அமைச்சர்களுக்கு மேலதிகமாக ஒதுக்கப்பட்ட அமைச்சு பொறுப்புக்கள் பற்றிய விபரங்களை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சபையில் சமர்ப்பிக்க வேண்டும். வடமாகாண சபையில நாங்கள் முன்வைக்கும் திட்ட முன்மொழிவுகள் மக்களுக்கு பயன்படவேண்டும். எதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றதோ அது மக்களை அபிவிருத்தி செய்ய பயன்படுவதாக அமைய வேண்டும்.

13ஆவது திருத்தச் சட்டத்தில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளதோ, அதனை செயற்படுத்த வட மாகாண சபை முனையவேண்டும். அதற்கு மேலதிகமாக நடைமுறைப்படுத்த முடியாது. இருப்பதை முழுமையாக செயற்படுத்துவதற்கு வடமாகாண சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடமாகாண சபையின் நிதியை, மத்திய அரசு கையாள்கின்றது எனக்கூற முடியாது. வடமாகாண சபைக்கு இருக்கின்ற அதிகாரங்களை யாருக்கும் விட்டுக்கொடுக்காமல் வடமாகாண சபையே அதனை வைத்திருந்து மக்களின் அபிவிருத்திக்காக பயன்படுத்த வேண்டும் என்று கூறினார். (எ-4)

# வடக்கு மாகாணசபையின் ஒதுக்கீடுகளுக்கு அங்கீகாரம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஆளுநர் செயலகம், மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு, மாகாண பேரவைச் செயலகம் ஆகியவற்றுக்கான ஒதுக்கீடுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இதில் ஆளுநர் செயலகத்துக்கான ஒதுக்கீடு நிபந்தனைகளுடன் அங்கீகரிக்கப்பட்டுள்ளதோடு சில கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன.

இவற்றில் ஆளுநர் செலயத்துக்கு 8 மில்லியனும், மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு 10 மில்லியனும், மாகாண பேரவைச் செயலகத்துக்கு 20 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இம்மூன்றில் ஆளுநர் செயலகம் தவிர்ந்த ஏனையவை சபையில் சுமுகமாக அங்கீகரிக்கப்பட்டதோடு ஆளுநருக்கு வட மாகாண சபை நிதியொதுக்குவதை ஆளும்கட்சி உறுப்பினர்கள் பலமாக எதிர்ப்புக் காட்டியிருந்தனர்.

எனினும் ஆளுநருக்கான ஒதுக்கீடு அங்கீகரிக்கப்படல்வேண்டும்என்பதில் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் உறுதியாக இருந்து இறுதியில் அவரே வெற்றியும் பெற்றார்.

இதனை வாக்கெடுப்புக்கு விடுமாறு உறுப்பினர் சிவாஜிலிங்கம் கோரிய போதிலும் அதெல்லாம் முடியாது இப்போது அங்கீகரிப்போம் பிறகு பார்த்துக் கொள்வோம் எனக் கூறி தானே அங்கீகரிப்பதாக கூறி சபையை முடிவுக்கு கொண்டுவர முயன்றார்.

எனினும் உறுப்பினர்களான சர்வேஸ்வரன், அனந்தி, விந்தன், சிவாஜி ஆகியோர் ஆளுநர் செயலகம் பற்றிய முழு விபரமும் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னரே இதுதொடர்பில் இறுதி முடிவெடுக்க வேண்டும் என கோரியதோடு அதுவரை ஆளுநர் செயலக நிதி நிறுத்தி வைக்கப்படல் வேண்டும் என தெரிவித்தனர். இது சபையிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு நிபந்தனைகளுடன் அங்கீகரிக்கப்பட்டது.

வடக்கு ஆளுநரின் கொழும்பு வாசஸ்தலத்துக்கும் வடக்கு மாகாண சபையின் நிதியே செல்கின்றது என சபையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. (எ-4)

# கம்மன்பில தலைமையில் புதிய கட்சி உதயமாகும்?

ஜாதிக ஹெல உறுமய கட்சியில் இருந்து விலகிய மேல் மாகாண சபை உறுப்பினர் உதய கம்மன்பில புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்க போவதாக அறிவித்துள்ளார்.

தனது புதிய அரசியல் கட்சிக்கு பொது பல சேனா, சிஹல ராவய போன்ற பௌத்த அமைப்புகளின் ஆதரவையும் எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.


கொழும்பில்நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பிரதேச சபை மற்றும் நகர சபை உறுப்பினர்களில் 17 பேர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து நேற்று உதய கம்மன்பிலவுடன் இணைந்து கொண்டனர்.

இவர்களுடன் இணைந்தே தாம் புதிய கட்சியை ஆரம்பிக்க போவதாக அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

# மரண அறிவித்தல்

## தியாகலிங்கம் துசாந்தன்



கல்வளை சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கொல்லவிளாங்குளம் வவுனிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகலிங்கம் துசாந்தன் 30.11.2014 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகலிங்கம் மற்றும் வசந்தகுமாரி தம்பதிகளின் மகனும், தயாளினி, உசாந்தினி, திருக்குமார், லசிந்தா (குட்டி), ஜனசிங்கன் (கௌசி), கோபன் ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 18.12.2014 வியாழக்கிழமை காலை 10 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொல்லவிளாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:வை.சண்முகலிங்கம் (மோகன்) [illegible]
துணுக்காய் மல்லாவி.

(சி-9409)

# 70 வயதில் சா.த. பரீட்சை

எழுபது வயதான முதியவர் ஒருவர் நேற்று கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் கணிதப்பாட பரீட்சையில் தோற்றியுள்ளார்.

பாணந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த நிமல் சில்வா எனப்படுகின்ற குறித்த பரீட்சார்த்தியே இவ்வாறு கணித பாட பரீட்சை எழுதியுள்ளார்.

குறித்தநபர் ஐந்தாவது தடவையாக சாதாரண தரப் பரீட்சையில் நேற்று தோற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

2011 ஆண்டு முதல் தொடர்ச்சியாக சாதாரண தரப் பரீட்சையின் கணிதப் பாட பரீட்சையில் தோற்றிவருகின்ற குறித்த நபர் அதி உயர் சித்திகளை பெற்றுள்ளார்.

தற்காலத்தில் கணிதப்பாடத் திட்டத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளை அதிகாரிகளின கவனத் திற்கு கொண்டு வரும் நோக்கில் இம்முறையும் சாதாரண தரப் பரீட்சையில் தோற்றியதாக குறித்த பரீட்சார்த்தி ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ளார். (எ)


## விற்பனைக்கு

இணுவில் பாலாவோடையில்
வீடுவளவு விற்பனைக்கு.
தரகர் தேவையில்லை.
இரண்டு பரப்பு ஒரு குளி

தொடர்புகளுக்கு:
0775720236

(8791)

## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)
பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P.ஆறுமுகம்



T.P.: 0719315664 , 0777569205

15.12.2014 முதல் 22.12.2014 வரை 8 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகலை மேற்கொள்ளவும்.

மீண்டும் யாழில்

பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

**நாதன் இன்**

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்)
(பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

(C-9403)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

**மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை**
**வட்டாரம்:-15, ஆதன இலக்கம்:28/26 யாழ்.காரைநகர் வீதி**

வட்டாரம் 15 யாழ்.காரைநகர் வீதி, ஆதன இலக்கம் 28/26 இல் அமைந்துள்ள உறுதிப்படி வட மாகாணம், யாழ்ப்பாணம், வலிகாமம் மேற்குப்பகுதி, மானிப்பாய், கோவில்பற்று, சண்டிலிப்பாய் இறை கொத்தன் வளவும் வீறுகயன் தோட்டமும் என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 03 கொண்ட இவ்வாதனமானது சண்டிலிப் பாய்ச் சேர்ந்த சந்திரசேகரம் பெண் உருத்திராதேவி ஆகிய இவர்களால் அறுதி உறுதி மூலம் அதே இடத்தைச் சேர்ந்த ஜெகராஜா பெண் மேகலா என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் செல்வி கிருஷ்ணவேணி சந்திரலிங்கம் முகதாவில் நிறைவேறிய 1636 ஆம் இலக்க 17.09.2014 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். கொத்தன் வளவும் வீறுகயன் தோட்டமும் நிலப்பரப்பு 03 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாத விடத்து இவ்வாதனம் ஜெகராஜா பெண் மேகலா என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

(சி-9405)

**தவிசாளர்**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.**

# மாற்றுவலுவுடையோருக்கு தொழிற்பயிற்சி

சமூக சேவைகள் அமைச்சின் கீழுள்ள சமூக சேவைகள் திணைக்களத்தால் செயற்படுத்தப்பட்டு வரும் மாற்றுவலுவுடையோருக்கான தொழில் பயிற்சி நிலையங்களில், இந்த வருடம் 663 மாற்றுவலுவுடையோர் தொழில் பயிற்சிகளை பெற்றுள்ளதாக சமூக சேவைகள் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாற்றுவலுவுடையோருக்கு தொழில் பயிற்சிகளை வழங்குவதற்காக, சமூக சேவை திணைக்களத்தால், சீதுவ, கெட்டவளை, தெலம்புபாய, வத்தேகம, அமுணுகும்புற ஆகிய இடங்களில் தொழில் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டு, மாற்றுவலுவுள்ளோருக்கான தொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தவருடம் பயிற்சிகளை பெற்ற 663 பேரில் 97 பேருக்கு தொழில்சார் உபகரணங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளதுடன், 82 பேருக்கு தொழில்வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதுடன், 6 பேருக்கு நிறுவனங்கள் மூலம் நிதியுதவி வழங்கப்பட்டன.

பயிற்சிகள் பெற்ற 61 பேருக்கு செயற்கை கால்களும், செவிப்புலனற்ற 229 பேருக்கு விசேட அடையாள அட்டையும் வழங்கப்பட்டது. இவற்றை செயற்படுத்துவதற்காக 16.7772 மில்லியன் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளதாக சமூக சேவைகள் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-5)

## கண்ணீர் காணிக்கை

### திரு.நீக்கிலாப்பிள்ளை ஜோசப்



யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் மிருசுவிலை வசிப்பிடமாகவும் லண்டனை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திரு.நீக்கிலாப்பிள்ளை ஜோசப் அவர்கள் 11.12.2014 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

இவரது நல்லடக்க நிகழ்வு 19.12.2014 வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு (லண்டன் நேரம்) ஹென்சன் சேமக்காலை லண்டனில் நடைபெறும். இவரது ஆத்ம சாந்திக்காக இரங்கற் திருப்பலி 19.12.2014 வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு யாழ்.பாண்டியன் தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரது பிரிவால் துயருற்றிருக்கும் இவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

சூ.அந்தோனிப்பிள்ளை (மைத்துனர் குடும்பம்)

தொடர்புகளுக்கு:- (சி-8790)

விக்ரர் (மகன்)-00447404719378 37/3, 2வது விதானையார் வீதி,
வின்சன் (மகன்)-00447404719561 சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

## வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

### பானை முறையிலான வடிகலன் தொகுதி திருத்தம் செய்தல்

எமது கொத்தணியினால் நவாலியில் நடாத்தப்படுகின்ற பானை முறையிலான வடிகலன் தொகுதியை முழுமையாக திருத்தம், புனரமைப்புச் செய்வதற்காக வடிகலன் பொறித் தொகுதி தொழில்நுட்பம் தொடர்பான பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து உத்தேச செலவு மதிப்பீடு (கூறுவிலை) கோரப்படுகின்றது.

இதனைச் சமர்பிக்க விரும்புவோர் வடிசாலைப் பொறித்தொகுதியை பார்வையிட்டு கூறுவிலையை தலைவர் வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, மானிப்பாய் எனும் முகவரிக்கு எதிர்வரும் 27.12.2014ம் திகதிக்கு முன்னர் மூடி ஒட்டிய நிலையில் பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். இவ் கூறுவிலைகள் அனைத்தும் எமது நெறியாளர் குழுவில் ஆராய்ந்து இறுதி முடிவு தங்களுக்கு அறிவிக்கப்படும். (சி-9404)

**செ.செல்வராசா, தலைவர்**


## வாணி ரெக்ஸ் வழங்கும் விசேட விலைக் கழிவுகள்



எதிர்வரும் நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு சகல விதமான புடைவை வகைகளுக்கும் விசேட விலைக் கழிவுகள். 10%-25% வரை ஒவ்வொரு பொருட்களுக்கும் உண்டு என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.
இவ் அரிய சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்.
தரமான தெரிவுகளுக்கு முந்துங்கள்.

இச் சலுகைகள் 18/12/2014 முதல் 31/12/2014 வரை மட்டுமே

(சி-9401)

வாணி ரெக்ஸ்
இல.81 பெரியகடை,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி:- 021 222 5578, 021 222 9286


## இராசி பலன்

18.12.2014
(மார்கழி 03, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.15 மணிக்கு,
ஏகாதசி முற்பகல் 9.46 மணிவரை
சுவாதி முன்னிரவு 9.11 மணிவரை
இராகுகாலம் 1.53-3.23 மணிவரை
சுபநேரம் 7.53-9.23 மணிவரை
ஏகாதசி விரதம்

**வளவன்**

**மேடம்:** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழும் நாள், மறக்க முடியாத இனிய சம்பவமொன்று நடைபெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு, வருமானம் திருப்திதரும்.

**இடபம்:** தொழில் வியாபாரம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளிலிருந்த குழப்பங்கள் அகலும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், கௌரவமான நாள்.

**மிதுனம்:** நன்மைகள் நாடி வரும் நாள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், பணிகளில் உத்வேகம் காட்டுவீர்கள்.

**கடகம்:** தேவைகள் பூர்த்தியாகும் நாள், பெற்றோர் நலன்கருதி எடுத்த முயற்சிகள் வெற்றிதரும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**சிம்மம்:** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், உடன்பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி:** சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், பணியாளர் தொல்லை அகலும்.

**துலாம்:** பயணங்களால் பலன்கிடைக்கும், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** தாராளமாகச் செலவுகள் செய்து மகிழும் நாள், மங்கல செய்திகள் வந்து சேரலாம், தொழில் ரீதியாக எடுத்த முயற்சி களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு:** நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், தூரதேசப் பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, உறவினர்களின் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம்.


**மகரம்:** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், நண்பர்களின் சந்திப்பால் மகிழ்ச்சி கூடும், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்:** செய்தொழில் மேன்மையுண்டு, புதிய முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள், ஆன்றோர் சந்திப்பு இடம்பெறலாம், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள்.

**மீனம்:** எதிர்பாராத மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், போசன சுகமுண்டு, முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்



## வாழ்க்கை வரலாறு...

05

### பஸ் கண்டக்டர்

...இந்த சமயத்தில் குடும்ப நண்பர் ஒருவர் மூலமாக கர்நாடகா போக்குவரத்து நிறுவனத்தில் பஸ் கண்டக்டர் வேலை கிடைத்தது. ரஜினிக்கு ஏக சந்தோஷம். கலெக்டர் வேலை கிடைத்தது போல் மகிழ்ந்து போனார்.

மகாராணி பெண்கள் கல்லூரி உள்ள சிவாஜி நகர்-சாம்ராஜ் பேட்டை ரூட்டில், 134 ஆம் நம்பர் பஸ்சில் தான் கண்டக்டராக வேலை பார்த்தார் ரஜினி.

பஸ்சில் அவரை பார்ப்பவர்கள் கண்டக்டர் என்றே நம்பமாட்டார்கள். 'அந்த அளவுக்கு டிப்டாப் ஆக உடை அணிவார். பயணிகளுக்கு டிக்கெட் கிழித்துக் கொடுப்பதும் ரைட்.... ரைட்.... என்று கூறுவதும் தனி ஸ்டைராக இருக்கும்.

கல்லூரி மாணவிகளும், இளம் பெண்களும் ஆள் கறுப்பு என்றாலும் அந்த கண்டக்டர் படு ஸ்டைலுடி! என்று தங்களுக்குள் கிசுகிசுத்துக்கொள்வார்கள்!

**எங்கேயோ கேட்ட குரல்!**

ஒருநாள், வேலை முடிந்து ரஜினிகாந்ந் விட்டுக்கு நடந்து போய்க்கொண்டிருந்தார். ஒரு தெருவில் போகும் போது, ஐயா! என்னைக் கொன்னுடாதே! விட்டு விடு! என்று ஒரு பெண் அலறும் சத்தம் கேட்டது.

யாரோ ஒருவன், ஒரு பெண்ணை கெடுக்க முயசிக்கிறான் என்று நினைத்தார். ரஜினி குரல் வந்த திசையை நோக்கித் திரும்பினார். ஒரு பெரிய சுவருக்கு மறுபக்கத்தில் இருந்து அக்குரல் கேட்டது. ஜம்ப் செய்து மறுபக்கம் குதித்தார்.

அங்கே ஒரு ரவுடியின் கையில் சிக்கி, இளம் பெண் ஒருத்தி துடித்துக்கொண்டிருந்தாள். ரவுடியின் கையில் கத்தி பளபளத்தது.

டேய், ராஸ்கல்! என்று பாய்ந்தார் ரஜினி. கையில் இருந்த கத்தியைக் கீழே போட்டு விட்டுத் திரும் பிப் பார்த்தான் ரவுடி.

இது என்ன புதுக்குழப்பம்! என்று கேட்டபடி, ஒருவர் ரஜினியிடம் வந்தார்.

அவர் கையில் ஒரு நோட்டுப்புத்தகம் இருந்தது!

இது நாடக வசனப்புத்தகம் என்பதும், அங்கு நடந்து கொண்டிருந்தது நாடக ஒத்திகை என்பதும் ரஜினிக்கு உடனே புரிந்துவிட்டது.

விழுந்து விழுந்து சிரித்தார்.

இந்த நிகழ்ச்சியினால் எனக்கு நாடகத்தின் மீது ஈர்ப்பு ஏற்பட்டது. நாடகங்கள் போடத் தூண்டியது என்று கூறுகிறார், ரஜினி.

## சினிமாவில் சேர ஆசைவந்தது எப்படி?



ரஜினி நடிகரான பின்னர், கண்டக்டர் நண்பர்களுடன்

**சிவாஜி வேடம்**

இதன்பின் ஒரு நாடகக் குழுவை ரஜினி அமைத்தார். ஜுவாலை என்ற நாடகத்தை அரங்கேற்றினார்.

அந்த நாடகம் மராட்டிய மாவீரர் சத்ரபதி சிவாஜியைப் பற்றியது. சிவாஜி வேடத்தில் ரஜினி நடித்தார். சிவாஜிகணேசன் பாணியைப் பின்பற்றி நடித்தார்.

கையில் தீப்பந்தத்தை பிடித்துக்கொண்டு வீராவேசமாக சிவாஜி பேசுவது போல் ஒரு கட்டம். சிவாஜி கணேசன் பாணியிலேயே சிம்ம கர்ஜனை செய்தார். ரஜினி, கூடியிருந்தவர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள்.

உற்சாகம் அடைந்த ரஜினி, தீப்பந்தத்தை மேலும் தூக்கிப் பிடித்தபடி, வீரவசனத்தைத் தொடர்ந்து பேசினார்.

நாடகத் திரையில் தீப்பந்தம் பட்டு, தீப்பிடித்துக் கொண்டது!

கூடியிருந்தவர்கள் தீ... தீ... என்று கத்திக்கொண்டே சிதறி ஓடினார்கள்.

அப்போதுதான் வீர வசனத்தை நிறுத்தினார் ரஜினி!

**துரியோதனன்**

ஒருநாள் இப்படி தீ விபத்து ஏற்பட்டாலும் தொடர்ந்து நாடகங்கள் நடத்தி வந்தார் ரஜினி.

குருசேத்திரம் என்ற நாடகத்தில் துரியோதனன் வேடத்தில் நடித்தார். அவர் நடிப்புக்கு ஏக வரவேற்பு.

நாடகம் முடிந்ததும், முன்னிலை வகித்த கர்நாடகா போக்குவரத்து அதிகாரி, மேடைக்கு வந்தார்.

நம்முடைய சிவாஜிராவ் (ரஜினி) பிரமாதமாக நடித்தார். விரைவில் அவர் சினிமாவில் நடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

(தொடரும்)

# அதிசய உலகம்

### இயற்கைக்கு மாறான தோற்றத்தைக் கொண்டிருக்கும் வினோதமான காடு!

போலந்து நாட்டிலிருக்கும் காடொன்று வித்தியாசமான மரங்களைக் கொண்டிருக்கிறது.

crooked forest எனப்படும் இந்தக் காட்டில் காணப்படும் மரங்கள் எல்லாமே வளைந்த அடிப்பாகத்துடன் காணப்படுகின்றன.


சுமார் பத்து வருடங்கள் வரை வாழக்கூடிய இத்தகைய மரங்கள் ஏன்



இப்படியொரு தோற்றத்தைக் கொண்டிருக்கின்றன என்பது இன்னமும் அறியப்படவில்லை... மிக அடர்த்தியாக வளர்ந்திருக்கும் இம்மரங்கள் தளபாட உற்பத்திக்கு பயன்படுகன்றன!

# சமைப்போம் சுவைப்போம்

## முட்டைக்கோஸ் கட்லெட்



தேவையான பொருட்கள்

முட்டைக்கோஸ் - 100 கிராம்

கடலை மா- 1 கப்

பூண்டு விழுது - 1 டீஸ்பூன்

பச்சை மிளகாய் - 1

சீரகப் பொடி - 1 டீஸ்பூன்

மிளகாய்ப் பொடி - 1 டீஸ்பூன்

உப்பு- தேவையான அளவு

எண்ணெய் - தேவையான அளவு

செய்முறை

முட்டைக்கோஸை துருவிக் கொள்ளவும்.

பச்சை மிளகாயைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.

கடலை மாவுடன் பச்சைமிளகாய், சீரகப்பொடி, மிளகாய்ப் பொடி, பூண்டு விழுது, முட்டைக்கோஸ், உப்பு சேர்த்து சிறிது தண்ணீர் தெளித்து பிசறி ஆவியில் வேக வைக்கவும்.


சூடு ஆறியதும் நன்கு பிசைந்து சிறு சிறு உருண்டைகளாக உருட்டி விரும்பிய வடிவத்தில் கட்லெட்டுகளாக செய்து கொள்ளவும்.

தோசைக்கல்லில் சிறிது எண்ணெய் விட்டு ஷேலோ ஃப்ரை செய்து தக்காளி சோஸுடன் பரிமாறவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரி

## 15வது ஆண்டு நிறைவு விழா



## 20.12.2014

இடம்:- இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி மண்டபம், நீராவியடி.
காலம்:- 20.12.2014 (சனிக்கிழமை) பி.ப. 2.30 மணி
தலைமை:- உயர் திரு. சிவஞானம் வெற்றிவேலாயுதம் (நிர்வாக இயக்குநர், வலம்புரி)
பிரதம விருந்தினர்:- பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை (முன்னாள் துணைவேந்தர் - யாழ். பல்கலைக்கழகம்)

**ஆசியுரைகள்**

- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் (ஆதீன முதல்வர், நல்லை ஆதீனம்)
- சிவஸ்ரீ சபா. வாசுதேவக் குருக்கள் (தலைவர், சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியம்)
- அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் (குரு முதல்வர்- யாழ். மறை மாவட்டம்)
- அதிவண. பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் (முன்னாள் பேராயர், தென்னிந்தியத் திருச்சபை)
- அல்ஹாஜ் ஏ.எம்.ஏ. அஸீஸ் மௌலவி (காஸிமி) (தலைவர், யாழ், கிளிநொச்சி மாவட்ட உலமா சபை)
- கலாநிதி ஆறு.திருமுருகன் (தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

**வாழ்த்துரைகள்**

- உயர்திரு. எஸ். தட்சணாமூர்த்தி (இந்திய பிரதித் துணைத்தூதுவர்- யாழ்ப்பாணம்)
- பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா (ஓய்வு நிலை தமிழ்த்துறைத் தலைவர், யாழ். பல்கலைக்கழகம்)
- பேராசிரியர் தி.வேல்நம்பி (பீடாதிபதி, வணிக முகாமைத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்)

- மங்கல இசை (நல்லூர் பி.ரஜீவன் குழுவினர்)
- மங்கல விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- வரவேற்பு நடனம் (மாணவிகள், கலைத்தூது அழகியல் கல்லூரி, திருமறைக்கலாமன்றம்)
- வரவேற்புரை: திரு.சி.ஜி.திருமாலழகன் (வலம்புரி)
- தலைமையுரை
- ஆசியுரைகள்
- வாழ்த்துரைகள்
- பிரதம விருந்தினர் உரை
- சிறப்புரை:- ந.விஜயசுந்தரம் (வலம்புரி)
- கௌரவிப்பு : உயர்திரு. க.லோகநாதன் (மூத்த ஊடகவியலாளர்)
- வாழ்த்துப்பா : மாவை.நா.கஜேந்திரன் (பொது முகாமையாளர்- வலம்புரி)
- இசைக் கச்சேரி
  - பாட்டு :- ஆசிரியை திருமதி ஜெயபாரதி கௌசிகன் (இயக்குநர், அமிர்தவாஹினி இசைமன்றம்)
  - வயலின்:- திரு. ஏ.ஜெயராமன்
  - மிருதங்கம்:- திரு. சதா வேல்மாறன்
  - தபேலா:-திரு.எஸ்.விமல்சங்கர்
  - ஒகன்:- திரு.ஜி.சத்தியன்
- நன்றியுரை:- திரு. க.சதீபன் (செய்தி ஆசிரியர்,வலம்புரி)
- நிகழ்ச்சி நெறியாள்கை: திரு. ச.லலீசன் (உப அதிபர் , ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்)

**உங்கள் அனைவரையும் இருகரம் கூப்பி அன்புடன் அழைக்கின்றோம்**

15 வருட ஊடகப் பணியில் எம்மோடு தோள் கொடுத்த அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகள்

இல.3, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

வலம்புரிக் குடும்பம்

## ஐ.தே.க. ஆதரவாளர் மீது தாக்குதல் நடத்திய ஐவர் கைது

கல்வே-கலன்குட்டிய பகுதியில்வைத்து ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்கள் மீது தாக்குதல் நடத்திய 5 சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளர்களின் வாகனங்களுக்கும் குறித்த சந்தேக நபர்கள் சேதம் ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் நாட்டில் குறிப்பாக தென்னிலங்கையில் எதிர்க்கட்சிகள் மீதான தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இதற்கு தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)


# விசேட சலுகை

வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவினையொட்டி எமது வாடிக்கையாளர்கள் 01.11.2014 முதல் 31.12.2014 வரை மாபெரும் விசேட விலைக் கழிவுடன் தங்களது விளம்பரங்களை எமது பத்திரிகையில் பிரசுரிக்க முடியும் என்பதனை அறியத் தருகின்றோம்.

**முழுப்பக்கம், அரைப்பக்கங்களிற்கு மாத்திரமே இவ் விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்.**

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

தொடர்புகளுக்கு:- 021 2217 603
021 5671 532
Valampuriijaffna@gmail.com



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 3<br>கி.பா: 38<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/3855 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 26 3/4<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/3888 |
| பிறப்பு: 1985இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 16 1/2 சூரி செவ்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSC/ Q.S<br>தொ.இ: B/3857 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 54 செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L/ தனியார் தொழில்<br>தொ.இ: G/3900 |
| பிறப்பு: 1985இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 13 1/2<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSC/ பொறியியளாளர்<br>தொ.இ: B/3859 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 40 செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/3177 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 10 1/2 செவ் 7 இல்<br>தகைமை/தொழிலO/L/ சாரதி<br>தொ.இ: B/3860 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 5 1/4<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ வங்கியாளர்<br>தொ.இ: G/3179 |

# கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்துசந்தி குழுமோதலுடன் தொடர்புடைய மூவர் கைது

யாழ்ப்பாணம், ஐந்து சந்தி பகுதியில் கடந்த 14ஆம் திகதி இரவு இடம்பெற்ற குழு மோதலுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில், மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த குழு மோதலின் போது, ஐந்து சந்தியில் அமைந்துள்ள பீடா கடை மற்றும் மோட்டார் சைக்கிளொன்றும் மூன்று சைக்கிள்களும் தீக்கிரையாக்கப்பட்டன. அத்துடன், வாள வெட்டுக்கு இலக்கான மூவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவந்த பொலிஸார், கொட்டடி, ஆறுகால்மடம், நாவாந்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மூன்று சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவத்துடன் 8 சந்தேகநபர்கள் தொடர்புபட்டிருப்பதாக இனங்காணப்பட்டுள்ளதாகவும் ஏனைய ஐவரையும் தேடி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை யாழ். ஐந்து சந்திப் பகுதியில் இராணுவத்தினரும் பொலஸாரும் பாதுகாப்பு பணியில் அமர்த்தப்பட்டுள்ள அதேவேளை பாதுகாப்பு பிரிவினரின் கண்காணிப்புக்குள் ஐந்து சந்திப் பகுதி கொண்டு வரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)



# அடாவடித்தனங்கள் இடம்பெறுவதை ஜனாதிபதி மகிந்த விரும்பமாட்டார்

## சுதந்திர கட்சியின் யாழ்.அமைப்பாளர் அங்கஜன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)



**மக்கள் சேவைக்கான தீர்மானங்களை மேற்கொள்ளும் உயர்மட்ட சந்திப்புகளில் அடாவடித்தனங்கள் இடம்பெறுவதை ஜனாதிபதி ஒருபோதும் விரும்பமாட்டாரென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளரும் வடமாகாண சபை எதிர்க்கட்சி உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.**

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அடிதடி தொடர்பாக யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்கள் வினவிய போது இதற்கு கவலை தெரிவித்த அவர்




மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடபகுதியின் அபிவிருத்தியை கருத்தில் கொண்டே அந்த மாகாணத்திற்கு சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்திய ஜனாதிபதி மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களிடம் அதன் ஆட்சியை ஒப்படைத்து அம்மாகாண அபிவிருத்திக்கு பூரண ஒத்துழைப்பையும் வழங்கி வருகின்றார்.

அனைத்துத் தரப்பினரும் ஒருமித்து ஒன்றிணைந்து வடமாகாண்த்தின் அபிவிருத்தியை முன்னெடுத்து அந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென ஜனாதிபதி அக்கறை கொண்டுள்ள நிலையில் அந்த மக்களின் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்ட உயர்மட்டக் கூட்டத்தில் அடாவடித்தனங்கள் இடம்பெறுவதை அவர் ஒருபோதும் விரும்பமாட்டார். வடமாகாணத்தின் அபிவிருத்தி எந்தளவு முக்கியமோ அந்தளவிற்கு அவர்களுக்கான அந்தஸ்தும் வழங்கப்பட வேண்டுமென்ற விருப்பம் கொண்டே அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சருக்கு இணையாக வடக்கு முதலமைச்சருக்கும் இடமளித்து ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்கு இணைத் தலைமை பதவியையும் அளித்துள்ளார்.

ஜனாதிபதி இவ்வாறு வடக்கின் அபிவிருத்திக்கு முக்கியத்துவமளித்து வருகையில் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை அமைதியாக நடத்தி அதன் பலாபலன்கள் மக்களை சென்றடைந்து அவர்கள் சுபீட்சமடைய வேண்டுமென கரிசனை கொண்டிருக்கையில் இவ்வாறான அடிதடிகளை அவர் ஒருபோதும் விரும்பமாட்டாரெனவும் அங்கஜன் தெரிவித்துள்ளார். (இ-5)

## யாழ்ப்பாண வலய அதிபர்களுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வலயத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான பாடசாலை மட்டத் திட்டமிடல் பொருட் கணக்கெடுப்பு தொடர்பான கூட்டமானது நாளை வெள் ளிக்கிழமை வலய முகாமைத்துவ மண்டபத்தில் காலை 8.30 மணி முதல் இடம் பெறும். அதிபருடன் ஆசிரியர் ஒருவரும் மேற்படி செயலமர்வில் பங்கு பற்றுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-5)

## முருகநாம பஜனை

(கரணவாய்)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை நடத்தி வரும் வாராந்த ஆன்மீக நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு முருக நாம பஜனை இடம் பெறும். (இ-60

## யாழ்.பொது நூலகத்தால் நடத்தப்பட்ட தேசிய வாசிப்பு மாத போட்டி முடிபுகள்

(கொழும்புத்துறை)

யாழ்.பொதுசன நூலகத்தால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

மேற்படி போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் வெற்றியீட்டி முதல் மூன்று இடங்களையும் பெற்ற போட்டியாளர் விபரம் வருமாறு,

**கதைகூறல்(3-5 வயதுப்பிரிவு)**

எஸ்.ஆகர்ஷித், ஆர். கிரோஷிகா, வை.ஷர்வின்

**பாட்டு (3-5 வயதுப்பிரிவு)**

எஸ்.நம்சியா, ஏ.அபிஷோக், எஸ். ஜெரூபினி

**வர்ணம் தீட்டுதல் (3-5 வயதுப் பிரிவு)**

எஸ்.ஆகர்ஷித், ஜே.அட்ஷரா, விசாகினி

**6-7 வயதுப்பிரிவு**

ஜே.ஜெய்ஷாந், எஸ்.ஆர்த்தி, ரி. ரிஷிகன்

**திருக்குறள் மனனம் (6-7 வயதுப்பிரிவு)**

ரி.விசாலி, ஆர்.கோவர்த்தனன், கே.அபிஷியா

**பேச்சு (8-10 வயதுப்பிரிவு)**

யு.ஆன்ஷெரன், வி.சதுர்த்திகா, ரி.கயூரி

**குறுக்கெழுத்துப்போட்டி (11-13 வயதுப்பிரிவு)**

ஜே.யுடினி, ஏ.மயூரி,

**பொது அறிவுப் போட்டி (11-13வயதுப்பிரிவு)**

எம்.அனுஷ்டன், எஸ்.தனுஜா, எம்.யுபேக்கா

**கட்டுரைப்போட்டி (11-13 வயதுப்பிரிவு)**

ஏ.மயூரி, கே.தேணுகா, ஆர். மாதங்கி

**கதைகூறல் (14-15 வயதுப்பிரிவு)**

எம்.லக்சனா, ஈ.பவித்திரா, ஆர். அபிநயன்

**றண்டம் புக் கிளப்**

ஆர்.ரேவதி, பி.றாகவி, பி.டினேஷன்

**படக்காட்சி**

ஆர்.ஜானகி, எஸ்.சாமினி, ஜி.பஜனீதா (இ

# டெங்கை கட்டுப்படுத்த விசேட நடவடிக்கைகள்

## பொதுமக்களை ஒத்துழைக்க வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

டெங்குநோய் பரம்பலைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் விசேட டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள அறிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் பெய்துவரும் பருவகாலமழைக்குப்பின்னர் டெங்கு நோயின் பரம்பல் அதிகரித்துள்ளது. நவம்பர் மாதத்தில் 224 நோயாளர்களும் டிசெம்பர் மாதத்தில் இதுவரை 70 நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம், கோப்பாய், நல்லூர், உடுவில், சண்டிலிப்பாய் ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலேயே அதிகமான நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

எனவே இந்நோய்ப் பரம்பலைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் எதிர்வரும் டிசெம்பர் 18, 19, 20 ஆம் திகதிகளில் விசேட டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை யாழ்ப்பாணம், கோப்பாய், நல்லூர், உடுவில், சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் முன்னெடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாரத்தில் இப்பிரதேசத்திலுள்ள வீடுகளிலும் நிறுவனங்களிலும் பொது இடங்களிலும் சுத்திகரிப்பு பணிகளை முன்னெடுக்குமாறு வேண்டுகிறோம். இத்தினங்களில் விசேட டெங்கு தடுப்புக் குழுக்கள் வீடுகளையும் நிறுவனங்களையும் தரிசிக்கவுள்ளனர்.

பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கி தமது வீடுகளை துப்புரவு செய்து டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை அழித்து உதவுமாறு வேண்டுகிறோம். இப்பிரதேசத்திற்குட்பட்ட நிறுவனங்களிலும் சிரமதான அடிப்படையில் சுத்திகரிப்பு பணிகளை முன்னெடுக்குமாறு எதிர்பார்க்கின்றோம். உள்ளூராட்சி மன்றங்கள், பொது இடங்களை துப்புரவு செய்ய உரிய ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென அவ்வறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (இ

## கலாசார விழாவும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து நடத்தும் மருதசாகரம் நூல் வெளியீட்டு நிகழ்வு மற்றும் கலாசாரப் பெருவிழா என்பன நாளை வெள்ளிக்கிழமை யாழ். தாளையடி றோ.க.த.க பாடசாலையில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் ந.திருலிங்கநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகமும்சிறப்பு விருந்தினராக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதி பணிப்பாளர் திருமதி உஷா சுபலிங்கமும் கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்ட கலாசார உத்தியோகத்தர்கள் திருமதி விஜயரட்ணம் சுகுணாளினியும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களுக்கான தீர்வு முன்வைக்கப்பட வேண்டும்

## முன்னாள் அமைச்சர் ராஜித வலியுறுத்து

(கொழும்பு)

**ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ இருக்கும் வரை இந்த நாட்டில் அதிகாரப் பரவலாக்கலை வடக்கு மக்கள் எதிர்பார்க்க முடியாது எனவும் தமிழ் மக்களுக்கான தீர்வு முன்வைக்கப்பட வேண்டுமெனவும் முன்னாள் மத்திய அமைச்சரும் நாடாளு மன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**



இந்தியாவிலிருந்து வெளிவரும் த இந்து பத்திரிகைக்கு அவர் வழங்கிய செவ்வியில் இதனை தெரிவித்துள்ளார்.

வடக்கு மக்களுக்கு ஜனாதிபதி எதனையும் செய்யப் போவதில்லை. ஆணைக்குழுக்களை அமைப்பதனால் எவ்வித நன்மைகளும் ஏற்படப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கான தீர்வு முன்வைக்கப்பட வேண்டும்.

அத்துடன் நல்லாட்சிக்காக இந்தியாவை போன்று சுயாதீன தேர்தல் ஆணைக்குழு உட்பட குழுக்கள் அமைக்கப்படவேண்டும் என்றும் ராஜித தெரிவித்தார்.

இலங்கையில் மதங்களுக்கு இடையிலான உறவுகள் தகர்ந்து போயுள்ளன.

இன்று மகிந்த ராஜபக்ஷவின் குடும்ப ஆட்சி நடைபெறுகிறது. இந்தநிலையில் ராஜபக்ஷவின் குடும்பத்தினருக்கே அரசாங்கத்தின் 70வீத பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.


சகல அமைச்சர்களுக்குமான நிதி ஒதுக்கீடுகள் ஜனாதிபதியின் சகோதரரும் அமைச்சருமான பசில் ராஜபக்ஷவின் ஊடாக செல்கின்றன. இதன்போது பசில் ராஜபக்ஷவுக்கு பெருமளவு பணம் சேர்க்கப்படுகிறது என்றும் ராஜித மேலும் குற்றம் சுமத்தினார். (இ-5)

## அரசு அலட்சியம் பெற்றோர் புகார்

பாகிஸ்தானில் இராணுவப் பாடசாலையினுள் புகுந்து மாணவர்களை சுட்டுக் கொன்ற தலிபான் தீவிரவாதிகள், அப்பாடசாலைக்கு ஏற்கனவே தாக்குதல் மிரட்டல் விடுத்திருந்த செய்தி தற்போது தெரியவந்துள்ளது. பெஷாவர் நகரில் உள்ள இராணுவப் பாடசாலையில் புகுந்து தலிபான் தீவிரவாதிகள் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் மொத்தம் 132 மாணவர்கள் உட்பட 142 பேர் கொல்லப்பட்டனர். உயிரிழந்த மாணவர்களின் இறுதிச் சடங்கு நடைபெறும் பெஷாவர் நகரமே சோகத்தில் மூழ்கியுள்ளது. நேற்று முன் தினம் தாக்குதல் நடைபெற்ற பாடசாலைக்கு ஏற்கனவே பல முறை தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளதாக கூறியுள்ள மாணவர்களின் உறவினர்கள், பாகிஸ்தான் அரசு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருந்தால் உயிரிழப்பை தவிர்த்திருக்க முடியும் என்று வேதனை தெரிவித்தனர். மேலும் கடந்த காலங்களில் தீவிரவாத மிரட்டல் காரணமாக ஓரிரு முறை பாடசாலை மூடப்பட்ட சம்பவமும் நிகழ்ந்துள்ளதாக மாணவர்களின் உறவினர் ஒருவர் தெரிவித்தார். (இ-5)

## பாகிஸ்தானில் தலிபான்களின் கொடூரம்

# மேசைக்குக் கீழ் ஒளிந்து கொண்ட எங்களை வெளியே இழுத்துப்போட்டு சுட்டுத்தள்ளினர்



### உயிர்தப்பிய மாணவன் கண்ணீர்மல்க பேட்டி

பாகிஸ்தானில் 132 பாடசாலை மாணவர்கள் உட்பட 141 பேரைக் கொன்ற தீவிரவாதிகள் நடத்திய வெறியாட்டம் உலக மக்களை குமுற வைத்துள்ளது. மாணவ, மாணவிகள் கதறி துடிக்க, துடிக்க அவர்களை கொஞ்சமும் ஈவு, இரக்கம் இல்லாமல் தலிபான் தீவிரவாதிகள் காட்டுமிராண்டித்தனமாக சுட்டுக் கொன்றுள்ளனர்.

தற்கொலைப்படை தீவிரவாதிகள் தாக்குதல் நடத்துகிறார்கள் என்பதை அறிந்ததும், மாணவ, மாணவிகள் தங்கள் வகுப்பறைகளில் உள்ள மேசைக்கு அடியில் புகுந்து ஒளிந்து கொண்டு உயிர் தப்ப முயன்றனர். ஆனால் 9 தீவிரவாதிகள் ஒவ்வொரு வகுப்பறையாக சென்று மேசைக்கு கீழ் பதுங்கி இருந்த மாணவ,மாணவிகளை தேடிப்பிடித்து சுட்டுக் கொன்றனர்.

அப்போது சில மாணவர்கள் மட்டும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்கள். அவர்கள் நடந்த சம்பவம் பற்றி கண்ணீர்மல்க பேட்டி அளித்துள்ளனர். மாணவர்கள் வெளியிட்ட தகவல்கள், தலிபான் தீவிரவாதிகளின் கொடூர குணத்தை படம் பிடித்து காட்டுவதாகவுள்ளது.

உயிர் தப்பி சிகிச்சை பெற்று வரும் மாணவர்களில் ஷாரூக் கான் (வயது- 16) என்ற மாணவன் கூறியதாவது,

எங்கள் பாடசாலையில் சுமார் 500 மாணவ,மாணவிகள் படித்து வந்தோம். சில வகுப்பு மாணவர்களுக்கு பரீட்சை நடந்து வருகிறது.

எங்கள் வகுப்பு மாணவர்களுக்கு ஆலோசனை வழிகாட்டி வகுப்பு நடத்தப்பட்டது. இதற்காக நாங்கள் பாடசாலை கேட்போர் கூடத்தில் அமர்ந்திருந்தோம்.

தன்னம்பிக்கை பயிற்சி அளிக்கும் நிபுணர் ஒருவர் எங்களுக்கு மேல்படிப்புக்கான ஆலோசனைகளை சொல்லிக் கொண்டிருந்தார். திடீரென அங்கு 4 பேர் துப்பாக்கிகளுடன் புகுந்தனர். இராணுவ உடையில் இருந்த அவர்கள் "அல்லாகூ அக்பர்" என்று சொல்லியபடி எங்களை குறி வைத்து சரமாரியாக சுட்டனர்.

அப்போது எல்லோரும் மேசைக்கு அடியில் ஒளிந்து கொள்ளுங்கள்" என்று எங்கள் ஆசிரியர்கள் அலறினார்கள். உடனே நாங்கள் அனைவரும் மேசைக்கு அடியில் புகுந்து கொண்டோம். என்றாலும் அவர்கள் எங்களை விடவில்லை.

திடீரென ஒருவன், எல்லோரும் மேசைக்கு கீழ் ஒளிந்து இருக்கிறார்கள். பிடித்து சுட்டுத் தள்ளுங்கள்" என்று உத்தரவிட்டான். உடனே 2 தீவிரவாதிகள் ஒவ்வொரு மேசைக்கு கீழ் ஒளிந்திருந்த மாணவர்களை தேடிப்பிடித்து வெளியில் இழுத்துப் போட்டு சுட்டுக் கொன்றனர்.

நான் ஒளிந்திருந்த மேசைக்கு அடியிலும் சரமாரியாக சுட்டனர். என் 2 கால்களிலும் குண்டுகள் பாய்ந்தன. கடுமையாக வலித்தது. வலி தாங்காமல் சத்தம் போட்டால் சுட்டுக் கொன்று விடுவார்கள் என்று தெரிந்தது.

உயிர் தப்ப வேண்டுமானால் செத்தவன் போல் நடிக்க முடிவு செய்தேன். உடனே கழுத்தில் கிடந்த 'ரை'யை (கழுத்துப்பட்டி) கழற்றி அதை சுருட்டி, வாய்க்குள் திணித்துக் கொண்டேன். இதனால் என்னிடம் இருந்து எந்த சத்தமும் வெளியில் வரவில்லை.

செத்து விட்டவன் போல அப்படியே கிடந்தேன். என்னைச் சுற்றி நிறைய மாணவர்கள் இரத்த வெள்ளத்தில் பிணமாகி சுருண்டு கிடந்தனர். இதனால் தீவிரவாதிகள் நானும் செத்து விட்டதாக நினைத்து சென்று விட்டனர்.

ஓரிரு நிமிடங்களில் கறுப்பு சாப்பாத்து அணிந்த ஒரு தீவிரவாதி திரும்பி வந்தான். மாணவர்கள் யாராவது உயிருடன் இருக்கிறார்களா? என்று நோட்டமிட்டபடி அவன் வந்தான். அவன் என் அருகிலும் வந்தான். அப்போது சாவு என்னை நெருங்கி விட்டதாக நினைத்தேன் என மாணவன் கண்ணீர் மல்க தெரிவித்தார்.(இ-5)

# பாடசாலை மாணவர்கள் பயணித்த பேருந்து மீது வெடிகுண்டுத்தாக்குதல்

## 20 மாணவர்கள் உட்பட 31 பேர் பலி

(சனா)

ஏமன் நாட்டில் தீவிரவாதிகளின நாசவேலைக்கு 20 பாடசாலை மாணவர்கள் உட்பட 31 பேர் பலியானார்கள். ஏமன் நாட்டில் ராடா நகரில் ஹவுதி பகுதியில் அல் கொய்தா தீவிரவாதிகள் 2 கார்களில் குண்டு வைத்திருந்தனர்.

மேலும் ஒரு பாடசாலை பேருந்திலும் குண்டு வைத்துள்ளனர்.

இதில் 20 மாணவர்கள் உட்பட 31 பேர் பலியானார்கள் . பாடசாலை மாணவர்கள் அனைவரும் 12 வயதுக்குட்பட்டவர்கள் ஆவார்கள். மேலும் இந்த சம்பவத்தில் பலருக்கு காயம் ஏற்பட்டுள்ளது.இதில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. (இ-5)

# கூட்டுறவு தின விழாவும் பிள்ளைகள் கௌரவிப்பும்

(யாழ்ப்பாணம்)

92 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழாவும் 5 ஆம்ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளைக் கௌரவித்தல் நிகழ்வும் நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடபிராந்திய மக்கள் வங்கி முகாமையாளர் மற்றும் யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் உட்பட பலர் விருந்தினர்களாக கலந்துகொள்ளவுள்ளனர். (இ

# கட்டைக்காடு காணிப் பிரச்சினை; இதுவரை தீர்வு எட்டப்படவில்லை

கட்டைக்காடு முள்ளியானில் வசிக்கின்ற கத்தோலிக்க மக்கள் எதிர்நோக்கியிருக்கின்ற காணிப் பிரச்சினை தொடர்பாக அப்பகுதி மக்கள் 160 பேர் கையொப்பமிட்டு அறிக்கையொன்றை அனுப்பியிருக்கின்றனர்.

அதில் தமது காணிப் பிரச்சினைக்கு இதுவரையும் உறுதியான தீர்வு எதுவும் எட்டப்படவில்லை என்றும் காணிப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக வெளியான செய்தி தவறானது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேவேளை பல குடும்பங்கள் காணி இல்லாது பெரும் இடர்களை எதிர்கொண்டு வருவதாகவும் இதற்குத் தீர்வு காண்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மட்டத்திலான கூட்டம் ஒன்றுக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதாகவும் தெரியவருகிறது.

அத்துடன் மேற்படி கையொப்பமிடப்பட்ட அறிக்கையின் பிரதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எஸ். பயங்கரவாதிகளின் புதிய ஆயுதம் "தேள் குண்டு"



ஈராக் சிரியாவில்செயறபடும்ஐ.எஸ். தீவிரவாதிகள் தங்களின் புதிய ஆயுதமாக 'தேள் குண்டுகளை' பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

இரண்டாம் நூற்றாண்டின் போது ஈராக்கின் ஹாத்ரா கோட்டை மீது ரோமானிய படை போர் தொடுத்து தாக்குதல் நடத்தியது. அப்போது ஈராக் படை வீரர்கள், பானையில் விஷ தேள்களை நிரப்பி ரோமானிய வீரர்கள் மீது வீசி அவர்களை விரட்டியடித்தனர். அந்தகால பாரம்பரய போர் முறையை ஐ.எஸ். தீவிர வாதிகள் இப்போது பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். காற்பந்து வடிவ குண் டில் கொடிய விஷம் நிறைந்த தேள்களை நிரப்பி அதை மக்கள் நெரிசல் மிகுந்த பகுதிகளில் தீவிர வாதிகள் வீசி செல்கின்றனர். அந்த குண்டு தரையில் விழுந்து உடைந்ததும் தேள்கள் நாலாபுறமும் சிதறி ஓடி பெரும் பீதியை ஏற்படுத்துகின்றன.

இதுகுறித்து ஈராக்கில் பணியாற்றும் நேட்டோ படை இரசாயன நிபுணர் கார்டன் கூறியதாவது: தேள்கள் வலிமைமிக்கவை. அவற்றை சில மைல் தொலைவு தூக்கி எறிந்தாலும் பாதிப்பு ஏற்படாது. எனவே 'தேள் குண்டுகள்' தரையில் விழுந்து சிதறியதும் சாரை சாரையாக தேள்கள் ஊர்ந்து செல்லும். தேள்கள் கொட்டுவதால் சிலர் உயிரிழக்கலாம். ஆனால் தீவிரவாதிகளின் முக்கிய நோக்கம். மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான். இது ஒரு முட்டாளதனமான, கொடூரமான உயிரி ஆயுத தாக்குதலாகும் என்று அவர் தெரிவித்தார். (இ-5)

# சிரியாவில் மோதல் 200 பேர் உயிரிழப்பு




சிரியாவில் அரசுப் படைகளுக்கும், அல்கொய்தா தீவிரவாதிகளுக்கும் இடையே நிகழ்ந்து வரும் மோதலில் கடந்த இருநாட்களில் மட்டும் 200 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இட்லிப் மாகாணத்தில் நேற்றும் நேற்று முன்தினமும் இரு நாட்களாக இரு தரப்புக்கும் இடையே கடும மோதல் நீடித்து வருகிறது. இதில் இரு தரப்பிலும் சேர்த்து இதுவரை 200 பேர்உயிரிழந்து விட்டனர். அரசுப்படையினர் இரு முக்கிய இடங்களை தீவிர வாதிக ளிடம் இழந்து விட்டனர்.

சிரியாவில் பஷர் அல் ஆசாத்தின் ஆட்சிக்கு எதிராக ஐ.எஸ். தீவிரவாதிகள் மட்டுமல் லாது வேறு பல தீவிரவாத அமைப்பினரும் சண்டையில் ஈடுபட்டு வருகி ன்றனர்.

2011ஆம்ஆண்டு மார்ச்மாதம்தொடங்கிய உள்நாட்டுப் போர் இப்போது வரை தொடர்கி றது. சன்னி முஸ்லிம்கள் அதிகம் உள்ள சிரியாவில், சிறுபான்மையாக உள்ள ஷியா பிரிவைச் சேர்ந்த ஆசாத் ஜனாதிபதியாக உள்ளதே போருக்கு முதல் காரணமாகும். இப்போரில் உயிரிழந்தோர எண்ணிக்கை சுமார் 3 இலட்சத்தை எட்டியுள்ளது. சுமார் ஒரு லடசம் பேரின் நிலை என்ன ஆனது என்பது இதுவரை தெரியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# படகு மீது கப்பல் மோதி எகிப்தில் 13பேர் மரணம்



குவைத் நாட்டைச் சேர்ந்த சரக்கு கப்பல் ஒன்று இத்தாலியில் இருந்து சவுதி அரேபியா நோக்கி சென்று கொண்டு இருந்தது. அந்தக் கப்பல் எகிப்தில் மத்தியதரைக் கடலையும், செங்கடலையும் இணைக்கிற சூயஸ் கால்வாயை கடந்து செங்கடலில் சென்று கொண்டிருந்தது. அப்போது எதிர்பாராத விதமாக எதிரே வந்த எகிப்து நாட்டின் மீன் பிடி படகு மீது கப்பல் பயங்கரமாக மோதியது. கப்பல் மோதிய வேகத்தில் அந்த படகு கவிழ்ந்தது.

நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற இந்த விபத்தில் படகில் இருந்த 13 எகிப்தியர்கள் கடலில் மூழ்கி உயிரிழந்தனர். விபத்துக்கு காரணமான கப்பலை எகிப்து இராணுவத்தினர் சபாகா துறைமுகத்திற்கு கொண்டு சென்று விசாரித்து வருகிறார்கள். சம்பவம் தொடர்பாக முறையான விசாரணைக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த செப்டெம்பர் மாதம் சூயஸ்கால்வாயின்வடக்குமுனையில 2 சரக்கு கப்பல்கள் நேருக்கு நேர் மோதக்கொண்டதும் இதனால் அங்கு கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்க்து. (இ-5)

## தலிபான்களை ஒடுக்க

# பாகிஸ்தானுக்கு அமெரிக்கா தொடர்ந்து உதவி வழங்கும்

## ஒபாமா உறுதி

(சென்னை)

தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கைகளில் பாகிஸ்தானுக்கு மேலும் உதவிகள் வழங்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா உறுதி அளித்துள்ளார்.

132 பாடசாலை மாணவர்களையும் 9 பாதுகாப்பு அதிகாரிகளையும் காவு வாங்கிய தலிபான்களின் இந்த திடீர் தாக்குதல் குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கூறுகையில், இந்த ஒழுக்கச் சீர்கேடான செயல், தீவிரவாதிகளுக்கு எதிராக பாகிஸ்தானுக்கு வோஷிங்டன் உதவும்.பாகிஸ்தான் மக்களுக்கு ஆதரவாக நாங்கள் நிற்கிறோம். தீவிரவாதத்தை எதிர்த்து போராடி பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை உருவாக்க பாகிஸ்தானுக்கு அமெரிக்கா துணை நிற்கும் என்று மீண்டும் வலியுறுத்தி கூறினார்.

பாதுகாப்பு உதவிக்காக கடந்த 2001 ஆம் ஆண்டு முதல் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா 18 பில்லியன் டொலரை வழங்கி வருகிறது. அதேபோல், ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல்களை நடத்தி நூற்றுக்கணக்கான தீவிர வாதிகளையும் அமெரிக்கா அழித்து வருகிறது. இருந்த போதிலும் இந்த தாக்குதலின் போது பொது மக்களும் பலியாவதால் பொது மக்களின் கோபத்திற்குள்ளாகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)




# இராணுவ தாக்குதலில் 9 தீவிரவாதிகள் பலி!



கொலம்பியாவில் கொரில்லா (மறைந்திருந்து தாக்குதல் நடத்துதல்) தீவிரவாதிகளுக்கு எதிராக அந்நாட்டு இராணுவத்தின் வான் வழித்தாக்குதலில் 9 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எண்ணெய் வளமிக்க கொலம்பியாவில் கொரில்லா தீவிரவாதிகள் தொடர்ந்து நாசவேலைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். தீவிரவாதிகளுக்கும், அரசுக்கும் இடையே நடந்த பேச்சுவார்த்தையில தீர்வு எட்டப்படவில்லை. தீவிரவாதிகளின் தாக்குதலில் இதுவரை 2 இலட்சத்து 20 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். இதனையடுத்து கொலம்பிய இராணுவம் தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கையை தீவிரப்படுத்தி உள்ளது.

இந்தநிலையில் தீவிரவாதிகளின் ஆதிக்கம் நிறைந்த மேடா மாகாணத்தில் உள்ள வனப்பகுதயில் நேற்று முன்தினம் இராணுவம் வான்வழி தாக்குதல் நடத்தியது. விமானம் மற்றும் ஹெலிகொப்டர்கள் மூலம் நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் கொரில்லா தீவிரவாதிகள் 9 பேர் கொல்லப்பட்டனர் என தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

# அதிகம் தேடப்பட்ட மனிதர் நடிகர் ராபின் வில்லியம்ஸ்



கூகுள் நிறுவன்ம் ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும், தனது தேடல் இயந்திரத்தில் அதிகம் தேடப்பட்ட விடயங்களையும், மனிதர்களையும் பட்டியல் வெளியிடுவது வழக்கம். அந்த வகையில், இந்த ஆண்டிற்கான பட்டியலை அந்நிறுவனத்தின் துணைத் தலைவர் அமித் ஷிங்கல் தனது வலைப்பக்கத்தில் வெளியிட்டார்.

அதில், ஒஸ்கார் விருது வென்ற அமெரிக்க நடிகர் ராபின் வில் லியம்ஸ் முதலிடத்தில் உள்ளார். அவரது மரணம் தொடர்பான செய்தி இந்த ஆண்டு உலகம் முழுவதும் அதிகம் தேடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து உலகக் கோப்பை காற்பந்து, எபோலா இரண்டும் இந்த வருடத்தில் அதிகம் தேடப்பட்டுள்ளன.

உயர்ந்த ஆற்றலும், விறுவிறுப்பான மேம்பாடும் கொண்ட ராபின் வில்லியம்ஸ், நிலைத்து நிற்கும் நிகழ்ச்சிகள், பல வெற்றி பெற்ற தொலைக்காட்சித் தொடர்கள், அனைத்து நாட்டு மக்களும ரசித்த 'ஜீமான்ஜி' உட்பட பல்வேறு ஹொலிவுட் திரைப்படங்கள் மூலம் மிகப் பிரபலமாக இருந்தவர்.

உலகையே தன் திறமையால் சிரிக்க வைத்த ராபின் வில்லியம்ஸ் கடந்த ஒகஸ்ட் 11 ஆம் திகதி கலிபோர்னியாவில் உள்ள அவரது வீட்டில் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். அவரது இறப்புக்கு உணர்ச்சி பெருக்கோடு உலகம் முழுவதும் உள்ள ரசிகர்கள் அஞ்சலி செலுத்தினர்.

மலேசியன் ஏர்லைன்ஸ், உக்ரைன் மற்றும் அனிமேஷன் படமான 'ப்ரோஜன்', ஐஸ் பக்கெட் சேலஞ்ஜ் போன்றவையும் கூகுள் தேடலில் முதல் பத்து இடங்களில் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 15 வருட காலமாக வீதி திருத்தம் இடம்பெறவில்லை

முல்லைத்தீவு மாவட்ட ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மாங்குளம் கிராம சேவையாளர் பிரிவின் பழைய ஆயிரம் குடியிருப்பு திட்ட வீதி கடந்த 15 வருடகாலமாக திருத்தம் செய்யப்படாத நிலையில் மழைகாலங்களில் பயணிக்க முடியாது மழை நீர் ஆங்காங்கே தேங்கி நிற்பதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் தற்போது 30 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இக்குடும்பங்களின் அன்றாட தேவைகள் அனைத்துக்குமான போக்குவரத்துப் பாதையாக அமைந்துள்ளது.

இப்பாதையில் உடைந்த நிலையில் காணப்படுகின்ற பாலத்தினூடாக மழைகாலங்களில் மூன்று அடிக்கு மேலாக மழைநீர் வீதியைக் குறுக்கறுத்து பாயும் நிலை காணப்படுகின்றது.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு எதிர்வரும் ஆண்டில் இவ் வீதியைத் திருத்தித் தருமாறு பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.




அத்துடன் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவும் இணைந்து புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் கீழ் இயங்கி வருகின்றது.

இந்நிலையில் ஒட்டுசுட்டானுக்கென தனியான பிரதேசசபை அமைக்கப்படாமையால் புதுக்குடியிருப்பு பிரதேச சபையினர் புதுக்குடியிருப்பில் மட்டும் பாதைகளை செப்பனிடுகின்றார்களா என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

ஒட்டுசுட்டான் மற்றும் புதுக்குடியிருப்பு ஆகியவற்றிற்கு தனித்தனியாக பிரதேச சபையினை பிரித்து தருமாறு பல தடவை மக்களால் கோரப்பட்டும் அபிவிருத்தி குழு கூட்டத்தில் சுமுகமான தீர்வு எட்டப்பட்டும் அதற்கான ஏற்பாடுகள் நடைபெறவில்லையென அப்பகுதி மக்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

புதுக்குடியிருப்பு பிரதேசசபையானது இதுவரை காலமும் தவிசாளர் இன்றி இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# விற்பனை உரிமம் பெற்றுக்கொள்ளாமல் மதுபான நிலையம் இயங்கி வருகின்றது

**அகற்றாமைக்கான காரணம் என்ன மன்னார் நகரசபை கூட்டத்தில் கேள்வி**

(மன்னார்)

மன்னார், பெரிய கடை பகுதியில் அனுமதியின்றி இயங்கிக்கொண்டிருக்கும் மதுபான நிலையத்தை அகற்றாமைக்கு காரணம் என்ன? என மன்னார் நகர சபை உறுப்பினர் என்.நகுசீன், கேள்வி எழுப்பினார்.

மன்னார், நகர சபையின் இவ்வருடத்துக்கான இறுதிக்கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. இக்கூட்டத்தின் போதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

மன்னார் நகர சபையிடம் விற்பனை உரிமம் பெறுவதற்கான அனுமதியை பெற்றுக்கொள்ளாத நிலையில் குறித்த மதுபான விற்பனை நிலையம் ஒரு வருடமாக இயங்கி வருகின்றது. இதனால் அப்பகுதி மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருவதாக தொடர்ச்சியாக எங்களிடம் முறையிட்டு வருகின்றனர்.

எனினும் மன்னார் நகர சபை, இந்த மதுபான விற்பனை நிலையத்தை அகற்ற இதுவரை ஏன் நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை என மன்னார் நகர சபை உறுப்பினர் என்.நகுசீன் மேலும் கேள்வி எழுப்பினார்.

மன்னார் நகர சபை இவ்விடயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்த மன்னார் நகர சபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம், குறித்த மதுபான விற்பனை நிலையத்துக்கு மன்னார், நகர சபை எவ்வித அனுமதியையும் வழங்கவில்லை. ஆனால் அவர்கள் ஏனைய சகல அனுமதியையும் பெற்றுள்ளனர். அப்பகுதி மக்களின் ஒற்றுமையின்மையினால் நடவடிக்கை எதனையும் மேற்கொள்ள முடியவில்லை எனத் தெரிவித்தார்.

அரசியல் செல்வாக்குடனும் பொலிஸாரின் ஆதரவுடனும் குறித்த மதுபான விற்பனை நிலையம் இயங்கி வருகின்றது. இதனால் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (2)

# எட்டு மீனவர் சங்கங்கள் ஒன்றிணைந்து துறைமுகப்பகுதியில் நடத்தும் மீன்சந்தை

(பூநகரி)

ஐரோப்பியஒன்றியம் மற்றும் ZOA நிறுவனத்தின் அனுசரணையுடன் பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் நாச்சிக்குடா கடற்கரைப் பிரதேசத்திலுள்ள 8 மீனவர் சங்கங்கள் ஒன்றிணைந்து நாச்சிக்குடா புனித யாகப்பர் துறைமுகப் பகுதியில் மீன் சந்தையொன்று நடைபெற்று வருவதாக மேற்படி கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தலைவர் யோ. பிரான்சிஸ் அறிவித்துள்ளார். இச்சந்தையின் குமுழமுனை, அன்புபுரம், கிருஷ்ணபுரம், இரணைமாதா நகர், யாகப்பர், நாச்சிக்குடா மத்தி, புனித அன்னை வேளாங்கன்னி, நல்லாயன் ஆகிய கடற்றொழிலாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் மீன்பிடி தொழிலாளர்கள் கடல் உணவுகளை சந்தைப்படுத்தி வருகின்றனர்.

இச்சந்தையில் உள்ள கடல் உணவு வகைகளை வாடிக்கையாளர்கள் நேரடியாக விலை கூறல் முறையில் கொள்வனவு செய்யமுடியுமென அவர் தெரிவித்தள்ளார்.

இக்கடல் உணவுகளை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் ஆகிய பிற மாவட்டங்களைச்சேர்ந்த கடற்றொழிலாளர்கள் கொள்வனவு செய்கின்றனர்.

ஆதலால் அயல் மாவட்டத்திலுள்ள வாடிக்கையாளர்களும் எமது சந்தை நடவடிக்கைகளில் கலந்து கொண்டு கொள்வனவுகளை நேரடியாக மேற்கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)




# மன்னார் நகர சபையின் பட்ஜெட் நிறைவேற்றம்

மன்னார் நகரசபையின் 2015 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக மன்னார் நகரசபை உறுப்பினர் இ.குமரேஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

மன்னார் நகரசபையின் 2015 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவு திட்டமானது கடந்த 3 ஆம் திகதி நடைபெற்ற விசேட சபைக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏகமனதான தீர்மானத்துக்கமைய மக்கள் பார்வைக்கு உட்படுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மக்கள் பார்வையின் போது பெறப்பட்ட கருத்துக்கள் மற்றும் அபிப்பிராயங்களுடன், வரவு-செலவு திட்டத்தின் இறுதி வாசிப்பு கடந்த 15ஆம் திகதி இடம்பெற்ற டிசெம்பர் மாதத்துக்கான சபைக்கூட்டத்தில் மன்னார் நகரசபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசத்தினால் முன்வைக்கப்பட்டது.

சபையின் தலைவர் உட்பட உப தலைவர், செயலாளர் மற்றும் சபையின் சகல உறுப்பினர்களும் கலந்து கொண்டு வரவு - செலவு திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட சில அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் இதர விடயங்கள் விவாதிக்கப்பட்டு சில திருத்தங்களுடன் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.


மேலும் வரவு - செலவுத் திட்டத்தில் 2015ஆம் ஆண்டுக்கான மொத்த வருமானமாக 92,195, 630.00 ரூபாவும் மொத்தச் செலவீனமாக 92,193,780.00 ரூபாவும் மிகையாக 1,850.00 ரூபாய் எனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என நகரசபை உறுப்பினர் இ.குமரேஸ் மேலும் தெரிவித்தார். (2)

## சத்தியத்தின் வழியில் பணியாற்றுவோம் வ.மா.சபை உறுப்பினர் ரவிகரன்

யாழ்ப்பாண ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டதில் வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது நடத்த ப்பட்ட தாக்குதலுக்கு வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்

இக் கூட்டத்தில் மனித நாகரிகங்களை தூக்கிவீசியவாறு நடத்தப்பட்ட இத்தாக்குதலானது வன்முறையைத் தூண்டும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட ஒரு காட்டுமிராண்டி நடவடிக்கை என்றும் கூறியுள்ளார்.

எத்தகைய அச்சுறுத்தல்கள் மேற்கொள்ளப்படினும் எங்கள் மக்களின் உரிமைகளைக் காப்பாற்ற சத்தியத்தின் வழியில் நின்று தொடர்ந்து பணியாற்றுவோம் என்றார். (2-250)





வவுனியா தமிழ்த் சங்கத்தின் அனுசரணையில் இடம்பெற்ற நோர்வே விஜேந்திரனின் பசுமை தேடும் பறவைகள் நூல் மற்றும் இறுவெட்டு வெளியீட்டு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் முதற்பிரதிகளை வவுனியா [illegible] உரிமையாளர் செந்தில், நூலாசிரியரின் தாயாரிடமிருந்து முதற்பிரதிகளைப் பெற்றுக் கொள்வதையும் சபையினரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வீரதீர பராக்கிரமன் யார்?



மன்னர் சுதட்சிணர் ஆட்சிக் காலத்தில் நாட்டில் சுபிட்சம் நிலவியது.

மக்கள் மனநிறைவுடன் வாழ்க்கை நடத்தினர்.

ஆனால், மன்னருக்கு வாரிசு இலலாதது ஒரு பெருங்குறையாக இருந்தது.

தனக்குப் பிறகு ராஜ்யத்தை ஆளபோவது யார் என்று பெருங் கவலையில் மூழ்கிய மன்னர் ஒருநாள் தன் முதன் மந்திரி கங்காதரரை அழைத்து அதைப் பற்றி ஆலோசித்தார்.

“மந்திரியாரே! இந்த ராஜ்யத்தை நான் ஒழுங்காக நிர்வாகம் செய்து வருகிறேன்.

ஆனால், எனக்குப் பிறகு யார் ஆட்சிப் பொறுப்பை ஏற்பார்கள் என்பது எனக்குப் பெரும் கவலையை அளிக்கிறது.

எனக்குப் பிறகு சிம்மாசனத்தில் அமரப்போவது யார் என்பதை இப்போதே நாம் தீர்மானித்தால் நல்லது.

ராணியைக் கலந்து ஆலோசித்தால் அவள் தன்னுடைய உறவினர்களின் பிள்ளைகள் யாரையாவது தத்து எடுத்துக் கொள்ளுமாறு சொல்கிறாள்.

அதில் எனக்கு விருப்பமில்லை. எனக்குப் பிறகு முடிசூட்டிக் கொள்பவன் வீரதீரப் பராக்கிரமனாக இருக்க வேண்டும்.

அப்படிப்பட்ட வீரனை நாம் எப்படித் தேடுவது?” என்றார்.

அதற்கு மந்திரி, “பிரபு! எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது.

நமது தலைநகரில் உள்ள குரு குலத்தில் வித்யாசாகர் அவர்கள் பல ஷத்திரிய மாணவர்களுக்கு வில்வித்தை, வாட்போர், மல்யுத்தம் ஆகியவற்றையும், ராஜாங்க நிர்வாகத்தையும், போர்த் தந்திரங்களையும் கற்பித்து வருகிறார்.

அவரிடம் சென்றால், நம் ராஜ்யத்தின் எதிர்கால வாரிசை நாம் தேர்ந்தெடுக்கலாம்” என்றார்.

மன்னருக்கு அது சரியான யோசனை என்று தோன்றவே, இருவரும் மறுநாளே குருகுலத் திற் குச் சென்று, வித்யாசாகரை சந்தித்து, தாங்கள் வந்த காரியத்தைப் பற்றிக் கூறினர்.

அதற்கு குரு வித்யாசாகர், “மகாராஜா! நீங்கள் சரியான சமயத்தில்தான் வந்திருக்கிறீர்கள்.

விஜயதசமியை யொட்டி, குரு குலத்தில் பல்வேறு போட்டிகள் நடைபெற உள்ளன.

அந்தப் போட்டிகளைப் பார்வை இட்டால, உங்களுக்குத் தேவையான வீரனை நீங்களே தேர்வு செய்து கொள்ள முடியும்” என்றார்.

மறுநாள், போட்டியில் பங்கேற்ற மூன்று பேர் நீண்ட தூரம் பயணம் செல்ல வேண்டும் என குரு உத்தரவிட்டார்.

இதன் படி தங்கள் பயணத்தைத் தொடங்கிய மூன்று பேரும் ஒரு மாதப் பயணத்திற்குப்பின் குரு குலத்திற்குத் திரும்பினர்.

அவர்கள் திரும்பி வந்தபோது, குரு குலத்தில் குரு வித்யாசாகருடன், மன்னரும், மந்திரியும் அமர்ந்திருந்தனர்.

அவர்களை வரவேற்ற குரு, மூவரையும் ஒருவர் பின் ஒரு வராக தங்கள் பயண அனுபவங்களைக் கூறும்படி சொன்னார்.

முதலில் முன்வந்த வில் வித்தை நிபுணனான ஜெயன் “குருவே! நான் வடக்கு திசையை நோக்கிப் பயணமானேன்.

வழியில் எனக்கு எந்தவிதத் தடங்கலும் ஏற்படவில்லை.

சென்ற இடங்களிலெல்லாம் மக்கள மகிழ்ச்சியுடன் தென்பட்டனர்.



ஆனால், நம் ராஜ்யத்து எல்லையில் உள்ள காட்டுப்பிரதேசத்தில் நான் கண்ட காட்சி என்னைத் திடுக்கிடச் செய்தது. அங்கு சில இளைஞர்கள் ரகசியமாக ஆயுதப் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தனர்.

மறைந்திருந்து தாக்குவது, அரசாங்க ஆயுதங்களைத் திருடுவது, ரகசிய ஆயுதத் தயாரிப்பு ஆகியவற்றில் ஈடு பட்டிருந்த அந்த இளைஞர்கள் பக்கத்து ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள்.

வறுமையில் வாடும் அந்த இளைஞர்களை யாரோ ஒரு வன் அடிமைப்படுத்தி அவ்வாறு ஆயுதப் பயிற்சி அளிப்பதைப் பார்த்தேன். நமது இராச்சியத்தில் இவ்வாறு தீய சக்திகள் உருவாவதைப் பொறுக்க முடியாமல் இளைஞர்களுக்கு ஆயுதப்பயிற்சி அளித்து அவர்களைத் தவறான வழியில் ஈடுபடுத்த முயன்ற பயிற்சியாளனை அம்பெய்திக்கொன்று விட்டேன்.

(தொடரும்)




- 1271 - குப்லாய் கான் தனது சீனப் பேரரசின் பெயரை “யுவான்” என மாற்றிக் கொண்டான். யுவான் வம்சம் ஆரம்பமானது.
- 1642 - ஏபெல் டாஸ்மான் நியூசிலாந்தில் காலடி பதித்த முதலாவது ஐரோப்பியரானார்.
- 1787 - நியூ ஜெர்சி ஐக்கிய அமெரிக்காவில் 3ஆவது மாநிலமாக இணைந்தது.
- 1911 - சேர் பொன்னம்பலம் இராமநாதன் இலங்கையின் சட்டசபைக்கு தேசியப் பிரதிநிதியாகத் தெரிவானார்.
- 1926 - துருக்கி கிரிகோரியன் நாட்காட்டிக்கு மாறியது.
- 1935 - இலங்கை சமசமாஜக் கட்சி என்ற இடதுசாரிக் கட்சி இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1941 - ஹொங்கொங்கின் பிரித்தானிய ஆளுனர் சரணடைய மறுத்ததைத் தொடர்ந்து ஜப்பான் ஹொங்கொங் மீது படையெடுத்தது.
- 1961 - இந்தோனீசியா டச்சு நியூ கினியை ஆக்கிரமித்தது.
- 1966 - சனி கோளின் சந்திரன் எப்பிமேத்தியஸ் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1973 - சோவியத் விண்கலம் சோயூஸ் 13 வலன்டீன் லேபெடெவ், பியோத்தர் கிளீமுக் ஆகியோருடன் விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 1987 - லரீ வோல் தனது பேர்ள் கணினி நிரலாக்க மொழியை வெளியிட்டார்.
- 1997 - எச்.டி.எம்.எல் 4.0 வெளியிடப்பட்டது.
- 2012 - தமிழ் விக்கிப்பீடியாவில் 50,000 கட்டுரை எழுதப்பட்டது

பிறப்புகள்

- 1822 - ஆறுமுக நாவலர், ஈழத்தின் ஆன்மீகவாதி, தமிழ் உரைநடையின் முன்னோடி (இ. 1879)
- 1856 - ஜெ. ஜெ. தாம்சன், நோபல் பரிசு பெற்ற ஆங்கில இயற்பியலாளர் (இ. 1940)
- 1878 - ஜோசப் ஸ்டாலின், சோவியத் தலைவர் (இ. 1953)
- 1932 - நா. பார்த்தசாரதி, தமிழ் எழுத்தாளர் (இ. 1987)
- 1946 - நெல்லை க. பேரன், ஈழத்து எழுத்தாளர் (இ. 1991)

இறப்புகள்

- [illegible] இந்தியாவுக்கான [illegible] (பி. 1748)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருவாச்சி காவியம்

## வைரமுத்து- 24

நம்மகூட வம்பிழுக்க அருவா கம்போட வாங்கடான்னு பெரிய மூக்கி மொதல கம்பட்டிக்கு ஆள் சொல்லி விட்டிருக்காளாம்.

அந்தூருக்காரங்க இந்தூருக்கு வந்து கம்பு சுத்தி, வெள்ள வேட்டியோட வீடு போய்ச்சேரவா? நான் சும்மா இருப்பனா?

நீ செய்றதச் செஞ்சுக்கடா மகனே! அனா எதுலயும் ஒரு நிதானம் இருக்கட்டும்.

தகப்பன்கிட்ட நெலமையச் சொல்லி யோசனையும் கேட்டுக்கிட்ட கட்டையன், பன்னியான் பேரன், சலம்பல் பாண்டி, ஒலக்கையன் மூணு பேரையும் கூப்பிட்டான்.

ஆடு மாடுக அடங்கி சனங்கள்ளாம் ஒறங்கி காவல் நாய்கூடக் கடைசியாகக் கொலச்சிட்டு கண்ணு மூடப்போன பின் சாமத்துல பஞ்சாயத்து நடக்கப் போற அரச மரத்தடி மந்தையில அங்கங்க குழியத் தோண்டி வெட்டருவா வேல்கம்ப உள்ளவச்சுப் பொதச்சு மண்ணத் தள்ளி மறைக்கிறாங்க கட்டையன் கையாளுக.

அரசங்கௌ இடுக்கு வழியா?

இதப் பாத்துக்கிட்டேயிருந்து பயந்து தேயுது நெலா.

விடிஞ்சா பஞ்சாயத்து ஊரே ஒறங்குது.

எனக்கும் தூக்கம் வருதுன்னு சந்து பொந்துக்கள்ல புகுந்து சத்தமும் ஒறங்கிப் போச்சு.

முழுச்சுக்கிட்டிருக்கிறது காடா வெளக்கும் கருவாச்சியும் மட்டும்தான் என்னமோ சோட்டுக்காரிகிட்ட ஒப்பிக்கிற மாதிரி காடா வெளக்கு கூடப் பேசுறா கருவாச்சி.

எம் பொழப்பு ஏன் இப்படி ஆகிப் போச்சு காடாவெளக்கே? என்ன குத்தத்துக்கு நான் இப்படிக் குத்துயிரும் கொல உயிருமாக் கெடக்கேன்?

என்ன பாவம் பண்ணினேன்?


எவ சோத்துல மண்ணள்ளிப் போட்டேன்?

கறிய மட்டும் எடுத்துகிட்டு நாய் எலும்பத் துப்புற மாதிரி துப்பிட்டானே என்னிய.

செத்துப் போடீன்னு சொன்னவன் கிட்ட எப்பிடிச் சேந்து வாழ முடியும்?

பஞ்சாயத்துல எப்பிடியும் அத்து விட்றப் போறாக.

அதுக்குப் பிறகு என்ன பண்ணலாம்? கல்யாணச் சேலயக் கழுத்துல சுத்தி நான்டுக்கிட்டுச் செத்துப்போகலாம்.



இல்ல அரளி வெதைய அரைச்சுக் குடிச்சுட்டுப் பழைய சீலயப் பொத்திப் படுத்துக்கிரலாம்.

பொம்பளைக பொதுவா இதைத் தான செய்வாக!

அத நானும் செய்யணுமா? செய்ய மாட்டேன் காடாவெளக்கே.

ஒத்தத் திரிய வச்சுகிட்டு ஊதக் காத்த எதித்து நிக்கிற நீயி. சீமத் தண்ணி கடைசிச் சொட்டு வத்திப் போனாலும் திரியில ஊறியிருக்கிற மிச்சத்த வச்சு உசுர் புடிச்சு நிக்கப் பாக்குற.

ஒனக்கு கொறஞ்சவளா நானு? ஒவ்வொரு பெறவிக்கும் ஒரு காரணமிருக்கா இல்லையா? எம் பெறவிக்கு என்ன காரணம்னு தெரிஞ்சுட்டுப் போயிடறேன்.

சாவு என்னைக்கோ ஒரு நாளைக்கு நம்மளத் தேடி வரத்தான் போகுது.

அது வாரப்ப வரட்டும் பாத்திருவோம்; வான்னு கேட்டிருவோம்.

இதுவரைக்கும் கொழகொழன்னு இருந்த மனசு வாங்குன அடியில லேசாக் கெட்டிப்பட்டிருக்கு; எல்லாம் நல்லதுக்குத்தான்.

வரணுங்கிற துன்பம் வந்துதான தீரும்.

ஒல கொதிக்காம அரிசி வேகுமா? ஒவ்வொரு பொம்பள பொழப்பும் ஒரு ஒலதான்.

இப்ப உன் ஒல கொதிக்குது; கொதிக்கட்டும்.

அவ ஒரு முடிவுக்கு வந்துட்டா.

இப்பக் காடா வெளக்கும் ஒறங்கிப் போச்சு; அவ மட்டும் முழிச்சிருக்கா.

(தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

# கவலைகள் இன்றி வாழ்தல்!

## ஆன்மீகம் 108

...நீங்கள் உங்கள் எண்ணங்களை சரி செய்து கொள்வதற்காகத் தனியாகவே நேரம் செலவிட வேண்டியதில்லை . அதை விழிப்புணர்வே உங்களுக்காகச் செய்து விடும். உங்களுடைய சிந்தனை அமைப்பு தானாகவே மாற்றியமைக்கப்பட்டுவிடும். விழிப்புணர்வின் ஆற்றல் இவ்வாறு உங்களுடைய சிந்திக்கும் முறையே நேர்மறை சக்தியாக மாற்றியமைக்கும் வல்லமை பெற்றது.

வலிமை உணர்ந்தால்தான் நமது ஆசைகள் நிறைவேறியதாக நாம் எப்படியோ நம்ப ஆரம்பித்து விடுகிறோம். வலிக்கும் வரை ஓடுகிறோம். வேலியில் முட்டிக் கொள்ளும் வரை ஓடுகிறோம். வேலியைப் பற்றிய கருத்து ஆழமாகப் பதிந்து விட்டதால் வேலி என்று ஒன்றும் கிடையாது. எல்லை என்று ஒன்றும் கிடையாது; என்று சொன்னால்கூட நாம் நம்பத் தயாராக இல்லை. நாம் ஓடி எப்படியோ ஒரு வேலியில் இடித்துக்கொண்டு வலியை உணர்கிறோம்.

பிறகு வலியை உணர்ந்த திருப்தியில் நிறுத்திவிடுகிறோம். பிறகு நமது ஆசை தீர்ந்ததாக நினைக்கிறோம். நாம் எப்பொழுதுமே பொலிவதற்கு தகுதி பெற வேண்டுமானால் மன உளைச்சலையும் கவலையையும் கடந்து செல்ல வேண்டும் என்று எண்ணுகிறோம். நாம் கவலைக்காகவும் வலிக்காகவும் முடிவுற்ற தயாரிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

மேலும் சில மனிதர்கள் இருக்கிறார்கள்... அவர்கள் தானாகவே கவலைகளை உருவாக்கிக் கொள்வார்கள். பிறகு அதை மறப்பதற்காகக் குடிப்பார்கள்! இது இன்று மிகவும் சாதாரணமாகிவிட்டது. அது எப்படி இருக்கிறதென்றால் ஒரு பன்றி தான் இருக்குமிடத்தின் சகதியையும் நாற்றத்தையும் தாங்க முடியாமல் அதனுள்ளே மூக்கை நுழைத்துக் கொண்டதாம். குடிப்பதன் மூலம் உங்கள் கவலைகளை நீங்கள் வென்று விட்டதாக நினைக்கிறீர்கள். ஆனால் உண்மையில் நீங்கள் இன்னும் வேகமாக அதனுள் மூழ்குகிறீர்கள்.



நாம் எதையோ நினைத்து ஆனால் நீங்களே முரண்பாடான விளைவுகளை உருவாக்கி இன்னும் அதிகமான கவலைகளுக்கு ஆளாகிறோம். நமக்குத்தெரியாவிடினும் இதுவே தலையாய பிரச்சினை.

ஒரு சின்னக் கதை...

ஒரு மனிதரின் வீட்டுக்கு வேண்டாத விருந்தாளி ஒருவர் வந்தார். அந்த மனிதர் விருந்தாளிக்கு ஒரு காபி கொண்டு வரும்படி சமயலறையில் இருந்த தன் மனைவியை நோக்கிக் கத்தினார். மனைவியோ பதிலுக்கு வீட்டில் காபியும் இல்லை கடையில் சென்று வாங்குவதற்கு பணமும் இல்லை என்று உள்ளேயிருந்து திருப்பிக் கத்தினாள். கணவன் கோபமடைந்து அவளைத் திட்டத் தொடங்கினான். இறுதியில் காபி கொடுக்க முடியாமல் போனதற்காக அவளுக்கு ஒரு அறையும் கொடுத்தான். மனைவி அழ ஆரம்பித்தாள். நடந்தவற்ற்றைப் பார்த்துக் கொண்டிருந்த விருந்தாளி மெதுவாக எழுந்து சென்றுவிட்டார். கண்களைத் துடைத்துக் கொண்ட மனைவி வெற்றிக் களிப்புடன் கணவனிடம் சொன்னாள் பார்த்தீர்களா? நான் அழுவதுபோல் நடித்து அவரை வெளியே அனுப்பி விட்டேன்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை வங்கியின் 75 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்ட **துருமித்துரு** மரம் நாட்டு விழாவில் மானிப்பாய் கிளையினர் அண்மையில் ஆனைக்கோட்டை சென்.ஆன்ஸ் வித்தியாலயத்தில் பயன்தரு மரங்களை நாட்டிய போது...



யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட மாணவர் ஒன்றியத்தினால் **இயற்கை சமனிலை பேணல்** மரநடுகை செயற்றிட்டம் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது கோண்டாவில் பிரதேச வைத்தியசாலையில் மரநடுகை செயற்றிட்டம் இடம் பெற்ற போது விவசாய பீட மாணவரொருவரால் பயன்தரு மரம் நாட்டி வைக்கப்படுவதை படத்தில் காணலாம்.





திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளியில் இருந்து 2015 ஆம் ஆண்டு பாடசாலைகளுக்கு செல்லும் சிறார்களின் ஒன்றுகூடலும் கலைநிகழ்வும் அண்மையில் இடம்பெற்ற போது...



அண்மையில் யாழ்.கோணாந் தோட்டம் கலைக்கூடத்தில் **அம்பா** ஆவணப்படத்தின் பாடல் பதிவு செய்யப்பட்டபோது கலைமாமணி கிறகரி கிறிஸ்தோபர் மங்கல விளக்கேற்றுவதையும் அருட்சகோதரன் சசிகரன் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.



வடமராட்சி தெற்கு மேற்கு வதிரி பொது நூலகத்தினால் நடத்தப்பட்ட தேசிய வாசிப்பு மாத நிகழ்வில் வதிரி முன்பள்ளியில் பயன்தரு மரங்கள் வழங்கப்பட்ட போது....

(படம்:- கரணவாய் செய்தியாளர்)







### நிழல்கள்

யாழ்.திருமறைக்கலாமன்றத்தின் கலைத்தூது அழகியற் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் யாழ். கலைத்தூது கலையகத்தில் நடைபெற்ற போது (படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையின் வதிரி பொது நூலகத்தினால் நடத்தப்பட்ட தேசிய வாசிப்பு மாத நிகழ்வு வரிசையில் வடமராட்சி மகளிர் கல்லூரியில் நூல்களின் கண்காட்சி மற்றும் சிற்ப ஓவியக் கண்காட்சி அண்மையில் இடம்பெற்ற போது... (படங்கள்:- கரணவாய் செய்தியாளர்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹக்கீம் ஆதரவு குறித்து அலட்டிக்கொள்ளவில்லை

## லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

**அமைச்சர் ஹக்கீமின் ஆதரவு தொடர்பாக அலட்டிக் கொள்ளவில்லை. ஏனென்றால் முஸ்லிம்களின் ஆதரவு பொது எதிரணியினருக்கே உள்ளது என்று கூறும் கண்டி மாவட்ட ஐ.தே.க.பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல ஹக்கீம் பிரதிநிதித்துவப்படுத்துவது முஸ்லிம் சமூகத்தையா? அல்லது வேறு யாரையுமா? என்பதை அவர் பகிரங்கப்படுத்த வேண்டுமென்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.**



இது தொடர்பாக லக்ஸ்மன் கிரியெல்ல எம்பி. மேலும் தெரிவிக்கையில்,

தான் சார்ந்த சமூகத்தின் மீது அக்கறை இல்லாதவர்தான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம். இன்று அவர் முஸ்லிம் சமூகத்தினரால் நிராகரிக்கப்பட்டு விட்டார்.

மதில் மேல் பூனை போல் எங்கு அதிகம் கிடைக்கும் பாயலாம் என்ற கொள்கையே ஹக்கீமின் கொள்கையாகும். நூற்றுக்கு 75 வீத முஸ்லிம்கள் பொது எதிரணியினரையே ஆதரிக்கின்றனர். கடந்த காலங்களில் 200 முஸ்லிம்கள் பள்ளிவாசல்கள் உடைக்கப்பட்டன. இது தொடர்பான அறிக்கையை ஐ.நா. சபைக்கு ஹக்கீம் கையளித்தார். அத்தோடு அளுத்கமையில் முஸ்லிமகளுக்கு எதிராக நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக ஆணைக்குழு அமைக்கப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என அரசை வலியுறுத்தினார். ஆனால் இன்று வரை இது தொடர்பில் எதுவுமே இடம் பெறவில்லை. எனவே முஸ்லிம்கள் மேலும் மேலும் ஹக்கீமை நம்பத் தயாரில்லை. நிராகரித்து விடனர்.

அத்தோடு இவரது நடவடிக்கைகளைப் பார்த்தால் அவர் முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதிப்படுத்துகின்றாரா? அல்ல வேறு எவரையாவது பிரதிநிதித்துவப்படுத்துகின்றாரா? என்ற கேள்வியும் எழுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## கண்டியிலிருந்து யாழுக்கு கடுகதி ரயில்

கண்டியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு கடுகதி ரயில்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ரயில் போக்குவரத்து அதிகாரி எல்.ஏ.ஆர். ரத்னாயக்க தெரிவித்தார்.

ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் அதிகாலை 3.55க்கு கண்டியிலிருந்தும், ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்தும் இந்த ரயில் தனது பயணத்தை ஆரம்பிக்கும்.

பயணிகளின் தேவையை கவனத்தில் கொண்டு பாடசாலை விடுமுறை காலம் நிறைவடைந்ததன் பின்னரும் இந்த சேவையை நடத்துவதற்கு ஆராய்வதாகவும் எல்.ஏ.ஆர்.ரத்னாயக்க தெரிவித்தார். (இ-5)

## கூடுதலான ஆசனங்களைப் பெறும் கட்சிக்கு பிரதமர் பதவி வழங்கப்படும்

பொதுத் தேர்தலில் கூடுதலான ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளும் கட்சிக்கு பிரதமர் பதவி வழங்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் பின்னர் பொதுத் தேர்தல் நடைபெறும். பொதுத் தேர்தலில் அதிக ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளும் கட்சிக்கு பிரதமர் பதவி வழங்கப்படும். அதற்கு அடுத்தபடியாக ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளும் கட்சிக்கு பிரதி பிரதமர் பதவி வழங்கப்படும்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர், அரசியல் சாசனத் திருத்தங்களின் ஊடாக பிரதிப்பிரதமர் பதவி உருவாக்கப்படும் என ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். வில்கமுவ பிரதேசத்தில் நேற்று மாலை நடைபெற்ற தேர்தல் பிரசாரக கூட்டத்தில் இதனை தெரிவித்தார். (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 160 | 140 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 450 | 500 | 500 |
| தக்காளி | 180 | 180 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 40 | 50 |
| கோவா | 120 | 140 | 160 |
| கரட் | 100 | 180 | 240 |
| பூசணி | 35 | 40 | 50 |
| புடோல் | 100 | 140 | 120 |
| வாழைக்காய் | 70 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 60-100 | 100 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 | 120 |
| பாகற்காய் | 140 | 350 | 200 |
| வெண்டிக்காய் | 140 | 140 | 120 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 80 |
| பயற்றங்காய் | 180-200 | 180 | 200 |
| லீக்ஸ் | 140 | 260 | 300 |
| பீற்றூட் | 100 | 180 | 200 |
| கறிமிளகாய் | 180 | 350 | 280 |
| முருங்கைக்காய் | — | 500 | — |
| போஞ்சி | 140 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 120-140 | 140 | 140 |
| கீரை - 1 பிடி | 15-20 | 50 | 50 |
| தேசிக்காய் | 80 | 120 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 50 | 30-40 |
| இராசவள்ளி | 120 | 140 | 200 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 226

இரத்தினசபாபதி பாலராஜா




துஷா துஷா




டினா கோபி

"பா" போடும் பெண்கள் அனைவரும் ஆண்களையே "டீ" போட கிச்சினுக்கு அனுப்புகின்றனர்




இன்றைய "பா" நாளைய "டீ" இதுவே காலப்போக்கில் பாடி என குழந்தைகளால் அன்போடு அழைக்கப்படுகிறது!!!

அசோக் குமார்




கேதாரநாதன் சரவணனன்





டொறின் மன்மதநாயகம்

உங்களுக்கு மதிப்பில்லை என்று நீங்கள் உணரும் இடங்களில் மௌனமாக இருக்க பழகுங்கள்

காலப்போக்கில் உங்கள் மௌனம் உங்களுக்கான மதிப்பை அங்கே ஈட்டித்தரும்.

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதே முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினை, 1886 ஆம் ஆண்டில் தொடங்கி 1979-80 களில் அணையின் பாதுகாப்பு பற்றி கேரள அரசு சிக்கலை உருவாக்கியது.

பின்னர் அது உச்சநீதிமன்றம் எல்லாம் சென்றது. 2011 ஆம் ஆண்டில் அது இரு மாநிலங்களுக்கு இடையிலான மோதலாகக்கூட வெடித்தது. அங்கிருந்து கேரளா செல்லும் வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டன. அந்த மாநிலத்துக்குச் செல்லும் தமிழக ஐயப்ப பக்தர்கள்கூட தாக்கப்பட்டனர். தேனி மாவட்டத்தின் கேரள எல்லையில் தமிழக பொலிஸார் குவிக்கப்பட்டு பத்து நாட்கள் வரை அப்பகுதியே பதற்றத்தில் இருந்தது. பின்னர் இரு மாநில உறவுகள் ஒரு வழியாக சீரானது. ஆனால், இப்போது மீண்டும் புதிய அணை கட்டுவோம் என்ற கேரள அரசின் முயற்சி யால், தமிழக - கேரள உறவில் மீண்டும் விரிசல் வரும் சூழ்நிலை எழுந்திருக்கிறது. கர்நாடக மாநிலத்துடன் உள்ள காவிரி நதிநீர் உரிமை 90 வருடம் பழமையான ஒப்பந்தத்தின் அடிப்படையில் உள்ளது. காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு மூலம் நிலை நாட்டப்பட்டுள்ளது.

# உறவை உடைக்கும் அணைகள்!

நதிநீர் பங்கீட்டுப் பிரச்சினை, இந்தியாவில் குறிப்பாக தமிழகத்துக்கு தாங்க முடியாத தலைவலியாக மாறியிருக்கிறது. காவிரிப் பிரச்சினையில் கர்நாடக மாநிலத்துடன் உள்ள உறவு, காவிரி தீர்ப்பாயத்தின் இறுதித் தீர்ப்பு வெளிவந்த பிறகுகூட வழமை நிலைக்குத் திரும்பவில்லை.

காவிரி இறுதி தீர்ப்பை அரசிதழில் வெளியிட முன்பு, முதல்வராக இருந்த ஜெயலலிதா பாடுபட்டதால்தான் அவரை பெங்களூர் சொத்துக் குவிப்பு வழக்கில் தண்டித்துவிடடார்கள் என்று, தமிழகத்தில் நோட்டீஸ் அடித்து பிரசாரம் செய்யப்பட்டது. ஜெயலலிதா பிணையில் வெளிவந்ததைத் தொடர்ந்து அப்பிரச்சினைக்கு தற்காலிகமாக ஓய்வு கொடுக்கப்பட்டது.

ஆனாலும், அடுத்த சில வாரங்களில் காவிரியின் குறுக்கே மேகதாது அணைப் பகுதியில் மேலும் இரு புதிய அணைகள் கட்டப்படும் என்று கர்நாடக முதலமைச்சர் சீத்தாராமைய்யா அறிவித்தார். இந்த அறிவிப்பு தமிழக மக்களை குறிப்பாக காவிரி டெல்டாவில் உள்ள மக்களை கொந்தளிக்க வைத்துள்ளது.

தொடர் போராட்டங்கள், ரயில் மறியல், கண்டனக் கூட்டங்கள் என்று களை கட்டியது தமிழகம். புதிய கட்சி ஆரம்பித்த தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன்கூட போராட்டம் நடத்திவிட்டார். புதிய அணைப் பிரச்சினை, கர்நாடகா மாநிலத்துடனான உறவில் பெரும் உரசலை ஏற்படுத்தியிருக்கிறது. இப்போது, முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையால் கேரளாவுடன் தலைவலி ஆரம்பிக்கிறது. இங்கும் புதிய அணை கட்டும் பிரச்சினைதான்!. 1979 ஆம் ஆண்டு, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 152 அடியிலிருந்து 136 அடியாகக் குறைக்கப்பட்டது. இந்திய உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின்படி, இந்த் வருடம் அதாவது 2014 இல் அணையின் நீர்மட்டம் 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்ந்தி ருக்கிறது.

இது கேரள அரசுக்கு ஏற்பட்ட தோல்வியாக அம்மாநில மக்கள் கருதுகிறார்கள். தமிழக அரசுக்கு கிடைத்த வெற்றியாக தமிழக மக்கள் கருதுகிறார்கள். இந்த வெற்றிக்கு அனைத்துக் கட்சியின் போராட்டங்களும் முயற்சிகளும் காரணம் என்றாலும் தி.மு.க.வுக்கும் அ.தி.மு.க.வுக்கும் இடையில் மட்டும் "என்னால் தான் வந்தது" என்ற போட்டி நிலவியது. அதிலும்கூட, அ.தி.மு.க. அரசின் நடவடிக்கையால், குறிப்பாக ஜெயலலிதாவின் சீரிய முயற்சியால் இந்த அணையின் நீர்மட்டம் உயர்ந்தது என்று பெரும் பாராட்டு விழாவே நடத்தி முடிக்கப்பட்டுவிட்டது.

இப்படி நடைபெற்ற வெற்றி விழாக்கள், கேரள மாநில மக்களை புண்பட வைத்தது. அதனால், அங்குள்ள அரசு அதாவது காங்கிரஸ் முதலமைச்சர் உம்மன் சாண்டி, ஏதாவது ஒரு வகையில் தன் மாநில மக்களை திருப்திப் படுத்த நினைக்கிறார். அதனால், இப்போது புதிய சர்ச்சை எழுந்திருக்கிறது. அதுதான் முல்லைப் பெரியார் அணைக்கு முன்பு இனனொரு புதிய அணை கட்டுவதற்கான முயற்சி.

முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பாக இல்லை என்ற நிலைப்பாட்டை எடுத்து, அடுத்தடுத்து புதிய அணைகளைக் கட்ட கேரள அரசு பல வருடங்களாகவே முயற்சி செய்து வருகிறது. ஆனால், அதற்கு தமிழக அரசு இடம்கொடுக்கவில்லை. மத்திய அரசும் இடம்கொடுக்கவில்லை.

இந்நிலையில், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த ஆர்.எம்.லோதா தலைமையிலான ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு முன்பு, முல்லைப் பெரியாறு வழக்கு விசாரணை நடைபெற்றது. அப்போது நாங்கள் புதிய அணை கட்டுகிறோம். முல்லைப் பெரியாறு அணை மூலம், தமிழகத்துக்கு அளிக்க வேண்டிய தண்ணீரை முறைப்படி கொடுப்போம் என்று வாதிட்டது.

அவ்வழக்கில், 2011ஆம் ஆண்டு மே மாதம் தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம், "புதிய அணை கட்ட வேண்டும் என்பது கேரளாவின் கோரிக்கை. அதை தமிழக அரசு ஏற்க மறுக்கிறது. இரு மாநில அரசுகளிடமும் இதில் ஓர் உடன்பாட்டை எட்ட முடியவில்லை. காரணம் இருதரப்புமே விடாப்பிடியாக தங்கள் தங்கள் கோரிக்கைகளில் உறுதியாக இருக்கிறார்கள்.

ஆகவே, புதிய அணை கட்ட வேண்டும் என்றால் இரு மாநிலங்களின் ஒப்புதல் தேவை. அதனால் புதிய அணை கட்ட வேண்டும் என்ற கேரள அரசின் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது" என்று தெள்ளத் தெளிவாக தீர்ப்பளித்தது இந்திய உச்சநீதிமன்றம். இதுதவிர, இந்த அணையின் பாதுகாப்பு தொடர்பாக நியமிக்கப்பட்ட மிட்டல்குழு, ஆனந்த் கமிட்டி அனைத்துமே அணை பாதுகாப்பாக இருக்கிறது என்பதை வலியுறுத்தி புதிய அணை கட்ட வேண்டிய அவசியமில்லை என்பதை வலியுறுத்தியுள்ளன.

2006 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் இரு தீர்ப்புகள் மூலம் அணை பலமாக இருக்கிறது என்பதை உச்சநீதிமன்றமே உறுதி செய்திருக்கிறது. எல்லாவற்றையும் விட 1886 இல் போடப்பட்ட முல்லைப் பெரியாறு அணை ஒப்பந்தம், கேரள அரசை கட்டுப்படுத்தும். அதன கீழ், தமிழக அரசுக்கு அனைத்து உரிமைகளும் இருக்கிறது என்றும் அந்தத் தீர்ப்பில் தெளிவாக்கியது.

இந்த தீர்ப்பை எதிர்த்து மீண்டும் கேரள அரசு இந்திய உச்சநீதிமன்றத்தில் ரிவியூவ் மனு தாக்கல் செய்தது. அதுவும் சில வாரங்களுக்கு முன்பு தள்ளுபடி செய்யப்பட்டது. அப்படி உசசநீதிமன்றமே நிராகரித்துள்ள புதிய அணை விவகாரத்தை இப்போது கேரள அரசு தூக்கிப் பிடித்திருக்கிறது.

மத்திய அரசின் சுற்றுப்புறச் சூழல் துறை, "சுற்றுப்புறச் சூழல் ஆய்வு" நடத்துவதற்கு அனுமதி வழங்கியிருக்கிறது. இதற்குத்தான் இப்போது தமிழகத்தில் எதிர்ப்புக் குரல் கிளம்பியுள்ளது. தமிழக முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம், பிரதமர் நரேந்திர மோடிக்கு 13.12.2014 அன்று எழுதியுள்ள கடிதத்தில், "உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக அணை கட்ட சுற்றுப் புறச்சூழல் தாக்கம் பற்றிய ஆய்வைச் செய்ய மத்திய அரசு வழங்கியுள்ள அனுமதியை இரத்து செய்ய வேண்டும். உங்கள் சாதகமான நடவடிக்கைக்காக காத்திருக்கிறேன" என்று வலியுறுத்தியிருக்கிறார்.

இதில் வேடிக்கை என்னவென்றால், சென்ற வாரம்தான் தமிழக சட்டமன்றத்தில் முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 152 அடிக்கு உயர்த்த வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அப்போது கூட "அணைப் பிரச்சினையைத் தீர்க்க நாங்கள் எடுத்த முயற்சிகளையும் சட்டமன்ற தீர்மானத்தில பதிவு செய்ய வேண்டும்" என்று தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின் எடுத்துரைக்க, அது மறுக்கப்பட்டு, அதனால் ஏற்பட்ட மோதலில் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர்.

ஆனால், அந்த தீர்மானத்தின் ஈரம் காய்வதற்குள் "புதிய அணை" என்று வேறு வடிவில் கேரள அரசுடன் தமிழக அரசுக்கு முட்டல் மோதல் ஆரம்பித்துள்ளது. உச்சநீதிமன்றத்தில் தங்களுக்கு கிடைத்த தோல்வியை, புதிய அணை கட்டும் முயற்சி மூலம் சரிக்கட்டிக் கொள்ள கேரள அரசு நினைக்கிறது என்பது தான் இதன் உள்ளர்த்தம்.

அ.தி.மு.க.வின் எதிர்ப்பு ஒரு புறமிருக்க, தி.மு.க.வின் சார்பிலும் கண்டனக் குரல், கலைஞர் கருணாநிதியின் அறிக்கை வாயிலாக 14.12.2014 அன்று வெளிவந்திருக்கிறது. "சுற்றுப்புறச்சூழல் ஆய்வு" நடத்த மத்திய அரசு அனுமதி கொடுத்துள்ளதற்கு கண்டனம் தெரிவித்துள்ள அவர், வேறு ஒரு முக்கியக் கோரிக்கைய் தமிழக அரசிடம் முன்வைத்துள்ளார்.

அந்த அறிக்கையில், "தமிழக அனைத்து அரசியல் கட்சிகளின் குழுவோடு முதலமைச்சரே நேரில் டெல்லி சென்று பிரதமரைச் சந்தித்துக் கூறினால் மட்டும்தான் நல்ல விளைவுகள் ஏற்படும். எனவே, தமிழக அரசு இனியாவது விழித் துக் கொண்டு உடனடியாக டெல்லி சென்று தமிழ் நாட்டின் கருத்துக்களை அங்கே எதி ரொலித்து நல்லமுடிவு காண வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்" என்று தமிழக முதலமைச் சர் ஓ.பன்னீர்செல்வத்துக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

தி.மு.க.வும் அ.தி.மு.க.வும் ஒரே அணியில் நின்று முல்லைப்பெரியாறு விடயத்தில், மத்திய அரசின் நிலைப்பாட்டை அறிக்கைகள் வாயிலாக கண்டித்தாலும் இரு கட்சியின் தலைவர்களும் ஒன்று சேர்ந்து டெல்லிக்குப் போவார்களா என்பது கேள்விக்குறிதான். ஆகவே, தி.மு.க. தலைவர் கருணாநிதியைப் பொறுத்தவரை மத்திய அரசுக்கும் கோரிக்கை வைக்கிறார். மாநில அரசுக்கும் கோரிக்கை வைக்கிறார். சூடுபிடித்துள்ள "புதிய அணைகள்" பிரச்சினை தமிழக மக்களுக்கும் கேரள மற்றும் கர்நாட மாநில மக்களுக்கும் இடையே உள்ள நீண்ட நெடிய உறவுக்கு சிக்கலை ஏற்படுத்து கிறது.

ஒன்றுபட்ட சென்னையில் இந்த மூன்று மாநிலப் பகுதிகளுமே இடம்பெற்றிருந்ததால், இந்த மூன்று மாநில மக்கள் மட்டுமின்றி, அருகில் உள்ள ஆந்திர மாநில மக்களுடனும் தமிழக மக்களுக்கு இனம்புரியாத உறவு உண்டு. ஆனால் காவிரி, முல்லைப் பெரியாறு, என்று வரும் நதிநீர் பங்கீட்டுப் பிரச்சினைகளால் இந்த உறவுகள் உரசலுக்குள்ளாகி அவ்வப்போது மீண்டு வருகிறது.

1924 ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி ஆரம்பித்த காவிரி நதிநீர் பிரச்சினை, 1970 களில் சூடுபிடித்து, 1990களில் கலவரமாகவே வெடித்தது. பெங்களூரில் உள்ள தமிழர்கள் எல்லாம் தாக்கப்படும் சூழ்நிலைகூட வந்தது. ஆனால, தமிழகத்தில் முதல்வராக கருணாநிதியும், கர்நாடகாவில் முதல்வராக எடியூரப்பாவும் இருந்த காலத்தில் இந்த உறவு சரி செய்யப்பட்டு சீரானது. ஆனால், அந்த உறவு இப்போது மேகதாதுவில் கட்டப்போகும் புதிய அணைகளால் விஸ்வரூபமாகும் நிலைமை உருவாகியிருக்கிறது.

கேரள அரசுடன் உள்ள முல்லைப் பெரியாறு அணை உரிமை 128 வருடத்துக்கு முன்பு உள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையிலானது. உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டுவிட்டது. இனியும் இந்த இரு மாநிலங்களும் தமிழக மக்களுடன் மோதத் துடிப்பது மூன்று மாநிலங்களுக்கு இடையில் உள்ள உறவையும் கூட்டாட்சித் தத்துவத்துக்கும் விரோதமான செயல் என்றே சட்ட வல்லுனர்கள் கருதுகிறார்கள்.

இதுவரை தமிழகத்தின் குரல் டெல்லியில் கேட்டுக் கொண்டிருந்தது. அதற்கு முக்கியக் காரணம் தமிழக எம்.பி.க்களின் ஆதரவு இல்லாமல் மத்தியில் ஆட்சி நடத்த முடியாது எனற நிலைமை. ஆனால், இப்போது நிலைமை அப்படியில்லை. அ.தி.மு.க.வுக்கு 37 எம்.பி.க்கள் இருந்தாலும் அவர்களின் ஆதரவு இல்லாமலேயே பிரதமர் நரேந்திரமோடி ஆட்சி நடத்த முடியும்.

இந்த சூழ்நிலையில் மத்தியில் ஆட்சியில் இருக்கும் பா.ஜ.க.வுக்கு கர்நாடாக மாநிலத்தில் ஆட்சிக்கு வரும் அந்தஸ்து உள்ள கட்சி. அதனால் காவிரிப் பிரச்சினையில் உடனடியாக தமிழகத்தின் கோரிக்கைக்கு பதில் சொல்ல மறுக்கிறது. அதனால்தானே என்னவோ இறுதித் தீர்ப்பின் படி அமைக்க வேண்டிய காவிரி மேலாண்மை வாரியம் இன்னும் அமைக்கப்படவில்லை. கேரளாவிலும் தமிழகத்திலும் பா.ஜ.க.வுக்கு ஒரே நிலைமைதான். இன்னும் சொல்லப்போனால் கேரளாவில் தமிழகத்தைவிட அக்கட்சிக்கு செல்வாக்கு இருக்கிறது.

அதனால்தான், முல்லைப் பெரியாறு அணைக்கு உச்சநீதிமன்ற உத்தரவுப்படி கண்காணிப்புக் குழுவை உடனே அமைத்த மத்திய அரசு, கேரள மக்களின் கோபத்தை தணிக்க இப்போது புதிய அணை கட்ட சுற்றுப் புறச்சூழல் ஆய்வு நடத்த அனுமதி கொடுத்திருக்கிறது என்பதுபோல் தெரிகிறது. கேரளா மற்றும் கர்நாடகாவின் பக்கம் நியாயமில்லை என்றாலும் மத்திய அரசு தமிழக அரசின் பக்கமாக முழுவதுமாக சாய்வதற்கு வாய்ப்பில்லை என்பதுதான் இன்றைய நிலைமை. ஆனால், புதிய அணைகள் பிரச்சினையில் மூன்று மாநிலங்களுக்கு இடையே உருவாகியுள்ள சர்ச்சைக்கு ஏதாவது ஒரு வகையில் தீர்வு காண வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு இருக்கிறது.

அப்படி இப்பிரச்சினைகளில் மத்திய அரசு மௌனம் காக்குமானால், பிரதமர் நரேந்திர மோடி தலையிடாமல் அமைதியாக இருந்தால் காவிரியிலும் முல்லைப் பெரியாறிலும் ஆளுங் கட்சி கோட்டை விட்டது என்ற பழிச்சொல்லை அ.தி.மு.க. சுமக்க வேண்டிய நிலை வந்து விடும். மத்திய அரசின் நிலைப்பாடு என்ன என்பதுதான் நதிநீர் பங்கீட்டுப் பிரச்சினையில் இப்போதுள்ள மிகப்பெரிய எதிர்பார்ப்பு.

*எம். காசிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சி மாற்றம் நிச்சயம் எனது இலக்கு தப்பாது



## சந்திரிகா தெரிவிப்பு

**மிகத் தெளிவான அரசியல் திட்டம் தீட்டப்பட்டு ஆட்சி மாற்றத்தினை இலக்கு வைத்த தேர்தல் செயற்பாட்டினை பொது எதிரணி முன்னெடுத்துள்ளது. ஒன்பது ஆண்டுகள் அமைதியின் பின்னர் நான் ஆட்சி மாற்றத்திற்கு இலக்கு வைத்துள்ளேன்.எனது இலக்கு தவறாது என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**

அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொது எதிரணியின் நிகழ்ச்சி நிரல் மிக தெளிவானது. திட்டமிட்டு அரசியல் மாற்றம் ஒன்றிற்கான ஒவ்வொரு அடியினையும் எடுத்து வைக்கின்றோம். எமது தேர்தல் பணிகள் மக்களை எம்பக்கம் ஈர்க்கும். அரசியல் பிரசார முயற்சிகள் பல இடர்பாடுகளுக்கு மத்தியில் இடம்பெறுகின்றது. பண பலத்திற்கும் அடக்குமுறைகளுக்கும் மத்தியில் மாற்றத்தின் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். இம்முயற்சி நிச்சயம் வெற்றி பெறும். நான் எனது பதவியினை ஒப்படைத்து வெளியேறிய போதிலிருந்து இன்று வரையில் மகிந்த ராஜபக்ஷ என்ற தனி நபரினால் பல அவமானங்கள், இடர்களுக்கு முகம் கொடுத்துள்ளேன். எனினும் இனிமேல் எனது அரசியல் பயணம் இவர்களுடன் அமைந்து விடக்கூடாது என்பதற்காகவே ஒன்பது ஆண்டுகள் மௌனித்து இருந்தேன்.

எனினும் எனது ஒன்பது ஆண்டுகள் மௌனம் கலைந்து மீண்டும் எனது இலக்கினை நோக்கி பயணிக்க ஆரம்பித்து விட்டேன். இதுவரையில் நான் வைத்த இலக்கு தவறியதில்லை. நான் தோற்கும் எந்தவொரு முயற்சிக்கும் துணை போகவும் மாட்டேன். ஆட்சி மாற்றத்தினை ஏற்படுத்த நான் வைத்துள்ள குறி தவறாது.

அதேபோல் மகிந்த ராஜபக்ஷ குடும்ப அரசாங்கத்தின் ஊழல் எல்லை தாண்டி விட்டது. நாம் நினைத்ததை விடவும் மோசமான வகையில் இவர்களின் ஊழலும் அடக்கு முறையும் உள்ளது. அரசாங்கத்தில் இருந்து பலர் இன்று வெளியேறியுள்ளனர். சிறந்த தலைவர்கள் அனைவரும் எம்முடன் கைக்கோர்த்து விட்டனர்.

இன்னும் சிலர் அரசாங்கத்தில் இருக்கின்றனர். அவர்கள் அரசாங்கத்தில் இருந்து வெளியேற முடியாதமைக்கு உயிர் பயமும் அராஜக செயற்பாடுகளுமே காரணம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மைத்திரிபால இரகசிய ஒப்பந்தம்


பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இரகசிய உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளார் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றஞ்சாட்டினார்.

சிலாபத்தில் நேற்று முன்தினம்இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு குற்றஞ்சாட்டினார். இது தொடர்பில் அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் உள்ளிட்ட குழுவினருடன் மைத்திரிபால சிறிசேன இரகசிய உடன்பாட்டில் கைச்சாத்திட்டிருக்கிறார். இந்த விடயம் குறித்து நாங்கள் உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம். இதனை மக்களுக்குப் பகிரங்கப்படுத்த வேண்டியுள்ளது.

எதிர்வரும் தேர்தலில் நான் தோற்கடிக்கப்படுவதை விரும்பும் வெளிநாடுகளிலுள்ள விடுதலைப் புலிகளின் ஆதரவுக் குழுக்கள் தன்னை ஹேக்கிற்கு கொண்டு செல்ல விரும்புகின்றனர். எனினும் பொதுமக்கள் தனக்கு அவ்வாறான நிலை ஏற்பட அனுமதிக்க மாட்டார்கள் என நம்பிக்கை தெரிவித்தார்.

மேலும் நாட்டில் முன்னெடுக்கப்படும் பெரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக முன் வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை நிராகரித்ததுடன், தனது புதல்வர்களுக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளையும் மறுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)



# ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்துமாறு ஜனாதிபதி வேட்பாளர்களிடம் கோரிக்கை

ஊடக சுதந்திரத்தை உறுதி செய்யுமாறு இரண்டு பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களிடமும் எட்டு ஊடக அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இலங்கையின் முன்னணி ஊடக நிறுவனங்கள் கூட்டாக இணைந்து இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளன. ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஊடக சுதந்திரம் குறித்த விடயங்களை உள்ளடக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை பத்திரிகை நிறுவனம் ஊடக நிறுவனங்களின் சார்பில் ஊடக அறிக்கை மூலம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

தகவல் அறிந்து கொள்ளும் உரிமையை உறுதி செய்தல், 1973 ஆம் ஆண்டு பத்திரிகைப் பேரவை சட்டத்தை இரத்து செய்தல் உள்ளிட்ட சில முக்கிய கோரிக்கைகளும் அந்தக் கோரிக்கைகளுக்கான காரணங்களும் ஊடக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், சுதந்திர ஊடக அமைப்பு, பத்திரிகை ஆசிரியர் பேரவை, இலங்கை பத்திரிகை சமூகம், தெற்காசிய சுதந்திர ஊடக அமைப்பு, இலங்கை தமிழ் ஊடகவியலாளர் அமைப்பு, இலங்கை முஸ்லிம் ஊடகப் பேரவை உள் ளிட்ட அமைப்புக்கள் சேர்ந்து இந்த வேண்டுகோளை விடுத்துள்ளன. (இ-5)

# சுதந்திர முன்னணியின் ஆட்சி கவிழும் நிலை!

கோட்டை மாநகரசபையில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சி கவிழும் நிலை ஏற்பட்டுள்ளது.

கோட்டை மாநகரசபையின் ஆளும்கட்சி உறுப்பினர் தனுக விஸ்வஜித் ஏற்கனவே எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இவரையடுத்து மேலும் மூன்று மாநகரசபை உறுப்பினர்கள் எதிரணியின் பக்கம் தாவவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கோட்டை மாநகரசபையில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 14 உறுப்பினர்களும், எதிர்க்கட்சிகள் தரப்பில் 6 உறுப்பினர்களும் உள்ளனர்.

இந்நிலையில், கோட்டை மாநகரசபையில் நான்கு உறுப்பினர்கள் எதிரணியுடன் இணைந்து கொண்டால், இருதரப்புக்கும் சமமான நிலை ஏற்படும் நிலையுள்ளது. (இ-5)

# இன்று ஒரு தகவல்

## செல்வம்

ஒரு ஊரிலே செல்வந்தர் இருந்தார். அவரிடம் பணத்திற்குப் பஞ்சம் இல்லை. அதனால் இவ்வுலகில் அவரால் முடியாத காரியம் எதுவுமே கிடையாது என நினைத்தார். பணம் இருந்தால் அந்த நினைப்புத் தானாகவே வந்துவிடும் தானே...

அந்த ஊருக்கு "குருநானக்"ஒரு தடவை வந்தார். அவருக்கு இந்த செல்வந்தர் மிகவும் பிரமாதமாக ஒரு வரவேற்பு கொடுத்தார்.

எங்கள் வீட்டுக்கு வந்து விருந்து சாப்பிட்டு விட்டு போக வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அவரும் "சரி"யென்று சம்மதம் தெரிவித்தார்.

உடனே தனது பங்களாவில் ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்தார். "குருநானக்"கை அழைத்துக்கொண்டு வீட்டுக்குச் சென்று அமரவைத்து, "ஐயா நான் இந்த ஊரி லேயே மிகவும் வசதி படைத்தவன். என்னாலே அனைத்தும் முடியும். உங்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என் றால் சொல்லுங்கள். எவ்வளவு செலவானாலும் பரவாயி ல்லை" என்று பணிவாகச் சொன்னார்.

இதைக் கேட்டதும் குருநானக் சிந்தித்தார். அதன்பின் தன்னுடைய சட்டைப் பையினுள்ளே கையை விட்டு ஒரு பழைய ஊசி ஒன்றை எடுத்தார். அதை செல்வந்தரிடம் கொடுத்தார். இதோ... பாருங்கள்... இவ்வளவு தூரம் நீங்கள் கேட்பதால் சொல்கிறேன். எனக்கு நீங்கள் செய்ய வேண்டிய உதவி இதுதான் என்றார்.

ஊசியை கையிலேயே வாங்கிக் கொண்ட இவர்"இதை என்ன செய்யவேண்டும் சொல்லுங்கள்"என்றார்.

"நீங்கள் செய்யவேண்டியது என்னவென்றால்...இந்த ஊசியை கவனமாக வைத்துவிட்டு நாம் இருவரும் இறந்து போனதன் பின்னர், பின்னால் சந்திப்பதற்கு வாய்ப்புள்ளது. அப்போது ஊசியை என்னிடம் கொடுங்கள். இதுதான் நீங்கள் எனக்காகச் செய்யவேண்டிய உதவி"என்று குருநானக் சிரித்தவாறு கூறினார்.

அது எப்படி சரிவரும்... நான் இறக்கும் போது எப்படி இந்த ஊசியை எடுத்துக் கொண்டு இன்னொரு உலகத்துக்கு வர முடியும்?" என்றார்.

"இந்த ஊசி மாதிரியான சிறிய பொருளை நாம் இறக்கும் போது எடுத்துக்கொண்டு போக முடியாது என்றால், எப்படி உங்களின் செல்வத்தையெல்லாம் எடுத்துக்கொண்டு செல்ல முடியும்?"என்று குருநானக் கேட்டார்.

அதன் பின்னர் அந்தப் பெரியவர் யோசனை செய்ய ஆரம்பித்தார்.

அதன்பின் குருநானக் சொன்னார்; நாம் செய்யும் நல்லது கெட்டதுதான் கடைசி வரைக்கும் இருக்கும். அடுத்தவர்கள் நன்றாக வாழ வழி செய்ய வேண்டும். அப்படி செய்யாவிட்டால் எந்தப் பிரயோசனமும் கிடையாது" என்றார்.

இதைக்கேட்டதும் செல்வந்தரின் அறிவுக்கண் திறந்தது. உடனே குருநானக் வணங்கினார்.

"ஐயா! என்னிடம் இருந்த ஆணவம் போய்விட்டது. இனி மேல் என்னிடம் இருக்கிற செல்வத்தை நல்ல வழியிலே செலவு செய்வேன்"என்றார்.

பணம் எப்போதும் எம்மோடு இருக்காது என்பது இதிலிருந்து புரிந்து கொள்ளமுடிகிறது.


பணமானது முறையான வழியிலே சேர்க்கப்படவேண்டும். அத்துடன் சரியான வழியிலும் செலவு செய்ய வேண்டும். அதனால் ஏற்படும் மனநிறைவு-அதை அனுபவித்தவர்களுக்குத்தான் புரியும்.

சொர்க்கத்திற்கு போகிறவர்கள் இவ்வுலகில் இருந்து பணத்தை எடுத்துச் செல்ல முடியாது. இவ்வுலகில் சேகரிக்கும் செல்வத்தை மற்றவர்களுக்கு பயன்படும்படி இங்கே செலவு செய்து கொள்வது நல்லது. அதன்மூலம் கிடைக்கப்பெறும் நன்மையையே நாம் மறுவுலகிற்கு எடுத்துச் செல்லலாம்- இப்படி ஆன்மீகவாதிகள் கூறுகிறார்கள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பவருக்கே எமது ஆதரவு



## சித்தார்த்தன் தெரிவிப்பு

**இனப்பிரச்சினைக்கும் தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் நடைமுறைப் பிரச்சினைகளுக்கும் ஒரு தீர்வை முன்வைக்கக்கூடிய வேட்பாளருக்கே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கும். இவ்விடயம் தொடர்பில் கூட்டமைப்பானது ஆராய்ந்து தீர்மானம் எடுக்கும் கூட்ட மைப்பின் தலைவர்இரா.சம்பந்தன்நாடுதிரும்பும்வரை இதற்காக காத்திருக்கின்றோம் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின்வடமாகாணசபைஉறுப்பினரும் புளொட் அமைப்பின்தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி தேர்தல்தொடர்பில அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான வேட்பாளர்களும் தமது பரப்புரைகளின் போது தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் சாதகமான கருத்துக்களை கூறவில்லை. மாறாக எதிர்மறையான கருத்துக்களையே தெரிவித்து வருகின்றனர்.

சிங்கள பெரும்பான்மையின மக்களின் வாக்குகளை பெறுவதற்காகவே இவ்வாறு எதிர்மறையான கருத்துக்களை இருபெரும் வேட்பாளர்களும் தெரிவித்து வருவதாகவே தெரிகின்றது.

இவ்வாறான கருத்துக்களைக் கேட்டு சிங்கள மக்கள் வாக்குகளை வழங்குகின்ற போது இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு சிங்கள பெரும்பான்மையின மக்கள் ஆதரவு வழங்காத சூழ்நிலை ஏற்பட்டு விடும்.

எதிர்மறையான கருத்துக்களை கேட்கும் சிங்கள மக்கள் தீர்வுக்கு இணங்க மாட்டார்கள். கடந்தகாலங்களில் இத்தகைய அனுபவங்களை நாம் பெற்றுள்ளோம். இந்த நிலையில் தீர்க்கமாக ஆராய்ந்தே தமிழ் தேசியக் கூட்டமைப்பு முடிவு எடுக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கும் அவர்களது நடைமுறைப்பிரச்சினைக்கும் ஒரு நியாயமான தீர்வை வழங்கக்கூடியவருக்கே கூட்டமைப்பு ஆதரவை வழங்க முடியும்.

திட்டமிட்ட குடியேற்றங்களை தடுக்கும் வகையிலும் மீள்குடியேற்றத்தினை மேற்கொள்ளும் வகையிலும் செயற்படக்கூடியவருக்கே ஆதரவு அளிக்க முடியும். இத்தகையப் பிரச்சினைக்கான தீர்வினை தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிப்பவருக்கே ஆதரவு வழங்கும் சூழல் காணப்படுகின்றது. இவ்விடயம் தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நாடு திரும்பியதும் விரிவாக ஆராய்ந்து தீர்மானம் ஒன்றுக்கு கூட்டமைப்பு வரும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## தோல்வி அச்சத்தில் மகிந்த அரசாங்கம்

### ஜே.வி.பி.தெரிவிப்பு

அரசாங்கத்திற்கு தோல்வி பீதி ஏற்பட்டுள்ளதாக ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். ஜனாதிபதி தேர்தலில் நிச்சயம் வெற்றியீட்டுவேன் என கூறி வந்த ஜனாதிபதி, தோற்றாலும் தாமே ஜனாதிபதி எனக் கூறும் அளவிற்கு பீதியடைந்துள்ளார்.

சர்வாதிகாரத்தை தோற்கடித்து ஜனநாயகத்தை வெற்றியீட்டச் செய்வோம் என்ற தொனிப்பொருளில் நேற்று முன்தினம் பிலியந்தலையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தேர்தலில் தோற்றாலும் இரண்டாண்டு ஜனாதிபதி மகிந்த ஆட்சி செய்ய முடியும் என்ற புதிய தர்க்கம் கொண்டு வரப்பட்டுள்ளது. இது தோல்வி தொடர்பிலான பீதியின் வெளிபபாடாகவே அமைந்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்து மகிந்த ஆட்சி செய்தால், வெற்றியீட்டியவர் வெளியில் இருந்து பார்த்துக் கொண்டிருப்பாரா? தேர்தல் தோல்வியின் பின்னர் ஜனாதிபதி மகிந்த அலரிமாளிகையை விட்டு வெளியேற வேண்டும்.

அவ்வாறு வெளியேறாவிட்டால், ஜனாதிபதியை வெளியேற்ற ஜே.வி.பி சகல வழிகளிலும் போராட்டங்களை முன்னெடுக்கும். தேர்தல் ஒன்றுக்காக அதிகம் செலவிடப்படும் சந்தர்ப்பம் இதுவாகும். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கட்அவுட்கள் மட்டும் 4000 மில்லியன் ரூபாவிற்கு அச்சிடப்பட்டுள்ளது. ஏனையவற்றுக்கு எவ்வளவு ரூபா செலவிடப்படும் என்பதனை புரிந்து கொள்ள முடியும்.

ஜனாதிபதி தேர்தலில் ஜே.வி.பி.போட்டியிடவில்லை என்ற போதிலும், ஜனாதிபதி மகிந்தவை வீட்டுக்கு அனுப்பி வைக்கும் முனைப்புகளில் ஈடுபட்டுள்ளது.

தேர்தல் பிரசாரத்திற்காக எவ்வாறு இவ்வளவு பணம் கிடைக்கப்பெற்றது, தொடர்ந்தும் களவாட அனுமதிக்க முடியுமா? தவறுதலாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த தேர்தலிலும் வெற்றியீட்டினால் நாட்டில் இரத்த வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும். நாட்டையும் நாட்டு மக்களையும் ஜனாதிபதி அழிவுப் பாதைக்கே இட்டுச் செல்கின்றார்.

ஜனாதிபதி தேர்தலில் மகிந்த வெற்றியீட் டினால் எங்களது எதிர் காலம் இருள் சூழ்ந்திருக்கும் என்றால் மக்கள் சிந்தித்து தீர்மானங்களை எடுக்க வேண்டுமென அநுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## யுத்த வெற்றியின் உரிமையாளராம்

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் பிரசார நடவடிக்கைகளில் தாம் மீண்டும் ஈடுபடவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

தமது இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர் இரண்டு வாரங்கள் சுகவீனம் காரணமாகவே பிரசாரங்களில் தாம் ஈடுபடவில்லை என்று அவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடனான போரில் 75 வீதத்தை தாம் ஆட்சியில் இருந்த போது நிறைவு செய்து விட்டதாக குறிப்பிட்ட அவர், அந்த நேரத்தில் விடுதலைப் புலிகளின் வசமிருந்த பெரும்பாலான இடங்கள் கைப்பற்றப்பட்டு விட்டதாக தெரிவித்தார்.

தமது ஆட்சியின் போது 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாகவும் அவர் கூறினார்.

எனினும் அதனை வைத்துக் கொண்டு தாம் காகம் போல கரைந்து கொண்டிக்கவில்லை என்றும் சந்திரிக்கா மேலும் தெரிவித்தார். (இ-5)

## தனியொருவரின் அதிகார மோகத்திற்காக ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுகின்றதாம்

தனியொருவரின் அதிகார மோகத்திற்காகவே ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுகின்றது. இந்த ஜனாதிபதி தேர்தலை மொத்த நாட்டு மக்களின் நலன்களுக்கான ஓர் தேர்தலாக மாற்றியமைக்க வேண்டுமென சமூக நீதிக்கான பல்கலைக்கழக பேராசிரியர் ஒன்றியத்தின் அழைப்பாளர் தம்பர அமில தேரர் தெரிவித்துள்ளார்.

நாட்டை சரியான வழிக்கு கொண்டு செல்லவதற்கான இறுதி சந்தர்ப்பமாக இதனை கருத வேண்டும். நாடு அழிவடைவதனை மக்கள் தொடர்ந்தும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. சட்ட விரோத ஜனாதிபதி தேர்தல் ஒன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது, இதனை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

வரலாற்றில் முதல் தடவையாக சிறைக் கைதிகள் தேர்தல் பிரசாரப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழக கட்டமைப்பு பாரிய அழிவுகளை எதிர்நோக்கி வருகின்றது. தேர்தல்களின் போது அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கக் கூடியவர்க்ள் மட்டுமே பல்கலைகழகங்களின் துணை வேந்தர்களாகும் கலாசாரம் மாற்றப்பட வேண்டும். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போரை முடிவுக்குக் கொண்டு வந்தார் என்பது உண்மையாகும்.

எனினும், போர் வெற்றியன் பலன்கள் மக்களைச் சென்றடையவில்லை. இந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகளினால சர்வதேச அரங்கில் நாடு தனிமைப்படுத்தப்படக்கூடிய அபாயம் காணப்படுகின்றது.

நாடு எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளிலிருந்து மீட்டு நல்லாட்சியை ஏற்படுத்த சிறந்த சந்தர்ப்பம் கிட்டியுள்ளது என தம்பர அமிலதேரர் தெரிவித்துள்ளார். பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவளிக்கும் நோக்கில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## மீரியாபெத்த மண்சரிவு பிரதேசம் பாதுகாப்பு வலயமாக பிரகடனம்

கொஸ்லாந்தை மீரியாபெத்த மண் சரிவுப் பிரதேசம் பாதுகாப்பு வலயமாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இம்மண் சரிவுப் பிரதேசத்தில் மரக்கன்றுகளை நாட்டுவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் இப்பகுதியில் மண்சரிவில் இறந்தவர்களுக்கான நினைவுத் தூபியொன்றும் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இம்மண்சரிவில் 37 பேர் பலியானதுடன் 13 பேரின் சடலங்கள் மட்டுமே தோண்டி எடுக்கப்பட்டன. இறந்தவர்களின் உறவினர்களினது பலத்த வேண்டுகோளுக்கிணங்க சடலங்கள் தோண்டி எடுக்கப்படுவது நிறுத்தப்பட்டன.

கடந்த ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதி இடம்பெற்ற மேற்படி மண்சரிவு பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் நிர்மாணிக்கும் பணிகள் இன்னும் ஓரிரு வாரங்களில் மேற்கொள்ளப்படுமென்றும் பதுளை மாவட்ட அரச அதிபர் ரோகண கீர்த்தி திசாநாயக்க தெரிவித்தார். 45 நாட்களாகியும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் அமைக்கப்படவில்லை என்பது தொடர்பாக மாவட்ட அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-5)

## பிரதமர் பதவிக்கு அடுத்தவரும் ரெடி

பிரதமர் பதவி வழங்கினால் ஏற்றுக் கொள்வேன் என சிரேஷ்ட அமைச்சர் எஸ்.பி. நாவின்ன தெரிவித்துள்ளார்.

பிரதமர் பதவியை வகிக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்தால் அதனை ஏற்றுக் கொள்ளத் தயார்.

வடமத்திய மாகாண ஊடகவியலாளர்களை ஜனாதிபதி செயலகத்தில் நேற்று சந்தித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

என்னை விடவும் ஆறு அமைச்சர்கள் பிரதமர் பதவியைப் பெற்றுக்கொள்ளக் கூடிய சேவை மூப்பைக் கொண்டுள்ளனர்.

பிரதமர் பதவியை வகிக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்தால் அதனை ஏற்றுக் கொள்வதில் பிரச்சினையிலலை.

திஸ்ஸ அத்தநாயக்கவிற்கு சுகாதார அமைச்சர் பதவி வழங்கப்பட்டமை குறித்து எவ்வித கவலையும் கிடையாது.

நாட்டின் அரசியல் சூழ்நிலைகளின் அடிப்படையில் எடுக்கப்படும் தீர்மானங்களை ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமானது.

தற்போதைய சூழ்நிலையில் அனைவரையும் திருப்திப்படுத்துவது நடைமுறைச் சாத்தியமற்றது.

அரசாங்கத்தின் எந்த வொரு தீர்மானமும் என்னை பாதிக்கவில்லை.

அதிருப்தியை வெளிப்படுத்தி கட்சியை விட்டு விலகிச் செல்லும் எவ்வித உத்தேசமும் எனக்குக் கிடையாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினர்களில் நானும் ஒருவன்.

பல்வேறு அமைச்சுப் பதவிகளை வகித்திருக்கின்றேன், இதனால் அமைச்சுப் பதவிகள் எனக்கு பெரிய பொருட்டல்ல என எஸ்.பி. நாவின்ன தெரிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சைப் பதற வைக்கும் பாக். படுகொலை!

## பான் கீ மூன் கடும் கண்டனம்

பாகிஸ்தானில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு ஐ.நா. பொதுச்செயலாளர பான் கீ மூன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் பெஷாவர் நகரிலுள்ள இராணுவத்தினர் நடத்தும் பாடசாலைக்குள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை புகுந்த தலிபான் பயங்கரவாதிகள் கண்மூடித்தனமாக துப்பாக்கியால் சுட்டதில் 132 மாணவர்கள் உட்பட 141பேர் உயிரிழந்தனர.

இந்தப் பாடசாலைக்குள், தலிபான் தற்கொலைப் படையினர் 7 பேர், இராணுவச் சீருடையில் பாகிஸ்தான் நேரப்படி காலை 10.30 மணிக்கு நுழைந்தனர். ஒவ்வொரு வகுப்புக்கும் சென்று அந்தப் பயங்கரவாதிகள் கண்மூடித்த னமாக துப்பாக்கியால் சுட்டனர். அவர்களில் சிலர், தங்கள் உடலில் மறைத்து வைத்திருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்ததாகவும் கூறப்படுகிறது. இந்தக் கொடூரத் தாக்குதலில், 132 மாணவர்களும், பாட சாலை ஊழியர்கள் 9 பேரும் உயிரிழந்ததாக அதிகாரிகள்தெரிவித்தனர.

மேலும், இத் தாக்குதலில் 130 பேர் காயமடைந்தனர். தாக்குதல் நிகழ்த்திய அனைத்து பயங்கரவாதிகளும் சுடடுக் கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதல் குறித்து பேசிய பான்கீமூன்கூறியபோது,

இந்த கொடூர செயல் கடுமையான கண்டனத்திற்குரியது. இதுபோன்ற கொடிய செயலுக்கு எந்தவித நியாயத்தையும் கற்பிக்கமுடியாது. இதுபோறை பயங்கரத்திற்கு எந்த பிரச்சினையையும் காரணமாக கூறமுடியாது. பாடம் கற்றுக்கொண்டிருக்கும் தற்காப்பில்லாத மாணவர்கள் மீது தாக்குதல் நடத்துவது கோழைத்தனமான, கொடிய செயல் என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)



## பலியானவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் மூன்று நாள் தேசிய துக்கம் கடைப்பிடிக்கப்படும்-நவாஸ்

தலிபான் தீவிரவாதிகள், பாகிஸ்தானில் பெஷாவரில் உள்ள ஒரு பாடசாலைக்குள் கொடூரமான தாக்குதலை நடத்தி, 100 இற்கும் அதிகமான அப்பாவி மாணவர்கள் உட்பட பல பேரை கொன்று குவித்து வெறியாட்டம் நடத்தியுள்ளனர். இச்சம்பவம் உலகையே உலுக்கியுள்ளது. தாக்குதல் நடத்திய 6 தீவிரவாதிகளும் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர்.

தீவிரவாதிகள் தாக்குதல்களில் பலியானவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் 3 நாட்கள தேசிய துக்கத்தை பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் அறிவித்தார். பெஷாவரில் நிருபர்களிடம் பேசிய அவர், இந்த நாட்டில் தீவிரவாதத்தை அடியோடு ஒழிக்கும் வரையில், தீவிரவாதத்துக்கு எதிரான போர் ஓயாது. இதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம் என கூறினார்.

இந்த தாக்குதல்களுக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடியும், இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூனும் மற்றும் உலகத் தலைவர்களும் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

பாகிஸ்தானின் இளம் மனிதவுரிமை ஆர்வலரும் உலக அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மலாலா யூசுப் சாய், இச்சம்பவத்தில் பெரிதும் அதிர்ச்சி அடைந்துள்ளார்.

பாகிஸ்தானில் பெஷாவரையாட்டியுள்ள வடக்கு வஜிரிஸ்தான் பகுதி, தலிபான், அல்கொய்தா தீவிரவாதிகளின் ஆதிக்கம் நிறைந்த பகுதயாக திகழ்கிறது. இங்குளள தீவிரவாதிகளை ஒழிக்கும் நடவடிக்கையில் அமெரிக்காவும், பாகிஸ்தானும் கூட்டாக ஈடுபட்டு வருகின்றன. அமெரிககாவின் ஆளில்லா விமானங்களும், பாகிஸ்தானின் போர் விமானங்களும் கடந்த 6 மாதங்களாக நடத்தி வருகிற வான்தாக்குதல்களில் தீவிரவாதிகள் கொன்று குவிக்கப்பட்டு வருகின்றனர். (இ-5)



## தலிபானுக்கு அஞ்சி தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கையை நிறுத்த மாட்டோம்-பாகிஸ்தான்

இராணுவப் பாடசாலையில் பயங்கரவாதிகள் கொடூரத் தாக்குதல் நடத்தியதற்கு அஞ்சி, வடக்கு வசிரிஸ்தானில் பயங்கரவாதிகளுக்கு எதிரான தாக்குதல் நிறுத்தப்படாது என பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் காஜா ஆசிப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் பெஷாவர் நகரில் இராணுவம் நடத்தி வரும் பாடசலையில் நேற்று முன்தினம் புகுந்த தலிபான் தவிரவாதிகள், மாணவர்களை நோக்கி சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர். இதில், 132 மாணவர்கள் உடபட 141பேர் பலியானார்கள். இராணுவ வீரர்கள் நடத்திய பதிலடி தாக்குதலில் 6 தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில், தொலைக்காட்சி நிறுவனத்துக்கு பேட்டியளித்த பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் காஜா ஆசிப், இராணுவப் பாடசாலையில் பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலுக்கு அஞ்சி வடக்கு வசிரிஸ்தானில் பயங்கரவாதிகளுக்கு எதிரான தாக்குதல் நிறுத்தப்படாது.

தலிபான் தீவிரவாதிகள் பாகிஸ்தானுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருக்கின்றனர். தலிபான்களில் நல்லவர்கள், கெட்டவர்கள் என்ற பேதமெல்லாம் கிடையாது. அவர்கள் அனைவருமே கொடியவர்கள்தான்.

தேசத்தின் பாதுகாப்பை உறுதி செய்யும் இராணுவ வீரர்களின் மாணவர்கள் இறந்துள்ளனர்.

இருப்பினும், பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலுக்கு அஞ்சி வடக்கு வசிரிஸ்தானில் பயங்கரவாதிகளுக்கு எதிரான தாக்குதல் நிறுத்தப்படாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)





## பாடசாலை மாணவர்களின் படுகொலைக்கு நோபல் பரிசுபெற்ற மலாலா கடும்கண்டனம்

பாகிஸ்தானின் பெஷாவரில் உள்ள இராணுவ பொது பாடசாலை மற்றும் கல்லூரிக்குள் புகுந்த தலிபான் இயக்க தீவிரவாதிகள் பாடசாலையில் இருந்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது சரமாரியாக துப்பாக்கி சூடு நடத்தினர்.

இதில்132 பாடசாலை மாணவர்கள் உட்பட 141 பேர் கொல்லப்பட்டனர். மேலும் பல மாணவர்கள் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த கொடூரமான நிகழ்வை பாகிஸ்தானை சேர்ந்த இவ்வாண்டு சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற சிறுமி மலாலா கடுமையாக கண்டித்துள்ளார்.

இது முற்றிலும் முட்டாள்தனமான செயல். அப்பாவி பாடசாலை குழந்தைகளை இதுவரை இப்படி யாரும் பயமுறுத்தியதில்லை. இப்படிப்பட்ட தாக்குதல் சம்பவங்களால் நாம் ஒரு போதும் வீழ்ந்துவிடமாட்டோம். இந்த தருணத்தில் பலியான சகோதர, சகோதரிகளுக்கு உலகம் முழுவதிலும் உள்ள மக்களுடன் சேர்ந்து எனது அஞ்சலியை செலுத்துகின்றேன். இந்த தீவிரவாத செயலை எதிர்த்து போராடும் அரசுக்கும், இராணுவ வீரர்களுக்கும் அனைவரும் ஒருங்கிணைந்து ஆதரவு தரவேண்டும்என்றுமலாலா கூறியுள்ளார். இதனிடையே சில தினங்களுக்கு முன் மலாலாவுக்கு நோபல் பரிசு வழங்கியதற்கு பழி தீர்க்கும் விதமாக தான் பெஷாவர் பாடசாலையில் தீவிரவாதிகள் துப்பாக்கி சூடு நடத்தியதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷ - சிறிசேன சபாஷ் சரியான போட்டி

தற்போது ஜனாதிபதியைப் பதவியிலிருந்து வீழ்த்துவதற்கான தனது ஜனாதிபதித் தேர்தல் போட்டி முயற்சியில் இறங்கியிருக்கும் பிந்திய போட்டியாளர் சிறிசேன அவர்கள் முன்னேற்றப் பாதையில் படிப்படியாகத் தொடர்ந்து முன்னேறி வருகிறார். அவரது அனுசரணையாளர்களான சந்திரிகா குமாரதுங்கவும் ரணில் விக்ரமசிங்கவும் அரசியல் சூதாட்டத்துடன் கூடிய நிர்வாகக் கட்டுப்பாட்டில் வித்தகர்கள் என்ற மட்டில் அவரது பணியானது அச்சமூட்டும் வகையில் சிக்கலான ஒன்றாகவேயிருக்கிறது.

எப்படியும் சிறிசேனவின் முன்னேற்றப் பாதையில் அவருக்கு ஏற்பட்டுவரும் நம்பிக்கை அதிகரிப்பின் வேகத்தை அவதானிப்பவர்கள் பலரும் அதன் தன்மையை வெகு தெளிவாகவே கண்டுகொண்டுள்ளனர். குறிப்பாக ஒலிபெருக்கியொன்றின் முன்னால் நிற்கும்போது அவரிடம் தெரியும் இத்துரித மாற்றம் நன்கு அவதானிக்கூடியதாக இருக்கிறது. பழைய SLFP யின் கட்சிப்பற்றாளர்களான இலங்கரட்ண போன்ற கட்சியின் ஏனைய தோழர்களும் முன்னர் சிறிமாவோ பண்டாரநாயக்கவை முன்னணிக்குக்கொண்டு வருவதற்கான உந்துசக்தியாக செயற்பட்ட விதம் குறித்து SLFP யின் பழைய தூண்களுக்கு இது நினைவூட்டுவதாக இருக்கும்.

பெண் என்ற வகையில் தனித்துவமான சொந்த வழியில் அவர் செயற்பட்டவிதம் அவர்களது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாகவேயிருந்தது. கடிவாளத்தின் கட்டுப்பர்ட்டை கையாளும் முறையை கற்றுக்கொண்ட அவர் வெகு விரைவில் தானாகவே குதிரையை (கட்சியை) செலுத்திச்செல்ல ஆரம்பித்திருந்தார்.

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரான அஜீத்குமார் டோவல் அவர்களது கொழும்பு வருகையானது, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, ரணில் விக்ரசிங்க மற்றும் சந்திரிகா போன்ற முக்கியஸ்தர்களுடனான அவரது அச்சந்திப்பை அப்போதுதான் கண்டிருந்தது. அதன்போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுடன் மைத்திரிபால கூடவே சேர்ந்து சென்றமையை சந்திரிகாவின் சொற்படியே சிறிசேன செயற்படுகிறார் என்ற அர்த்தத்திலேயே பலரும் சுட்டிக்காட்டியிருந்தனர் என்பதை குறைத்து மதிப்பிட முடியாது. இதனை மைத்திரி தானாக ஆமோதித்திருந்ததானது, தனது ஆசான்களை எவ்விதம் அவர் மதிக்கிறார் என்பதை காட்டுக்கிறது. இங்கு தனது ஆசான்களாக அவர் குறிப்பிட்டுக் கூறுவது, விக்ரமசிங்க, குமாரதுங்க ஆகிய இருவரையும் சேர்த்தே என்பது கண்கூடு.

கடந்த வெள்ளியன்று பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் ஊடகத் தலைவர்களுடன் அலரிமாளிகையில் வைத்து ஜனாதிபதி ராஜபக்ச அவர்கள்நடத்திய சந்திப்பொன்றின்போது ஜனவரி தேர்தலில்தான் சந்திக்கவிருக்கும் உண்மையான எதிரணி அபேட்சர் முன்னாள் ஜனாதிபதி குமாரதுங்கவேயல்லாது பொதுவான எதிரணி அபேட்சகர் மைத்திரிபால சிறிசேன அல்ல என ராஜபபக்ச பூடகமாக அறிவித்திருந்தார். UNP தலைவர் ரணில் விக்ரசிங்க அவர்கள் இந்த விடயத்தில் எதிரணியின் பிரச்சார இயக்கங்களிலி ருந்து விலக்கிவைக்கப்பட்டவராகவே இரு ப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டுக் கூறியிருந்தார்.

இங்கு சந்திரிகா- மங்கள திட்டம் ஒன்றே தான் செயற்படுகிறது. ரணில் ஒதுக்கப்பட்டவராகவே இருக்கிறார். ஒருசில நாட்களில் என்ன நடக்கிறதென்பதை காண்பீர்கள். சந்திரிகாவே உண்மையான அபேட்சர் என்பதே



அவரது கூற்றாக இருந்தது. தனக்கு உண்மையில் போட்டியாக இருக்கக்கூடிய ஒருவர் ரணிலேதான் என அவர் மேலும் கூறியிருந்தார். 29 தடவைகள் அவர் தோல்வியடைந்திருந்தாலும்கூட தேர்தலொன்றை சந்திக்கக்கூடிய ஆளணி, மூலவளங்களுடன் கூடிய கட்சி என்ற பலமான இயந்திரம் அவருடையதேயாகும்.

திரு.சரத்பொன்சேகாவுக்கான நல் அதிர்ஷட்த்திற்கு அன்று நான் நல்வாழ்த்துக்கூறியது போன்றே திருவாளர் சிறிசேனாவுக்கும் வாழ்த்துக்கூறுவது மட்டுமே என்னால் ஆகக்கூடும் என்றும் அவர் கூறியிருந்தார். முன்னெப்பொழுதும் இடம்பெற்றிராத விதத்தில் எந்த விதமான தடையோ சவாலோ இல்லாத நம்பிக்கை மிகுந்ததொரு நாட்டுத் தலைவர் என்ற பெருமைக்குரியவர் என்ற உள்ளுணர்வுடனேயே ஜனாதிபதி ராஜபக்ச தனது அதியுயர் பதவியை தொடர்கிறார்.

தனது இந்த ஜனாதிபதிப் பதவியை 3 ஆவது தடவையும் வெற்றிகரமாக தொடர்வதன் மூலம் சாதனை மேற்கொள்வதென்ற நம்பிக்கை அவருக்கிருந்தது. அது வரையில் உறுதியாகவே இருந்த ராஜபக்ச, சிறிதும் எதிர்பாராத விதத்தில் எதிரணி அரசியலில் பிரவேசித்திருந்த மைத்திரிபால சிறிசேனவின் செயலினால் அதிர்ச்சியுற்றதுடன் இரகசியமான முறையில் இடம்பெற்றதாக நம்பப்படும்- சந்திரிகா-மைத்திரிபால, மலிக் சமர விக்ரம மற்றும் மங்கள சமரவீர ஆகியோருக்கிடையிலான பல்வேறு சந்திப்புகள் பற்றி அவரது புலனாய்வு சேவைகள் கண்டுபிடிக்கத் தவறியதையிட்டு கடுங்கோபங்கொண்டவரானார். அந்தவகையில் தனது நெருக்கமான உதவியாளராவிருந்த மைத்திரிபால கூறும்போது அவர் ராஜினாமா செய்தபோதிலும் அதன் அடிப்படை வஞ்சகம் நிறைந்த பெரும் துரோகத்தனமேதான் என குறிப்பிட்டிருந்ததுடன் சவாலுக்கு அப்பாற்பட்ட தனித்துவமான ஒரு சாதனையாக அவர் அறிவித்திருந்த அந்த ஜனாதிபதி பதவிக்கான தனது இந்த மூன்றாவது சந்தர்ப்பம் தீர்க்கமான தேர்தலாக அமையப் போவது மட்டில் இப்போது ஒரு மிகக் கவனத்துடன் களத்தில் தீவிரமாக இறங்கியுள்ளார். இந்த நாட்டின் அரசியல் சரித்திரத்திலேயே ஒரு வரலாற்று சாதனையாக வேறெந்தவொரு தலைவரும் சாதிக்கவே முயற்சித்திருக்காதளவில் மாபெரும் சாதனையே இதுதான். இது மீண்டுமொரு தடவை இடம்பெறப்போவதில்லை என்ற வகையில் வர்ணிக்க முற்றிலும் வார்த்தையே இல்லாத சாதனையாக இருக்கக்கூடும்.

ஜனாதிபதி தனது வழமையான கடமை நேரங்களிலிருந்து சிறிது விடுபட்டவராக மாலைதீவுக்கு ஏற்பட்டிருந்த குடிநீர் நெருக்கடிக்கான உடனடி உதவியாக தான் நேரடியாகவே தலையிட்டு ஆதரவளித்திருந்தார்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி போட்டிக்கான அபேட்சகராக தன்னை அறிவித்துக் கொண்டதிலிருந்து அவரது பணிக்கான பாதை எளிதான ஒன்றாக இருக்கவில்லை. எதிரணியினர் தம்மிடையிலான வேறுபட்ட கோட்பாடுகளை ஒத்திசைவான முறையில் ஒழுங்கமைத்துக் கொள்வதன் மூலம் மக்களால் அவை ஏற்றுக்கொள்ளப்படத்தக்க எளிமையான ஒரு கொள்கைப் பொறியாக சீரமைக்கப்பட வேண்டிய தேவை இன்னும் உள்ளது. எதிரணியின் முன்நிலை உறுப்பினர்களான ஜெனரல் சரத்பொன்சேகா, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மற்றும் ரணில் விக்ரமசிங்க போன்ற ஏனைய முன்னணித் தலைவர்களும் தமது பொதுக்கருத்துக்களை மக்கள் மனதில் ஆழப் பதியும் விதத்தில் சக்திமிக்கதும் தேர்தலைமைப்படுத்துவதுமான பேச்சுக்கள் மூலம் பரப்புவதற்கான சந்தர்ப்பத்தை தவறவிடுவார்களானால் ஹைட்பார்க் மைதானக்கூட்டம் போன்ற பிரசித்த பொதுக்கூட்டங்களில் கிடைகக்கூடிய பெறுபேறுகள் அதிருப்தி அளிக்கும் விதத்தில் விடயங்களை மோசமாக்குவதாகவே அமையும்.

மேலும், இராஜதந்திர நடைமுறைகளைப் பார்த்தும் பாராமல் பெருந்தன்மையாக செயற்படும் கூடுதல் வெளிப்படையான இராஜதந்திரங்களுங்கூட உள்ளூர் அரசியலில் தேவையின்றி விளையாடுபவர்களே ஆவார். அதிகாரத்தினுள் நடைமுறை அரசொன்றை மாற்றுவது போன்ற தனது கருத்துக்களுக்கு பிரசித்தி பெற்றவரும் வெளிப்படையாகவே சந்திரிகாவுக்கு ஆதரவானவருமான ஐரோப்பிய நாடொன்றின் தூதரக துணை அதிகாரியொருவர் அண்மையில் நிகழ்ந்த ஒன்றுகூடல் ஒன்றின்போது, ஆனால் சந்திரிகாவும் கேள்விக்கிடமான பல ஒப்பந்தங்களில் சம்பந்தப்பட்டிருந்தனர் என்ற சவாலான எதிர்க்கூற்று ஒன்றினை எதிர்கொண்டபோது அது கடந்த கால விடயம் என்று குதர்க்கமாக பதிலளித்திருந்தார். எப்படியும் இராஜதந்திரமற்ற விதமான இந்த[illegible] நடத்தைகளிலுங்கூட உண்மை இருக்காது என்பது உள்ளூர் அரசியல்வாதிகளுக்கு தெரிந்த ஒன்றேதான். அதாவது தூதரக நிதி வளங்கள் கணக்காய்வுகளுக்கு அப்பாற்பட்டவை என்பதால்.

அரசியல் கட்சிகளது ஆதரவுக்காக இராஜதந்திர தொடர்புகளுங்கூட துஷ்பிரயோகம் செய்யப்படுவதான அறிக்கைகளுங்கூட இருக்கின்றன. முன்னாள் அமைச்சரும் அரச அதிருப்தியாளருமான டாக்டர் ராஜித

*சண்டே டைம்ஸ் பத்திரிகையில் தேர்தல் வெற்றியில் நம்பிக்கையாயிருக்கும் ராஜபக்சவுக்கு ஈடுகொடுத்து வெற்றிப்பாதையில் முன்னேறும் சிறிசேனா என்னும் தலைப்பில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் பிரசுரிக்கப்படுகிறது.*

சௌரட்ன, கடந்த வாரம் இடம்பெற்ற கூட்டமொன்றில் இலங்கை தொ.காங்கிரஸ் தலைவராகிய ஆறுமுகம் தொண்டமானை சந்தித்தபோது அருகிலுள்ள நாடொன்றின் உயர் ஸ்தானிகராலயம், பொது எதிரணி அபேட்சகருக்கான அவரது ஆதரவைக் கோருவதாக அவரிடம் கூறினார். ஆனாலும் ஸ்தானிகராலயம் தன்னை நேரடியாக தொடர்பு கொள்ளாமல் பதிலுக்கு ஏன் முகவர்களை அனுப்ப வேண்டும் என கேட்டிருந்தார்.

### கீழ்மட்ட பிரச்சாப் பின்னணிக் குறைபாடுகள்

பெருமெடுப்பிலான பாரிய கட்அவுட் உருவப் படங்களை தவிர்த்துப் பார்த்தாலுங்கூட தவிர்க்க முடியாத நைபோன் பதாதைகள் போன்ற சாதாரண தேர்தல் நியமங்களுக்குட்பட்ட சுவரொட்டிகள் போன்ற பிரச்சார பின்னணிக் குறைபாடுகளைப் பார்த்தபோது அந்த பிரசாரப்பேரணிக்கூட்டத்தில் கீழ்மட்ட ஈடுபாடுகள் குறைவாகவே காணப்பட்டது.

ஹைட் பார்க் சதுக்கத்தில் இடம்பெற்ற எதிரணித்தரப்பு பேரணியின் போது இது வெளிப்படையாகவே தெரிந்தது. மைத்திரிபால சிறிசேனா என்ற அந்தபுதிய அபேட்சகருக்காக வந்திருந்த அந்த மக்கள் கூட்டம் மிகவும் குறைந்தளவினதாகவே இருந்தது. தாராளப்போக்கில் மதிப்பிட்டுப் பார்த்தாலும் அக்கூட்டத்தில் ஏறக்குறைய 2000 பேர்களே இருந்திருப்பர் எனலாம். உள்ளூர் தொலைக்காட்சி அலைவரிசைகளில் பிரதான பேச்சுக்கள் முழுமையாக ஒலிபரப்பப்பட்டபோதிலும் அவற்றின் ஒளிபரப்புக் காட்சிகளில் மக்கள் கூட்டம் பெரிதாக எடுபடவில்லை.

### மேயர் தரப்பு விருப்பயீனங்கள்

கூட்டத்தில் வைத்து கொழும்பு மேயர் ஏ.ஜே.எம் முசாமில் அவர்களை அணுகிச் சென்ற ஆதரவாளர் ஒருவர் மேயரிடம், கொழும்பு மாநகரசபை UNP நிர்வாகத்தில் இருந்த போதிலும் இந்தக் கூட்டத்திற்காக மைதானத்தைக்கூட எம்மால் பெற்றுக்கொள்ள முடியவில்லை என கௌரவக்குறைவான முறையில் கூறினார். ஒருசில கணங்கள் வாய்மூடி மௌமாயிருந்த மேயர் தனது வாயைத் திறந்தபோது எதிர்பாராத விதத்தில் வார்த்தைகள் வெடித்துக் கிளம்பின. "என்னை கேள்வி கேட்பதற்கு நீ யார்? என்னைத் தெரிந்தெடுக்கவா நீ வேலை செய்தாய்? நாங்கள் எமக்குள் போராடிக்கொண்டிருக்கையில் உங்களில் யார்தான் எம்முடன் கூடவே இருந்தீர்கள்? இப்போது முறையிட விரும்புகிறீர்கள். அறிந்துகொள்! விக்ரர் இவானுடைய கோரிக்கையின் பேரிலேயே இந்த மைதானத்தை நான் பெற்றிருந்தேன். அத்துடன் எனது சொந்த பணத்திலேயே அதற்கான முற்பணத்தையும் கட்டியிருக்கிறேன் என்பதையும் தெரிந்துகொள்! ஆகையால் பேசுவதை அளந்து பேசு!" என்றபடி புயல்போல் அங்கிருந்து கிளம்பிய அவரது ஆவேசத்திற்கு உண்மையில் காரணமும் இருக்கவே செய்கிறது. இருப்பினும் அவரது இந்த ஆவேசத்திற்கு காரணம் அந்த பேரணிக்கூட்டம் பெரிதாக எடுபடாது போனது அல்ல என்பது மட்டும் நிச்சயம்.

**தமிழில்-யோகர்**

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# மதமாற்றம் குறித்து ஊடகங்களில் வெளியாகும் தகவல்களை நாம் கண்காணித்து வருகின்றோம்

## அமெரிக்கா தெரிவிப்பு

இந்தியாவில் பெருமளவு மக்கள கட்டாயமாக மதமாற்றம் செய்யப்படுவதாக ஊடகங்களில் வெளியாகும் செய்திகளின் அடிப்படையில்நிலமையை உன்னிப்பாக கவனித்து வருவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க வெளியுறவு செய்தி தொடர்பாளர் இது தொடர்பாக கூறியதாவது, பெருமளவில் வலுக் கட்டாயமாக இந்தியாவில் மக்கள் மதமாற்றம் செய்யப்படுவதாக வெளியாகும் தகவல்களை நாங்கள் அறிந்துள்ளோம். அங்குள்ள நிலமையை கண்காணித்து வருகிறோம். உலகம் முழுவதும் உள்ள நாடுகளில் மதசுதந்திரம் மற்றும் நம்பிக்கையை ஊக்குவிக்க நாங்கள உழைத்து வருகிறோம். சர்வதேச விதிமுறைகளின்படி மதசுதந்திரத்தை பாதுகாக்கவும் தங்கள் கடமைகளுக்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்று அனைத்து நாடுகளையும் நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்" என்று தெரிவித்துள்ளார்.

உத்தர பிரதேச மாநிலத்தில் உள்ள ஆக்ராவில் கடந்த டிசெம்பர் மாதம் 8 ஆம் திகதி நூற்றுக்கும் மேறபடட மக்களை, இந்து அமைப்புகள கட்டாயமாக மதமாற்றம் செய்ததாகவும், அவர்களில் பெரும்பாலானோர் குடிசைப்பகுதிகளில் வாழும் முஸ்லிம்கள் என்று தகவல் வெளியானது. இதையடுத்து அமெரிக்கா மேற்கண்ட தகவலை தெரிவித்துள்ளது. (இ-5)




# கன்னியாகுமரி மீனவர்கள் 10பேர் பிரிட்டன் பகுதி தீவில் சிறைபிடிப்பு

கன்னியாகுமரி மாவட்ட மீனவர்கள் 10 பேர் பிரிட்டனுக்கு சொந்தமான தீவில் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர்.

இந்தியப் பெருங்கடலில் கன்னியாகுமரிக்கு தெற்கே 2,200 மைல் தொலைவில் உள்ளது பிரிட்டனுக்கு சொந்தமான 'டீகோ கார்சியா' என்ற தீவு. இங்கு அமெரிக்கா தனது விமானப்படை தளத்தை நிறுவியுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் சின்னத்துறையைச் சேர்ந்த டைட்டஸ் என்பவரது 'கிரீஷ்மா' என்ற விசைப்படகில் மீன்பிடிக்கச் சென்ற 14 மீனவர்கள், இத்தீவின் அருகே கடந்த 10 நாட்களுக்கு முன் கைது செய்யப்பட்டனர். இந்நிலையில் மேலும் 10 மீனவர்கள் அங்கு சிறை வைக்கப்பட்டுள்ள விபரம் தற்போது தெரியவந்துள்ளது. கன்னியாகுமரி மாவட்டம் தூத்துாரைச் சேர்ந்த டைட்டஸ் (வயது-48) என்பவருக்கு சொந்தமான 'போசின்' என்ற விசைப்படகில் டிசெம்பர் மாதம் 2ஆம்திகதி, கேரள மாநிலம் வழிஞ்ஞும் துறை முகத்தில் இருந்து டைட்டஸ்(வயது-46), தர்மையன் (வயது-56), ஜெரோன் (வயது-55), ராஜாமணி (வயது-45), ஜெய்மான்ஸ் (வயது-57), பினு (வயது-40) உள்ளிட்ட 10 மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றனர்.

'டீகோர் கார்சியா' தீவின் அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த போது, அவ்வழியே வந்த பிரிட்டிஷ் கப்பல், மீனவர்களை கைது செய்தது. ஏற்கனவே டிசெம்பர் மாதம் 3ஆம் திகதி கைது செய்யப்பட்டு அந்த தீவில் பிணைக்கைதிகளாக வைக்கப்பட்டுள்ள மீனவர்களுக்கு அவர்களின் குடும்பத்தினருடன் பேச நேற்று முன்தினம் வாய்ப்பளிக்கப்பட்டது.

அப்போது அவர்கள் இவ்விடயத்தை தெரிவித்துள்ளனர். மீனவர்களை மீட்கக் கோரி ஜனாதிபதி, உள்துறை அமைச்சர், தமிழக முதல்வர் உள்ளிட்டோருக்கு தமிழ் நாடு மீனவர் வளர்ச்சி அறக்கட்டளைத் தலைவர் ஜஸ்டின் ஆண்டனி மனு அனுப்பியுள்ளார். (இ-5)

## பாரதச் செய்தி

# இந்தியாவிலும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்புக்குத்தடை

ஐ.எஸ்ஐ.எஸ் பயங்கரவாத அமைப்புக்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மக்கள வையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ளார்.

பல நாடுகளில், சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஐ.எஸ். ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பை ஊக்குவிக்கின்றனர். ஆனால், இந்தியாவில் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த பெற்றோர், தங்களது பிளளைகள் தீவிரவாத அமைப்புகளின பிடியில் சிக்குவதை ஊக்குவிப்பதில்லை. அவர்களை நான் பாராட்டுகிறேன.

மேலும், இந்திய இளைஞர்கள் மத்தியில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு மிக மிகக் குறைந்த அளவே ஆதரவு உள்ளது. ஆனால் அவர்கள், அந்த அமைப்பின் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனரா? என்பதை உறுதியாக சொல்ல முடியாது.

இந்தியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத அச்சுறுத்தல் தொடர்பாக மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. முதற்கட்டமாக, சட்டவிரோத செயற்பாடுகள் தடுப்புச் சட்டத்தின்கீழ், ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத அமைப்புக்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்த அமைப்பின் செயற்பாடுகளைத் தடுக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

சமூக வலைத்தளங்கள் உள்ளிட்ட தகவல் பரிமாற்ற தளங்களில், ஐ.எஸ்.ஐ.எஸ். போன்ற அமைப்புகளின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த, கணனிப் பாதுகாப்பை மேலும் பலப்படுத்தும் நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ளும்.

தீவிரவாத நடவடிக்கைகள் தொடர்பாக, சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த ஒன்றுமறியாத அப்பாவிகள் சந்தேகத்தின் பேரில் பொலிஸ காவலில் வைக்கப்படமாட்டார்கள்.

அதுபோன்ற நிகழ்வுகள் நடந்தால, அவைகுறித்து மத்திய அரசு கவனத்தில் கொள்ளும் என்று ராஜ்நாத் சிங் தெரிவித்தார். இதனிடையே, ஐ.எஸ்ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பு தொடர்பாக மக்களவையில் எழுப்பப்பட்ட பல்வேறு கேள்விகளுக்கு, மததிய உள்துறை இணையமைச்சர கிரண் ரிஜிஜு அளித்த பதில்,

இந்த விடயம் மிகவும் உணர்ச்சிகரமானது. இதுதொடர்பாக அவையில் விவாதிக்க முடியாது. ஆனால், ஐ.எஸ்.ஐ.எஸ். அமைபபன் செயற்பாடுகள் காரணமாக தற்போது நிலவும் சூழல் குறித்து நாம் அதிமாகக் கவலைப்பட வேண்டியதில்லை.

இதுபோன்ற அமைப்புகளின் நடவடிக்கைகளைத் தடுக்க, தேசிய பாதுகாப்பு படையினரின் எண்ணிக்கையை அதிகரிப்பது, குடியுரிமைக் கட்டுப்பாடுகளை வலுப்படுவது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்து வருகிறது. தீவிரவாத அமைப்புகளின் இணையத்தளம், சமூக வலைத்தளங்களின் பயன்பாடுகளைத் தடுப்பது சிரமமாக உள்ளது என்று தெரிவித்தார்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சித் தலைவர் அஹமது பேசுகையில ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின்செயறபாடுகள் இஸ்லாம் மதத்துக்கு எதிரானவை. தீவிரவாதத்துக்கு எதிரான மத்திய அரசின் நடவடிக்கைகளை எங்கள் கட்சி ஆதரிக்கும என அவா மேலும் தெரிவித்தார். (இ-5)

# சர்ச்சைக்குரிய கருத்துக்களை கூறி சங்கடத்தை ஏற்படுத்தி விடாதீர்கள்

## பிரதமர் மோடி அறிவுரை

பொது மேடைகளில் எல்லை மீறி பேசவேண்டாம்எனவும்தேவையற்ற பரச்சினைகளில் சிக்க வேணடாம் என்றும் பா.ஜ.க. எம்.பிக்களிடம் பிரதமர் நரேந்திர மோடி மீண்டுமொருமுறை வலியுறுத்தியுள்ளார்.

டில்லியில் நேற்று முன்தினம் பா.ஜ.க.எம்.பிக்கள் கூட்டத்தில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி இவ்வாறு வலியுறுத்தியிருந்தார்.

மேடைகளில் பேசும்போது சர்ச்சைக்குரிய கருத்துகளால் அரசுக்கும் கட்சிக்கும் களங்கம் ஏற்படுகிறது. இது பொதுமக்களுக்கு அரசு செய்ய நினைக்கும் நல்ல விடயங்களின திசைகளையும்மாற்றி விட வாய்ப்புள்ளது அண்மைக்காலமாக பா.ஜ.க. எம்.பிக்கள் வரம்பு மீறும் வகையில மேடைகளில் பேசி சர்ச்சையில் சிககி வருகின்றனர். இந்த விவகாரம் நாடாளுமன்றத்தின் நடப்பு கூட்டத் தொடரில் அதிகம் எழுப்பப்பட்டு, மத்திய இணை அமைச்சர் சாத்வி நிரஞ்சன் ஜோதி, எம்.பி சாக்ஷி மஹராஜ் ஆகியோர் மன்னிப்பு கேட்க வேண்டியதாயிற்று.

வரும் கிறிஸ்மஸ் தினத்தில் தனது பிறந்த நாளை கொண்டாடும் முன்னாள் பிரதமர் வாஜ்பாய்காக, அன்றைய தினம் சிறந்த நிர்வாக நாளாக கொண்டாடப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது. இதை மக்களிடையே கொண்டு செல்வதற்கு கருத்தரங்குகள் மற்றுமவிழிப்புணர்வுக் கூட்டங்களை அரசு நடத்த உள்ளது. இதை குறிப்பிட்டு பேசிய மோடி, அனைத்து எம்.பிக்களும் தங்கள் தொகுதியில் இந்த நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற ஒத்துழைக்க வேண்டும் என்றார்.

நாடாளுமன்றக் கூட்டம் முடிந்த பின், எம்.பி.க்கள் தங்கள் தொகுதிகளில் இரத்ததானம், இலவச உடல் மற்றும் கண் பரிசோதனை முகாம் உட்பட பல்வேறு முகாம்களை நடத்த வேண்டும் எனவும் ஏழை மக்கள் கடும் குளிரை சமாளிக்கும் வகையில் அவர்களுக்கு கம்பளி போன்ற அத்தியாவசியப் பொருட்களை இலவசமாக விநியோகிக்க வேண்டும் எனவும் மோடி கேட்டுக் கொண்டார்.

இதில், எம்.பி.க்களின் பணிகள் வெறும் பெயரளவில் என்றில்லாமல் வெளிப்படையாக மக்கள் பேசும் வகையில் இருக்கவேண்டும எனவும் மோடி வலியுறுத்தினார். இந்தக் கூட்டத்தில் பேசிய மத்தியநிதியமைச்சர் அருண் ஜேட்லி, "இந்த கூட்டத்தொடரில் ஏற்கனவே திட்டமிட்டபடி, நிலுவையில் உள்ள மசோதாக்களை நிறைவேற்றுவதில கவனம் செலுத்த வேண்டும். எதிர்கடசிகளின் நோக்கத்துக்கு துணை போகும்படி எம்.பி.க்கள் பேசக் கூடாது என்றார்.

மத்திய சிறுபான்மையினர் நலத்துறை இணை அமைச்சர் முக்தார் அப்பாஸ் நக்வி செய்தியாளர்களிடம் கூறும்போது, "ஆரோக்கியமான விவாதம் நடத்த எதிர்க் கட்சிகள்விரும்பவில்லை. அவையை நடைபெறவிடாமல் முடக்கவே அவர்கள் விரும்புகின்றனர்" எனச் குற்றம் சாட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# இந்திய இராணுவக் கட்டுப்பாட்டில் எனது கணவர் காணாமற்போனார்

## மனைவி சாட்சியம்

(குருமன்காடு)

எமது பகுதியை இந்திய இரா ணுவம் கட்டுப்பாட்டில் வைத்திரு ந்த போதே எனது கணவன் காணா மற் போனார் என மனைவி சிறி தரன் சிவனேசமலர் சாட்சியமளித் துள்ளார்.

வவுனியா பிரதேச செயலகத் தில் நேற்றையதினம் இரண்டாம் நாளாக நடைபெற்ற ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கும் போதேஅவர் மேற்கண்டவாறு சாட்சியமளித்தார்.






அவர் தொடர்ந்து சாட்சியமளிக் கையில்,

1989 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி கோதாண் டார் நொச்சிக்குளம் பகுதியில் உள்ள எமது வயலுக்கு இரவு காவ லுக்கு எனது கணவன் சென்றார்.

மறு நாள் விடிந்ததும் அவர் வழமை போல வீடு வரவில்லை. அப்பொழுது தேடினோம். அவரை காணவில்லை. இதன் போது ஆணைக்குழுவினர் அப்பகுதி யாரு டைய கட்டுப்பாட்டில் இருந்தது என்று வினவினர்,

அதற்கு பதிலளித்த அவர், எமது பகுதியில் இந்திய இராணுவம் இருந்தது. புலிகளும் இடையிடையே வந்து செல்வார்கள். எனது கண வன் வீடு வரவில்லை என தேடிய போது அப் பகுதியில் உள்ள வயல் களிலும் இடையிடையே இந்திய இராணுவம் நின்றது.

நீங்கள் யார் யாரிடம் போய் உங்கள் கணவன் பற்றி கேட்டீர்கள் என ஆணைக்குழுவினர் வினவிய போது,

இந்திய இராணுவத்திடம் எனது கணவரை பிடித்தீர்களா என கேட் டேன். இல்லை என்றார்கள். அதே போல் புலிகளையும் கேட்டேன். அவர்களும் இல்லை என்றார்கள் எனத் தெரிவித்தார். (2-250)

## குடிநீர் வழங்கும் திருப்பணி

(குருமன்காடு)

–தூய குடிநீர் வழங்கி நோய் வராது காக்கும் திருத்தொண்டை எங்கெங்கு தேவையுண்டோ அங்கெல்லாம் செய்ய வேண்டுமென திருவுளம் கொண்ட சாயி வவுனியாவிலும் அவரரு ளால் தூய குடிநீர் வழங்கும் திருப்பணி இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா கூமாங்குளம் சாயி சிறுவர் இல்ல வளாகத்தில் ருத்ரம், காயத்திரி மந்திரம், சாயி காயத்திரி மந்திரம், பஜனை, மகா மங்கள ஆரத்தியோடு விபூதி மந்திரம் ஓதி ஆரம்பித்து வைக்கப் படுகின்றது.

சித்ராவதி தூய இலவச குடிநீர் வழங் கல் எனும் பெயரோடு விளங்கும் இக் குடி நீர்த்திட்டம் பிணி போக்கும் தீர்த்தமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.அந்த வகையில் இத்திட்டத்தினை வைபவ ரீதி யாக வவுனியா மாவட்ட அரச அதிபர் சத் திய சாயி நிறு வனங்களின் மத்திய குழு வின் தலை வர் ஏ.ஜெகநாதன் ஆகி யோரால் பொதுமக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்படவுள்ளது.

சுண்ணக்கல் பிரதேசமான வவுனியா மண்ணில் பெரும் சுண்ணாம்புச் செறிவு கொண்டு பெரும்பாலனோருக்கு சிறு நீர் நோய் தாக்கியிருப்பதால் இந்நோ யின் கடுமையை இல்லாதொழிக்கும் நோக்கில் இத்திட்டத்தினூடாக பகவான் அக்கறை கொண்டுள்ளார் என்பதை நாம் அறிய வேண்டும். (2-250)

## மகிந்தவின் தேர்தல் பிரசார கூட்டம் கிளிநொச்சியில் இன்று

ஜனாதிபதி தேர்தல் பரப்புரை கள் நாடு தழுவிய ரீதியில் இடம் பெற்று வருகின்ற நிலையில் கிளி நொச்சி மாவட்டத்தில் இன்று பிற் பகல் 3 மணியளவில் நடைபெறும் தேர்தல் பிரசார கூட்டத்தில் பங்கேற் பதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வருகை தரவுள்ளார்.

இத் தேர்தல் பிரசார கூட்டம் கிளி நொச்சி மாவட்டத்தில் அமைக்கப் பட்டு வரும் சர்வதேச விளை யாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இதற்கான ஆயத்த வேலைக ளில் இராணுவத்தினரும் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் நேற்றைய தினம் ஈடுபட்டனர்.

அத்துடன் அவசர அவசரமாக மைதான துப்பரவு பணிகள் இடம் பெற்றுள்ளதோடு மின் குமிழ் அலங் காரவேலைகளும்நடைபெற்றுள்ளது.

இம்மைதானத்திற்கான உள் வீதி செப்பனிடும் பணியினை வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மேற்கொண்டுள்ளனர். (2-277)

## வெடிப்புக்கள் நிறைந்த கட்டடத்தினுள் மாணவர்கள் கல்வியை தொடர்கின்றனர்

### பாடசாலைச் சமூகம், பெற்றோர் கவலை

(மருதநகர்)

கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயம் பல்வேறு பௌதீக வளப்பற்றாக்குறையுடன் இயங்கி வருவதாக பாடசாலை சமூகத்தின ரும் பெற்றோரும் கவலை தெரிவிக் கின்றனர். இப்பாடசாலையில் தரம் 6 தொடக்கம் 13 வரையுள்ள வகுப் புக்களில் 843 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

கணிதம், விஞ்ஞானம் ஆகிய உயர்தர வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றது.

ஆனால் போதிய கட்டட வசதி, தளபாட பற்றாக்குறையுடன் இயங்கி வருவதாக பெற்றோரால் சுட்டிக்காட் டப்படுகின்றது.

கடந்த 6 ஆண்டுகளின் பின் னர் கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி வளர்ச்சிக்கு முதலீட்டு செலவாக 67 திட்டங்களுக்கு 2673.8 மில்லி யன் ரூபா நிதியொதுக்கப்பட்டபோ தும் இத்திட்டங்கள் எதிலும் அக்க ராயன் மகா வித்தியாலயம் உள் வாங்கப்படவில்லையென பல் வேறு தரப்பினராலும் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது.


இப்பாடசாலையின் நிலைமை தொடர்பாக பலதடவைகள் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினராலும் பழைய மாணவர்களாலும் பெற்றோர்களா லும் அரசியல்வாதிகளின் கவனத் திற்கு கொண்டு செல்லப்பட்ட போதி லும் இதுவரை எதுவிதமான முன் னேற்றமும் இடம்பெறவில்லை.

பழைமை வாய்ந்த கட்டடங்கள், வெடிப்புக்கள் நிறைந்த கட்டடங் களின் உள்ளேயே மாணவர்கள் கல்வியைத் தொடரும் அவலநிலை ஏற்பட்டுள்ளதாக பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன் மகிந்தோதய தொழில் நுட்ப ஆய்வு கூடம் கட்டி முடிக்கப் பட்டு பல மாதங்கள் கடந்துள்ள நிலை யில் இன்னும் திறந்து வைக்கப் படவில்லை.இதனை ஜனாதிபதி மகி ந்த ராஜ பக்ஷ திறந்து வைப்பரா என பாடசாலைசமூகம்அங்கலாய்க்கின்றது.

எனவே பாடசாலை நிலை மையை முன்னேற்றுவதற்கு கல்வி அதிகாரி களும் உரிய தரப்பினரும் விரை ந்து நட வடிக்கை எடுக்க வேண்டு மென பாடசாலை சமூகம், பெற் றோர் கேட்கின்றனர். (2-285)

## வீதியை விட்டு விலகிய பேருந்து தடம்புரண்டது



மாங்குளத்திலிருந்து முல்லைத்தீவு நோக்கி பயணித்துக் கொண் டிருந்த இராணுவப் பேருந்து ஒன்று வேகக்கட்டுப்பாட்டை மீறி வீதியை விட்டு விலகி மின்கம்பத்துடன் மோதி தடம் புரண்டது.இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு 11 மணியளவில் மாங்குளம் முல் லைத்தீவு வீதியில் ஒலுமடு பகுதியில் இடம் பெற்றது.

இவ்விபத்தில் குறித்த வாகனத்தில் பயணித்த 4 இராணுவத்தினர் காயமடைந்தனர். இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, இராணுவ பேருந்து குறித்த வீதியால் பயணித்துக் கொண்டிருந்த வேளை திடீரென வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மின்கம்பத்துடன் மோதி தடம் புரண்டது.

இதில் பயணித்த நான்கு இராணுவத்தினர் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவ்விபத்து இடம்பெற்றதையடுத்து ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கான மின்னிணைப்பு தடைப்பட்டது. அதன்பின்னர் மின்சாரசபையினால் புதுக்குடியிருப்பு மார்க்கத்தினூடாக மின்னிணைப்பு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-28)



முல்லைத்தீவு வலய ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான மகிழ்ச்சி கரமான கற்றல் கற்பித்தல் செயலமர்வு அண்மையில் முல்லைத்தீவு சுப்பிரமணிய வித்தியாலயத்தில் நடைபெற்றதைப் படங்களில் காணலாம்.

## மகிந்த ராஜபக்ஷ அனைத்தையும் பெற்றுத்தருவார்

### நாமல் எம்.பி. உறுதி

நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல்வருமான நாமல் ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி காரியால யத்தை நேற்று மன்னார் நகர்ப் பகுதியில் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்விற்காக ஏற்பாட்டா ளர்கள் பேசாலை, தாழ்வுபாடு, பள்ளி முனை போன்ற கிராமங்களை சேர் ந்த மக்களை விசேட பேருந்துகளில் அழைத்து வரப்பட்டனர்.

மன்னார் மாவட்ட மக்களின் தேவைகள், பிரச்சினைகள் தொடர் பாக பாராளுமன்ற உறுப்பினருடன் கலந்துரையாடி தீர்வு பெற்று தரப் படும் என்றும் கூறியே தாம் அழைத்து வரப்பட்டனர் என்று மக்கள் தெரி வித்தனர்.

நாமல் 12.15 மணியளவிலேயே வருகை தந்தார் என்றும் வந்தவுட னையே அவசர அவசரமாக காரியா லயத்தை திறந்து வைத்து விட்டு பயப்படவேண்டாம் மகிந்த ராஜபக் ஷவை இம்முறை வெற்றியடைய செய்யுங்கள். அவர் சகலதையும் பெற் றுத் முறை நான் மன்னார் வரு வேன். அப்போது உங்களுடன் கலந் துரையாடுவேன் என்று கூறி விட்டு அவசர அவசரமாக வெளியேறிச் சென்றார்.

இதனால் பல மணிநேரம் காத் துக் கிடந்த தமக்கு ஏமாற்றம் ஏற்பட் டது என்றும் ஏற்பாட்டாளர்கள் தம க்கு தீர்வு பெற்றுத் தருவதாக கூறி ஏமாற்றி விட்டனர் என்றும் மக்கள் தெரிவித்தனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாய்க்கு தவிசு (அரசு இருக்கை) இட்டால் குரைக்கவே செய்யும்.

– நீதி மொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## முன்பு பாட்டுக் கச்சேரி; இசைக் கச்சேரி இப்போது யாழில் சண்டைக் கச்சேரி

கச்சேரி என்பது மக்கள் கூடும் இடம் என்பதைக் குறிப்பதாகும். இதன் காரணமாகவோ என்னவோ கச்சேரி என்ற சொற்பதம் எங்களிடம் அதிகம் பேசப்படும் பொருளாயிற்று.

பாட்டுக் கச்சேரி, இசைக் கச்சேரி, மேளக் கச்சேரி என்ற சொற்பதங்கள் எங்கள் வாழ்வோடு கலந்தவை. இதற்கப்பால், எமது நிர்வாகம் சார்ந்த விடயங்களில் கச்சேரி என்ற அமைப்பின் வகிபாகம் காரணமாக கச்சேரி என்ற சொற்பதம் எமது மக்கள் வாழ்வோடு இரண்டறத்துவிட்டது எனலாம்.

நிலைமை இதுவாகவிருக்க, யாழ்ப்பாணக் கச்சேரியில் நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நடைபெற்ற போது ஏற்பட்ட சண்டை சச்சரவு, மோதல் சம்பவங்கள் எங்கள் அரசியல் தலைமைகளின் குப்பைத்தனத்தைக் காட்டுவதாகும்.

யாழ்.மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் என்றால், அங்கு மக்களின் தேவை பற்றி ஆராய வேண்டும். எனினும் நடக்கவேண்டியது நடக்காமல் வேறு விடயங்கள் பேசப்படும் போது எல்லாமே பிழை விடுகின்றன.

எதுவும் பேசலாம்; எப்படியும் பேசலாம் என்ற நிலைமை அறியாமையின் வெளிப்பாடாகும். எனினும் எங்கள் தமிழ் அரசியல் தலைமைகளில் இருக்கக் கூடிய முட்டாள்தனங்கள் தமிழர்களால் ஒரு ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தைக் கூட நடத்த முடியாது என்பதை நிரூபிப்பதாகவுள்ளது.

வடக்கு மாகாணசபைக் கூட்டத்தில் ஆளுங்கட்சிக்குள்ளேயே மோதல்பட்டு செங்கோலை உடைக்கும் அருவருப்புத்தனங்கள் ஒருபுறம், யாழ்ப்பாணக் கச்சேரியில் நடந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் சண்டைக் கச்சேரி மறுபுறம் என்பதாகவிருந்தால்,

தமிழ் மக்களின் உரிமையை இவர்கள் வென்றெடுப்பார்கள் என்று நம்பி எதிர்காலத்தில் மக்கள் இத்தகையவர்களுக்கு வாக்களிப்பது எந்தளவிற்கு பொருந்தமானதென்ற விடயம் மீள்வாசிப்புக்கு உட்பட வேண்டியதாகும்.

இந்த நாட்டின் நீதியரசராக இருந்த வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களுக்கு இந்த நாடு முழுவதிலும் உயர்ந்த மதிப்பும் மரியாதையும் உண்டு. அத்தகையை மதிப்புக்குரிய ஒருவரை முதலமைச்சராகக் கொண்டுள்ள நாம் அவருக்குரிய மதிப்பைக் கொடுக்க வேண்டும்.

எனினும் யாழ்ப்பாணக் கச்சேரியில் நடந்த ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தின் போது அமைதியை ஏற்படுத்துமாறும் நிதானமாக செயற்படுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்தும் அதை எவரும் செவிமடுத்ததாகத் தெரியவில்லை.

எல்லாவற்றிற்கும் கத்திக்குளறும் கலாசாரமே உயர்ந்தது என்று நினைக்கின்ற குப்பைத்தனங்கள் எங்கள் அரசியலில் இருக்கும் வரை எங்களுக்கு எந்த விடிவும் கிடைக்கதென்பதே உண்மை. இதை உறுதிப்படுத்துவதாகவே யாழ்ப்பாணக் கச்சேரியில் நடந்த சண்டைக் கச்சேரி அமைந்துள்ளது.

தேர்தலில் யார் நின்றாலும் வாக்களிப்பது, எவரையும் தேர்தலில் நிறுத்துவது என்ற கொள்கைகள்; நேர்மையான – பண்பான– பணிவான சபைக்குறிப்பறிந்த அங்கத்தவர்களை அரசியலிலிருந்து வெளியேற்றியுள்ளது.

யார் உரத்துக் கதைக்கிறார்களோ; யார் அடிதடியில் வல்லவர்களோ; யார் சபை கௌரவம் தெரியாதவர்களோ; அவர்களே பொருத்தமான வேட்பாளர்கள் என்ற ஒரு பெரும் கொடுமைத்தனம் அரங்கேறும் போது, கச்சேரியிலும் கைகலப்பு நடக்கவே செய்யும்.

எதுவாயினும் சபைகளை, கூட்டங்களை யார் குழப்பினாலும் அவர்களை அரசியலில் இருந்து வேரறுக்கும் தீர்ப்பை எமது மக்கள் வழங்காதவரை காட்டுமிராண்டித்தனங்கள் சபைகளை குழப்பவே செய்யும்.

## அரச தரப்பில் இருந்து அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது

நாங்கள் அரசாங்கத்தைவிட்டு வெளியில் வந்தவுடன் எங்களுக்கு அரசாங்க தரப்பில் இருந்து தொடர்ச்சியான அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது. எவ்வளவு அச்சுறுத்தல் வந்தாலும் நாங்கள் எந்த காரணம் கொண்டும் மீண்டும் அரசாங்கத்தில் இணைய மாட்டோம் என நுவரெலிய மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

இது தொடர்பாக பத்திரிகையாளர்களை தெளிவுபடுத்தும் கூட்டம் நுவரெலியாவல் அமைந்துள்ள காரியாலயத்தில நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் அரசாங்கத்தில் இருந்து வெளியில் வந்தமைக்கு முக்கிய காரணம் எமது பெருந்தோட்ட மக்களுக்கு வீடமைப்பு தொடர்பாக எந்தவிதமான நடவடிக்கையும் முன்னெடுக்கப்படாமையே ஆகும்.

அரசாங்கத்தை விட்டு வெளியில் வந்த பின்பு எனக்கு பல தொலைபேசி அழைப்புகள் மூலம் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. இதனை நான் பெரிதாக நினைக்கவில்லை.

ஆனால் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 10.11 மணியளவில் எனக்கு அநாமதேய தொலைபேசி அழைப்பு ஒன்று அரசாங்க தரப்பில் இருந்து வந்தது. அதில் நாங்கள் மீண்டும் அரசாங்கத்துடன் இணையாவிட்டால் எனக்கும் எனது குடும்பத்தாருக்கும் குறிப்பாக எனது பிள்ளைகளுக்கும் சேறுபூசும் நடவடிக்கைகளை எதிர்காலத்தில் முன்னெடுக்கவுள்ளதாகவும் எனவே கவனமாக நடந்து கொள்ளுமாறும் அதில் கூறப்பட்டது.

ஆனால், அந்த தொலைபேசி இலக்கத்தை என்னால் எனது தொலைபேசியில் பார்க்க முடியவில்லை. அதில் இலக்கத்துக்கு பதிலாக தனிப்பட்ட தொலைபேசி என குறிப்பிடப்பட்டிருந்தது.

நான் இது தொடர்பாக ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவத்துடன் கலந்துரையாடியுள்ளதோடு, தொடர்ந்து இந்த சம்பவம் இடம்பெறுமானால் இது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு ஒன்றை மேற்கொள்ளவும் தீர்மானித்துள்ளேன் என அவர் மேலும தெரிவித்தார். (இ-5)

## பாம்பு தீண்டி குடும்பஸ்தர் காயம்

(திருவையாறு)

வயலைப் பார்க்கச் சென்ற குடும்பஸ்தரை பாம்பு தீண்டியதில் அவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் வட்டக்கச்சி ஆறுமுகம் வீதியை சேர்ந்த யோகலிங்கம் விக்னேஸ்வரன் (வயது 45) என்பவரே படுகாயமடைந்தவராவார். (எ-273)

## யாழ்.மாநகரசபை பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அண்மைக்காலத்தில் யாழ்.மாநகராட்சி மன்ற பகுதியில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து காணப்பட்டமையினால் ஆளுநர் வட மாகாணம் மற்றும் மாநகர ஆணையாளரின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் நேற்றுத் தொடக்கம் வரும் 23 ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இக்கட்டுப்பாட்டு நடவடிக்கையின் போது டெங்கு நோயின் தாக்கம் அதிகமாக உள்ள பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுப்பதுடன் யாழ்.மாநகராட்சி மன்ற பகுதிகளிலும் அடங்கியுள்ள 9 பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுகளிலும் இக்கட்டுப்பாட்டு செயற்பாடு மேற்கொள்ளப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என யாழ்.மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.உமாசுதன் தெரிவித்துள்ளார்.

மேற்படி காலத்திற்குள் பகுதிகளில் தேங்கியுள்ள திண்மக்கழிவுகள் விஷேட வாடகைக்கு அமர்த்தப்பட்ட உழவு இயந்திரங்கள் மூலம் அகற்றப்படவும் மேலும் பரந்தளவில் டெங்கு நுளம்பிற்கு எதிராக புகையூட்டல் செயற்பாட்டினை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 23 ஆம் திகதி வரையும் நடைமுறையில் இருக்கும் இச்செயற்பாட்டிற்கு பொதுமக்கள் பூரண ஆதரவை நல்கி யாழ்.மாநகராட்சிமன்ற சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினருடன் ஒத்துழைக்குமாறும் மேற்படி செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்படுவோருக்கு நுளம்பு பெருக்க தடைச்சட்டத்தின் மூலம் வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (எ)



## சத்திய தரிசனம்

### நியாயமாக நடப்போம்


❖ உங்களுடைய கவனத்தை மனதுக்குள் திருப்புங்கள். அப்போது தான் நாம் யார் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

❖ நியாயமான வழி சிக்கலானதாக இருந்தாலும், எதையும் குறுக்கு வழியில் அடைய முயலக்கூடாது.

❖ கல்வி, செல்வத்தில் உயர்ந்த போதிலும், மனிதநேயமும், அன்பும் உடையவர்களாக இருங்கள்.

❖ கடமையைச் செய்வது மனிதரின் பொறுப்பு. அதற்குப் பலன் தருவது கடவுளின் பொறுப்பு.

❖ நல்லதைப் பேசினால் மட்டும் போதாது. அதை செயற்படுத்தினால் தான் ஆன்மீகம் முழுமையாகும்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### விக்ரகங்கள் கருங்கல்லில் அமைக்கப்படுவதன் தத்துவம் என்ன?

நமது நாட்டு கோவில்கள் அனைத்திலும், நகரமாக இருப்பினும் அல்லது கிராமமாக இருப்பினும் கோவில்களில் கருவறைகளில் காணப்படும் விக்ரகங்கள் அனைத்தும் கருங்கல்லில் மட்டுமே காணப்படுவதை நாம் பார்க்கலாம். இதற்கான கரணம் என்னவென்று நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

மற்ற உலோகங்களை விட கருங்கல்லுக்கு எந்த பொருளையும் தன் வசம் கிரஹித்துக்கொள்ளும் தன்மை அதகம். இதைத் தவிர பஞ்ச பூதங்களின் தன்மை கருங்கல்லில் அதிகம் உள்ளது என்பதே உண்மையான காரணம். மற்ற உலோகங்களில் இத்தகைய அம்சங்களோ, தன்மையோ கிடையாது.

1. ஆகாயத்தைபோல வெளியில் உள்ள சப்தத்தை தன்னகத்தே இழுத்து, ஒடுக்கி பின்னர் அதனை வெளியிடும் தன்மை கருங்கல்லுக்கு உண்டு.

2. காற்று, நீர், நெருப்பு, நிலம், ஆகாயம், ஆகிய பஞ்ச பூதங்களும் கருங்கல்லிலே அடங்கியுள்ளது. எனவே தான், பஞ்ச பூத வடிவான பகவானை கருங்கல்லிலே வடிவமைத்து பூஜை செய்வது நமது மரபானது.

இந்த விக்கிரகங்களே வழிபாடு செய்பவர்களுக்கு அருளாசி வழங்கும் தெய்வங்களாக நாம் நம்பிக்கையோடு வழிபடுகிறோம்.

பகவான் ஸ்ரீமன் நாராயணனை அர்சிப்பதற்கு துளசி தலமே மிகவும் சிறந்ததாகும். துளசியை ஹரிக்கொழுந்து என்றும் வில்வத்தை சிவக்கொழுந்து என்றும் அழைப்பார்கள். ஹரித்துழாய், துளவு, குல்லை, வளம், விருத்தம், பிருந்தா என பலப் பெயர்களைக் கொண்ட துளசி செடியின் அடிப்பாகத்தில் சகல புண்ணிய தீர்த்தங்கள் உள்ளன.

எனவே துளசியை புண்ணிய தலமாகக் கருதி நமது இல்லங்களில் அதனை வலம் வருவது, பூஜைகள் செய்வது, நீருற்றி வளர்ப்பது ஆகியவற்றை செய்துவருகின்றோம்.

துளசி செடியில் பல வகைகள் உண்டு. அவை நற்துளசி, கருந்துளசி, நாய்துளசி, செந்துளசி, கல்துளசி, முள்துளசி என்று பல வகைகள் உண்டு. இவற்றில் நற்துளசி, கருந்துளசி இரண்டை மட்டுமே பூஜைக்கு உரியதாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.


நமது இல்லங்களில் சாளக்கிராமத்திற்கு துளசி தளத்தையும், சிவலிங்கத்திற்கு வில்வ தளத்தையும் கொண்டு பூஜை செய்வது மிகவும் நல்ல பலன்களைக் கொடுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழக வீரர் முரளி விஜய் சதம்



# ஆஸிக்கு எதிரான டெஸ்ட் இந்தியா சிறந்த ஆரம்பம்



தமிழக வீரர் முரளி விஜயின் அபாரமான சதம் மூலம் அவுஸ்திரேலிய அணிக் கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முதல் நாள் முதலில் இந்திய அணி வலுவான நிலையிலுள்ளது.

இந்தியா- அவுஸ்திரேலியா இடையிலான 2 ஆவது டெஸ்ட் போட்டி பிரிஸ்பேன் கப்பா மைதானத்தில் நேற்று ஆரம்பமாகியது.

இந்திய கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 4 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது.

இதில் அடிலெய்டில் நடந்த முதலாவது டெஸ்டில் அவுஸ்திரேலியா 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இந்நிலையில் இவ்விரு அணிகளுக்கு இடையேயான 2 ஆவது டெஸ்ட் போட்டி யில் நாணய சுழற் சியில் வென்ற இந்திய அணித் தலைவர் டோனி தனது அணி முதலில் துடுப்பெடுத்தாடும் என்று அறிவித்தார்.

அதன்படி தொடக்க ஆட்டக்காரர்களாக முரளி விஜயும், ஷிகர் தவானும் களம் இறங்கினர். வழக்கம் போல் ஷிகர் தவான் நேற்றைய போட்டியிலும் சோபிக்கவில்லை.


இவர் 24 ஓட்டங்களில் மார்ஷ் பந்தில் கீப்பர் ஹேடினிடம் கேட்ச் கொடுத்து ஆட்டமிழந்தார். மூன்றாவது விக்கெட்டுக்கு களம் இறங்கிய புஜாராவும் 18 ஓட்டங்களில் வெளி யேறினார்.

இதையடுத்து வந்த கோலியும் ஹாசேல்வுட் பந்தில் கீப்பரி டமே கேட்ச் கொடுத்து 19 ஓட்டங்களில் வெளியேறி னார்.

இந்திய அணியின் தடுப்பு சுவராக நின்று சிறப்பாக விளையாடிய முரளி விஜய் சதம் அடித்தார். இவர் 22 பவுண்டரி உட்பட 144 ஓட்டங்கள் எடுத்து லயன் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

முரளி விஜயுடன் இணைந்த ரஹானே அரைசதம் அடித்தார். இவர் 63 ஓட்டங்கள் எடுத்த நிலையில் தொடர்ந்து விளையாடி வருகிறார். இவருடன் ரோஹித் களத்தில் இருக்கிறார்.





90 ஓவர்கள் முடிந்த நிலையில் இந்திய அணி 4 விக்கெட்டுகளை இழந்து 311 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

அவுஸ்திரேலிய தரப்பில், ஹா சேல்வுட் 2 விக்கெட்டுகளையும், மார்ஷ், லயன் தலா ஒரு விக்கெட்டுகளையும் எடுத்துள்ளனர். போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)

SPORTS விளையாட்டுச் செய்திகள்

## சென்னை அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது கேரளா




ஐ.எஸ்.எல். காற்பந்து தொடரின் அரையிறுதியில் சென்னை அணியை வீழ்த்தி கேரளா அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இந்தியன் சுப்பர் 'லீக்' (ஐ.எஸ்.எல்.) காற்பந்து போடடியில் சென்னையின் எப்.சி., கோவா, அட்லெடிகோ கொல்கத்தா, கேரளா பிளாஸ் டர்ஸ் ஆகிய 4 அணிகள் அரை இறுதிக்கு தகுதி பெற்றன. அரையிறுதியில் மோதும் அணிகள் உள்ளூர், வெளியூர் என இரண்டு முறை மோத வேண்டும்.

அதன்படி கடந்த 13 ஆம் திகதி கொச்சியில் நடந்த முதல் சுற்று அரையிறுதியில் சென்னைக்கு எதிராக கேரளா 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதையடுத்து இந்த இரு அணிகளும் 2 ஆவது முறையாக மோதும் ஆட்டம் சென்னை நேரு ஸ்டேடியத்தில் நேற்று முன்தினம் நடை பெற்றது.

4 கோல்கள் வரை அடித்தால்தான் அரையிறுதிக்குள் நுழைய முடியும் என்ற நெருக்கடியுடன் சென்னை அணி களமிறங்கியது. இதனால், துவக்கம் முதலே சென்னை வீரர்கள் தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபட்டனர். உள்ளூர் ரசிகர்களின் ஆரவார ஆதரவுக்கு மத்தியில் உற்சாகமாக விளையாடிய சென்னை அணியின் சில்வர்ஸ்டர் (42-வது நிமிடம்), ஜிங்கன் (76-வது நிமிடம்), ஜிஜே (90-வது நிமிடம்) ஆகியோர் கோல்கள் அடித்தனர். அதேசமயம் கேரள அணியின் கோல் முயற்சியையும் அபாரமாக தடுத்தனர். இதனால், ஆட்டநேர முடிவில் 3-0 என முன்னிலை பெற்றது.

இரு அரையிறுதி ஆட்டங்களின் முடிவும் சம நிலையில் இருந்ததால் வெற்றி, தோல்வியை நிர்ணயிக்க கூடுதல் நேரம் வழங்கப்பட்டது. இதில், விறுவிறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய கேரள அணி ஒரு கோலை பதிவு செய்தது. 117 ஆவது நிமிடத்தில் பியர்சன் அடித்த இந்த கோல் வெற்றி கோலாக அமைநதது. இதன்மூலம் கேரள அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.






மற்றொரு அரையிறுதி முதல்சுற்று ஆட்டத்தில்கோவா - கொல்கத்தா அணிகள் நேற்று மோதின. இந்த ஆட்டம் கோல் எதுவுமின்றி சமநிலை ஆனது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுக்கு நிதி திரட்டிய 10 பேருக்கு தண்டனை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதி திரட்டியதாக குற்றம் சுமத்தப்பட்ட பத்து இலங்கைத் தமிழர்களுக்கு ஜேர்மனியின் பெர்லின் குற்றவியல் நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

பெர்லின் நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கிய இந்தத் தீர்ப்பின்படி, இரு பெண்கள் உள்ளிட்ட பத்து இலங்கைத் தமிழர்களுக்கு 06 முதல் 22 மாதங்கள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கணபதிப்பிள்ளை கோணேஸ்வரனுக்கு 15 மாதங்களும், சுமதி உதயகுமாருக்கு 7 மாதங்களும், கோபாலபிள்ளை ஜெயசங்கருக்கு 8 மாதங்களும், பாலச்சந்திரன் பாலசுப்பிரமணியனுக்கு 22 மாதங்களும், குமணன் தர்மலிங்கத்துக்கு 6 மாதங்களும், வைத்திலிங்கம் ஜோதிலிங்கத்துக்கு 1 ஆண்டும், யோகராஜா சிறீஸ்கந்தராஜாவுக்கு 1 ஆண்டும், செந்தில்குமரன் கந்தசாமிக்கு 1 ஆண்டும், துஸ்யந்தி அருணாசலத்துக்கு 9 மாதங்களும், தயாபரன் ஆறுமுகத்துக்கு 1 ஆண்டும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.



இந்த தண்டனை இரண்டு ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையாகவே இருக்கும் என்றும், இதற்கு எதிராக ஒரு வார காலத்துக்குள் சமஷ்டி நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்ய முடியும் என்றும் பெர்லின் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

2007ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரை விடுதலைப் புலிகள் இயக்கத்துக்காக ஒரு இலட்சம் யூரோவைத் திரட்டியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்த இவர்கள் 32 வயதுக்கும், 60 வயதுக்கும் இடைப்பட்டவர்களாவர். இவர்களில் ஐவர் ஜேர்மன் குடியுரிமை பெற்றவர்கள்.

செப்ரெம்பர் 11 இரட்டைக் கோபுர தாக்குதலுக்கு பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட வெளிநாட்டு குற்றவியல் மற்றும் தீவிரவாத அமைப்புகளுக்கு உதவுவதைத் தடுக்கின்ற சட்டத்தின் கீழேயே இவர்களுக்கான தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# அம்லா - டி வில்லியர்ஸ் சதம் வலுவான நிலையில் தெ.ஆபிரிக்கா



அம்லா, டி வில்லியர்ஸின் மிரட்டலான துடுப்பாட்டத்தினால் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக செஞ்சூரியன் பார்க்கில் நடந்துவரும் முதல் டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி வலுவான நிலையை அடைந்துள்ளது.

தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி அங்கு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

இத்தொடரின் முதல் டெஸ்ட் போட்டி நேற்று செஞ்சூரியன் பார்க்கில் ஆரம்பமானது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணிக்கு அல்வீரோ பீற்றர்சன் - எல்கர் இணை சிறந்த ஆரம்பம் வழங்கியது.

இவர்களின் சிறப்பான துடுப்பாட்டத்தினால் தென்னாபிரிக்கா 9.5 ஓவர்களில் 50 ஓட்டங்களை கடந்தது.

இவ்வாறு சிறப்பாக துடுப்பாட்டத்தை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணிக்கு 14, 15, 16 ஓவர்கள் தடுமாற்றகரமான ஓவர்களாக அமைந்தன.

இந்த ஓவர்களில் பீற்றர்சன் (27 ஓட். 13.3 ஓவ.), எல்கர் (28 ஓட். 14.4), டூ பிளசி (0 ஓட். 15.5 ஓவ.) ஆகியோரை தென்னாபிரிக்க அணி இழந்து தடுமாற ஆரம்பித்தது.

எனினும் 4ஆவது விக்கெட்டுக்காக இணை சேர்ந்த அணித் தலைவர் அம்லா - டி வில்லியர்ஸ் ஜோடி மேற்கிந்தியத் தீவுகளின் பந்து வீச்சை துவம்சம் செய்தது.

தொடர்ந்தும் தமது சிறப்பான ஆட்டத்தை இவர்கள் வெளிப்படுத்தியமையால்,

இவ்ஜோடியை பிரிக்க மேற்கிந்திய அணித் தலைவர் டினேஸ் ராம்டீன் பந்துவீச்சாளர்களை மாற்றிப் பார்த்த போதும் அது வெற்றிகரமாக அமையவில்லை.

இவர்களின் சிறப்பான ஆட்டம் இறுதிவரை தொடர, தென்னாபிரிக்க அணி நேற்றைய முதலாம் நாள் ஆட்ட நிறைவில் 3 விக்கெட்டுக்களை மட்டுமே இழந்து 340 ஓட்டங்களை எடுத்திருந்தது.

களத்தில் அம்லா, டி வில்லியர்ஸ் ஆகியோர் ஆட்டமிழக்காமல் முறையே 133, 141 ஓட்டங்களுடன் உள்ளனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் சார்பில் றோச் 2, கொட்ரேல் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். போட்டியின் 2ஆம் நாள் ஆட்டம் இன்றாகும். (கு)



# இன்றைய போட்டி



இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் கார்கில்ஸ் வெற்றிக்கிண்ண எஃப் ஏ கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் வடமராட்சி லீக்கிற்கான போட்டிகள் இடம்பெற்று வருகின்றது,

இதில் இன்று நியூட்டன் விளையாட்டுக் கழகத்திற்கும் சுடரொளி விளையாட்டுக் கழகத்திற்குமிடையிலான போட்டியொன்று இடம்பெறவுள்ளது. (க-23)



# மரண அறிவித்தல்



சிவஸ்ரீ

**சுவாமிநாதக்குருக்கள் பாலசுந்தரக்குருக்கள்**

(பாலமணிக்குருக்கள்)

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான ஆதீன பரம்பரைக் குரு சிவஸ்ரீ சுவாமிநாதக் குருக்கள் பாலசுந்தரக்குருக்கள் (பாலமணிக்குருக்கள்) நேற்று (17.12.2014) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுவாமிநாதக்குருக்கள் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராமலிங்கக்குருக்கள் - சாரதாம்பாள் தம்பதிகளின் மருமகனும், அம்பிகையின் அன்புக் கணவரும், பிரியதர்ஷனி, பாலகணேஸ்வரக் குருக்கள், சிவாஜினி, மனுவித்யா ஆகியோரின் பாசமிகு தந்தையும், துளசிகாந்தக்குருக்கள் (ஜேர்மனி), அபர்ணா (அபிவிருத்தி உதவியாளர், அஞ்சல் அலுவலகம், யாழ்ப்பாணம்), பிரகதீஸ்வரசர்மா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிதர்சன், திவ்யன், வர்ஷினி, வித்யாசாகர், திவ்யாசாகர், நிதேஷ்சாகர், சௌம்யா, ரித்திக் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற சூளிகாம்பாள், லலிதாம்பிகை, பரமேஸ்வரக்குருக்கள், பத்மாவதி (கொழும்பு) ஆகியோரின் சகோதரரும், லலிதாம்பாள், ஸ்ரீதரக்குருக்கள் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2014) வியாழக்கிழமை மதியம் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.இல :
0777371255 (8800)

தகவல் :
குடும்பத்தினர்



# இராணுவ ஆக்...

தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சுற்றுலாத்துறை நாட்டின் மிக முக்கிய வருவாய்.. அதில் ஊழல் மோசடிகள் இடம்பெறுவது நாட்டின் அபிவிருத்தியையே வீழ்த்தி விடும். அவ்வாறானதொரு வரலாற்றுத் தவறினை இன்று மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் செய்து வருகின்றது. பத்திரிகைகளில் தொலைக்காட்சிகளில் விளம்பரப்படுத்தி நாட்டின் சுற்றுலாத்துறையினரை கவர முடியாது. அதையும் தாண்டி நாட்டில் உண்மையான அபிவிருத்தியும் பாதுகாப்பும் இடம்பெற வேண்டும்.

சுற்றுலாத்துறையில் இருந்து அனைத்து அபிவிருத்திகளுக்கும் இராணுவத்தையும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் தாக்கம் செலுத்தி நாட்டினை இராணுவ மயப்படுத்த முயற்சிப்பதனால் பலன் எதுவும் கிடைக்கப்போவதில்லை. எமது அரசாங்கத்தின் இராணுவம் அதன் கடமையினை மட்டுமே செய்யும். அதனைத் தாண்டிய இராணுவ ஆட்சிக்கு நாம் துணை போகமாட்டோம்.

மேலும் இன்று சர்வதேச மட்டத்தில் இலங்கை அதன் நிலையினை இழந்து விட்டது. உலக சுற்றுலா வரைபடத்தில் இலங்கை மறைக்கப்பட்டு விட்டது. இந்நிலையினை மாற்றியமைக்க வேண்டும்.

அன்று இலங்கையை விடவும் கீழ் நிலையில் உள்ள நாடுகளின் சுற்றுலாத்துறை அபிவிருத்தி கண்டுவிட்டது. இலங்கை பின்னடைந்து வருகின்றது. இந்த பெருமையும் புகழும் மகிந்த ராஜபக்ஷவிற்கே சேரும்.

எனவே மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கத்தில் உண்மையான அபிவிருத்தி முன்னெடுக்கப்படும். உண்மையான ஆட்சி நிலவும் வகையில் வர்த்தகர்களும் நன்மையடையும் பொருளாதார நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (எ-11)

# வவுனியா...

எச்.டபிள்யூ.குணதாச தெரிவித்தார்.

இதேவேளை, நேற்று புதிதாக 118 பேரின் முறைப்பாடுகளை ஏற்றுக்கொண்டதாகவும் ஆணைக்குழுவின் செயலாளர் கூறினார்.

இதன் பிரகாரம் கடந்த நான்கு நாட்களாக வவுனியா மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட காணாமற்போனோர் தொடர்பான சாட்சி விசாரணைகளில் மொத்தம் 169 பேரிடம் சாட்சியங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

அத்துடன் புதிதாக 331 பேரிடம் இருந்து ஆணைக்குழு முறைப்பாடுகளை ஏற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோதல் குறித்து...

தாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவித்தார்.

மோதலில் காயமடைந்த 6 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

சம்பவத்தில் காயமடைந்தவர்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 3 உறுப்பினர்களும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் 3 உறுப்பினர்களும் அடங்குவதாக அவர் கூறினார்.

அவர்களில் 5 பேர் ஏற்கெனவே சிகிச்சைகளின் பின்னர் வைத்தியசாலையில் இருந்து வெளியேறியுள்ள நிலையில் ஒருவர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன மேலும் குறிப்பிட்டுள்ளார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றபோது, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி பிரதிநிதிகளுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டிருந்தது.

இந்த சம்பவம் தொடர்பான முழுமையான காணொளி பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய விசாரணைகளை மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்களை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். (எ-11)

## அரசியல்...

அவர் மேலும் உரையாற்றுகையில்,

எமது சபை வட மாகாணத்தை நிர்வகிக்கத் தொடங்கி ஒரு வருடமும் இரண்டு மாதங்களும் ஆகின்றன. 2015-ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டத்தைச் சமர்ப்பிக்க முன்னர் ஒருசில விடயங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ளல் அவசியம் என்று எண்ணுகின்றேன்.

எமது வட மாகாணம் பாரிய போரினால் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசம். 2009-ம் ஆண்டு போர் முடிந்திருந்தாலும் போரின் தாக்கம் பல வருடங்களுக்குத் தொடரும் என்பதை நாங்கள் மறக்கக் கூடாது. பல சமயங்களில் பல தலைமுறைகளை இத் தாக்கம் பாதித்திருக்கின்றது என்பதையும் நாங்கள் மனதில் வைத்திருக்க வேண்டும்.

மாகாணசபை வழிமுறையானது அதிகாரப் பகிர்வை அடியொட்டியே இயற்றப்பட்டது. ஆனால் பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை மேலும் வலு அடையச் செய்வதாகவே காணக் கூடியதாக உள்ளது. ஆளுநர் அத்தகைய ஜனாதிபதியின் முகவராகச் செயற்படுகின்றார். மாகாண சபையால் எந்த ஒரு நியமனத்தையும் ஆளுநரின் அனுமதியின்றி வழங்க முடியாது. வடமாகாண முதலமைச்சரின் கருத்தொருமித்தலுடன் பிரதம செயலாளரை நியமிக்க வேண்டும் என்று சட்டம் கூறினாலும் ஜனாதிபதி இது பற்றித் தான்தோன்றித்தனமாக நடந்து கொள்வதை ஏவரும் தட்டிக் கேட்க முடியாத நிலையே தற்பொழுது நிலைபெற்றிருக்கின்றது. இராணுவமே தொடர்ந்து வடமாகாணத்தை நிர்வகித்து வருவதான ஒரு நிலையை போரின் போதான வடமாகாண யாழ்ப்படைத் தலைவரும் தற்போதைய வடமாகாண ஆளுநருமான இரண்டாம் பதவிக்காலம் பெற்றுள்ள ஆளுநர் ஏற்படுத்தி வருகின்றார். எமது அலுவலர்கள் அப்பேர்ப்பட்ட ஒரு ஆளுநரின் அதிகாரத்திற்கு அடிபணிந்தே போக வேண்டிய ஒரு நிலையில் உள்ளார்கள். எமது பிரதி நிதிகளிலும் பார்க்க ஆளுநரின் ஆக்ஞைகளுக்கே அவசிய மரியாதை கொடுக்கின்றார்கள்.

எமது ஒருவருடகால அனுபவமானது பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் எமது வடகிழக்கு மாகாணத் தமிழ்ப் பேசும் மக்களுக்கு விடிவு காலத்தை ஏற்படுத்தக் கூடும் என்று கூறிய சிலரின் கனவைச் சிதைப்பதாகவே அமைந்துள்ளது. அரசியல் ரீதியாக அடிபணிந்து எமது உரிமைகளைப் பெற நாங்கள் தயாராக இல்லை என்பதையும் இத்தருணத்தில் கூறி வைக்கின்றேன்.

எமது மக்களின் தனித்துவத்தை, தன்மானத்தை, தகைமைகளைத் தகர்த்தெறியவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எமது பாரம்பரிய இனப்பரம்பல் பரிதாபகரமாக மாற்றியமைக்கப்பட்டு வருகின்றது. தெற்கில் இருந்து எமது தமிழ்ப் பேசும் மக்கள் எவ்வாறு வன்முறைகளினால் அப்பிரதேசங்களை விட்டு வெளியேற்றப்பட்டார்களோ அதே போல் வடகிழக்கில் வாழ்ந்து வரும் தமிழ்ப் பேசும் மக்கள் வாழ்விடங்களை விட்டு வெளியேறவும் வெளியார்கள் வந்து குடியமர வழி அமைக்கவும் கட்டாயப்படுத்தப்பட்டு வருகின்றார்கள் என அவர் தெரிவித்தார். (எ-4)

## பொது...

நல்லாட்சி குறித்து ஜனவரி முதலாம் திகதி தன்னுடன் விவாதத்திற்கு வருமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன சவால் விடுத்துள்ளார்.

, பலப்பிட்டிய பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அவர் இதனை கூறியுள்ளார்.

ஒரு காதிதம் கூட இல்லாமல் தன்னால் விவாதத்திற்கு வர முடியும் எனவும் மகிந்த ராஜபக்ஷ விவாதத்திற்கு வந்தால் தான் அவரை தோற்கடிப்பேன் எனவும் மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## இராணுவம்...

அப்பகுதியை சுற்றிவளைத்த இராணுவத்தினர் அங்கு நின்றவர்களை கைது செய்து சென்றனர் என்று அவருடன் வேலை செய்தவர்கள் மீண்டு வந்து தெரிவித்தனர்.

யுத்தம் முடிந்த பின்னர் 2010ம் ஆண்டு பொலிஸ் நிலையம், மனித உரிமை ஆணைக் குழு என்பவற்றில் நான் முறையிட்டேன்.

மனித உரிமை ஆணைக்குழுவில் வேலுப்பிள்ளை பிரபாகரன் என்ற பெயருடைய ஒருவர் பம்பலப்பிட்டி பொலிஸ் நிலைய த்தில் இருக்கிறார் என்று பட்டியல் ஒன்றைக் காண்பித்தனர்.

எனினும் பின்னர் சில நாட்களில் அவ்வாறு எவரும் இல்லை என மறுத்து விட்டனர் என்றார் அந்தப் பெண். இதன் போது முகமாலை யாருடைய கட்டுப்பாட்டில் அப்போது இருந்தது என ஆணைக்குழுவினர் கேட்டதற்கு, இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது என்றார் அந்தப் பெண். (எ-11)

## மைத்திரிபாலவை...

மைத்திரிபால சிறிசேன மற்றும் எதிர்க் கட்சிகளின் முக்கிய பிரமுகர்களின் வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பில் அவதானிக்கப்பட்டு வருகிறது.

மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க, மங்கள சமரவீர, சம்பிக்க ரணவக்க மற்றும் சந்திரிகா குமாரதுங்க உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் முக்கிய பிரமுகர்கள் அண்மையில் வெளிநாடுகளுக்கு மேற்கொண்ட பயணங்களின் இரகசியங்கள் விரைவில் பொது மக்களுக்கு தெரியப்படுத்தப்படும்.

இந்த வெளிநாட்டுப் பயணங்களின் போது இவர்கள் எங்கு தங்கியிருந்தனர், யாரைச் சந்தித்தனர் மற்றும் இந்தச் சந்திப்புக்களின் போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் என்பன விரைவில் பகிரங்கப்படுத்தப்படும்.

இவர்கள் கடந்த மாதம் 2ஆம் திகதிக்குப் பின்னர் சிங்கப்பூரில் வெவ்வேறு காலப்பகுதிகளில் ஒரே விடுதியில் தங்கியிருந்து, குறிப்பிட்ட ஒரே குழுவினருடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர்.

இதே காலப்பகுதியில் சிங்கப்பூரில் உள்ள ஒரு விடுதி அல்லது இரண்டு விடுதிகளுக்கு நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஆறு பிரதிநிதிகள் சென்றுள்ளனர்.

வெளிநாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளின் தலைவர்கள் கொடுக்கின்ற டொலர்களுக்காக எதிரணியினர் நாட்டுக்குத் துரோகம் செய்ய முயலுகின்றனர்.

மைத்திரிபால சிறிசேன ஒரு அசிங்கமான நிர்வாகி. ஒரு அமைச்சையே நிர்வகிக்கத் தெரியாதவர் எவ்வாறு நாட்டை நிர்வகிக்கப் போகிறார்.

இவர் மகாவலி அபிவிருத்தி அமைச்சை சரியாக நிர்வகிக்காததால் தான், மொரகஹகந்த மற்றும் யான்ஓயா திட்டங்களுக்கான வெளிநாட்டு நிதியுதவிகள் திரும்ப நேரிட்டது என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## பொது...

இது தொடர்பான சட்டம் நியாயமான முறையில் அமுல்படுத்தப்பட வேண்டும்.

அதேவேளை ஹபராதுவ தொகுதி அமைப்பாளருடன் மோதல் ஒன்றை ஏற்படுத்தி, பொலிஸார் அவரை கைது செய்ய தேடியதுடன் அங்கு நடைபெற்ற கூட்டத்தை குழப்ப முயற்சிக்கப்பட்டது.

பலப்பிட்டிய கூட்டத்தின் ஏற்பாட்டாளர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களுக்கு பிரச்சினைகளை கொடுத்த பொலிஸார் அங்கு நடைபெறவிருக்கும் கூட்டத்தை குழப்புவதற்கு முயற்சித்து வருகின்றனர்.

இப்படியான நடவடிக்கைகளை தான் அனுமதிப்பதில்லை என மகிந்த ராஜபக்ஷ அண்மையில் கூறியதுடன் அவரது ஆதரவாளர்கள் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் போது எந்த எதிர்ப்பையும் வெளியிடாதது நகைப்புக்குரியது.

நிறைவேற்று அதிகாரத்தை தன்னிச்சையாக பயன்படுத்துவதே இவற்றுக்கெல்லாம் காரணம். கூடிய விரைவில் அதனை ஒழித்து நாட்டுக்கு நல்லாட்சியை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் எனவும் ராஜித சேனாரத்ன கூறியுள்ளார். (எ-11)

## கட்டுநாயக்க...

திரியின் ஆட்சி, நல்லாட்சியை ஏற்படுத்துவதாக கூறுகின்றனர். 8ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்தை மூடப்போகின்றார்களாம். ஒருவரையும் செல்வதற்கு இடமளிக்க மாட்டார்களாம்.

அவர்களுக்குத் தேவையான நபர்கள் மாத்திரமே செல்ல அனுமதிக்கப்படுமாம். எந்தவொரு நபரும் செல்வத்றகு அனுமதி வழங்கப்படமாட்டாது என கூறுகின்றனர். அதுவா நல்லாட்சி? பரவாயில்லை.

எமது தந்தை மத்தல விமான நிலையத்தை நிர்மாணித்தார். ஏனையோரும் செல்ல முடியும். அதனை மறந்துள்ளனர். மத்தலவை மறந்து விட்டனர். எனினும், யார் செல்கின்றார்கள் என தெரியவில்லை. நாம் துப்பாக்கி சூட்டுக்கு இலக்கானாலும், நாட்டை விட்டுச் செல்லமாட்டோம் என தெரிவித்தார். (எ-11)


### பிரத்தியேக ஆங்கில வகுப்பு

தரம் 1 தொடக்கம் 5 வரையான மாணவர்களுக்கான அடிப்படை ஆங்கில வகுப்புக்கள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
0776604418, 0775155878 (8792)

### V2 Travels and Tours

அனைத்து நாடுகளிற்குமான விமானப்பயணச்சீட்டுகள்
குறைந்த கட்டணத்தில் முற்பணமின்றி உங்கள் இல்லத்திற்கே பயணச்சீட்டுக்கள் கொண்டுவந்து தருகின்றோம்
அனைத்து நாடுகளிற்குமான வீசா ஆலோசனைகள், online, விண்ணப்பப்படிவங்கள், நிராகரிக்கப்பட்ட -Rejected visas துறைசார், சட்டவல்லுனர்களின் உதவியுடன் செய்து தரப்படும்
வெளிநாட்டிலிருந்து இலங்கை வருபவர்களின் இலங்கை வீசா நீட்டிப்பு
கொழும்பு செல்லவேண்டிய தேவையின்றி எமது அலுவலகங்களிலேயே செய்து தரப்படும்
கட்டார்,மத்தியகிழக்கு நாடுகளுக்கு செல்வோருக்கான விமானப்பயணச்சீட்டுக்கள் மற்றும் பயண ஒழுங்குகள் மிகவும் குறைந்த கட்டணத்தில் செய்து தரப்படும்

யாழ்ப்பாணம் – 49A சப்பல் லேன் - பொது நூலகம் முன்னால் – 0773867257
நெல்லியடி – முடக்காட்டுச்சந்தி – 0776699893
வல்வெட்டித்துறை – யாழ்வீதி - வல்வெட்டி – 0776697960

● மிகவும் குறைந்த கட்டணத்தில் 3 மாத பயிற்சியுடன் சர்வதேச அங்கீகாரமுடைய சான்றிதழ் மற்றும் வேலைவாய்ப்புக்கள்
● எம்முடன் இணைந்து தொழில்செய்ய விரும்பும் முகவர்கள், தனிநபர்கள் வரவேற்கப்படுகிறார்கள்

### Optimo Group of Company pvt (Ltd)

இது ஒரு அரிய சந்தர்ப்பம். தவறவிடாதீர்கள்!

எமது சர்வதேச நிறுவனத்தில் நீங்களும் O/L, A/L தகைமைகளுடன் புணிபுரியலாம். உலகில் எப்பாகத்திலும் உமது திறமைகளை வெளிக் காட்டலாம்.

மேற்பார்வையாளர், நிர்வாக உத்தியோகத்தர்கள், குழுப் பொறுப்பதிகாரிகள்
18 பேர் மட்டும்

- முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகியோருக்கு முன்னுரிமை.
- தங்குமிடம் & உணவு வசதிகள் உண்டு
- வயதெல்லை 18-29

தொடர்புகளுக்கு:-0777981471, 0775566224 (சி-9408)
பதிவு இல: PV12933

### World Education Consultancy



(விசா ஆலோசனை மையம்)

STUDY IN UK

City & Guilds. Approved Centre-UK

UK கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்கு...
- G.C.E O/L தகைமை போதுமானது.
- 18-22 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் விரும்பத்தக்கது.
- City&Guilds B1 அல்லது IELTS 4.5 ( OVER ALL ) ஆங்கில பரீட்சை பெறுபேறு கட்டாயமானது.

UK பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவதற்கு...
- G.C.E O/L , G.C.E A/L தகைமை கட்டாயமானது.
- 18-25 வயதை உடையவர்கள் எவரும் அனுமதியினை பெற்றுக்கொள்ளமுடியும்.
- City&Guilds B2 அல்லது IELTS 5.5 ( OVER ALL ) ஆங்கில பரீட்சை பெறுபேறு அவசியமானது.

(சி-9406)

- அரச கல்லூரிகளில் பட்டப்படிப்பு.
- வேலை செய்து படிக்கக்கூடிய அரிய வாய்ப்பு.
- 5 வருடகால அனுபவம்மிக்க வீசா சட்டஆலோசகரால் வீசா சட்டஆலோசனை.
- இலவசமாக நேரில்வந்து சட்டஆலோசனைகளை அறிந்துகொள்ளக்கூடிய அரிய சந்தர்ப்பம்.
- 150 இற்கும் அதிகமான வீசாக்களை பெற்றுக்கொடுத்த சாதனை.
- IELTS & A1,B1 Special வகுப்பு ஒழுங்குகள்

இந்த ஆண்டில் மட்டும் (2014) Gity & Guilds பரீட்சையில் சித்தியெய்து LONDON சென்றவர்கள் விபரம்.
1. Puvanenthiran mayoora
2. Thavarathinam kapila
3. Piragash malini
4. Murukaiya sarmila
5. Subramanium thayavathi

STUDY IN LATVIA ( EUROPE )



FEB INTAKE ற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

08.09.2014 மற்றும் 22.10.2014 அன்று எமது நிறுவனத்தின் விசா சட்டஆலோசனை மூலம் LATVIA நாட்டிற்கு விசாவை பெற்ற மாணவர்களில் சிலர்....

குறிப்பு: மேற்படி LATVIA நாடானது செங்கன் நாடுகளில் ஒன்றாகும் என்பதுடன் கல்லூரி விடுமுறைக்காலங்களில் GERMAN,SWISS,FRANCE,ITALY, HOLAND, SPAIN, NORWAY ....etc போன்ற நாடுகளிற்கு சென்றுவரமுடியும்.

* UK நாட்டிற்கான VISA reject ஆன மாணவர்களும் LATVIA நாட்டிற்கு விண்ணப்பிக்க முடியும்


மாணவர்களே! பெற்றோர்களே!! வளமான சந்தர்ப்பம் பயன்பெற்றுக்கொள்ளுங்கள்.

WORLD EDUCATION CONSULTANCY
No:377, Sangaththanai, Chavakachcheri.
0217200989,0779265447
( சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு அருகே)

WEC World Education Consultancy


### 31ஆம் நாள் நினைவுப் பூக்கள்

அமரர் ஞானப்பிரகாசம் அருள்ஞானசெல்வம் (கிளி)



தோற்றம் 12 - 06 - 1954

மறைவு 18 - 11 - 2014

எம் தெய்வத்திற்கு நிகரான எம் பாசத்தின் மறு உருவே
நீங்கள் வருவீர்கள் என்றுகாத்திருக்க வந்தது ஒரு செய்தி
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்ததாய்.
எப்படித்தான் நாம் இனி வாழ்வோமோ
நீங்கள் இல்லாத இவ்வாழ்வை?
பாசத்தின் சுமைகளுடன் உங்கள்
பசுமையான நினைவுகளுடன்
வாழ்கிறோம் மீண்டும் ஒரு ஜென்மத்தில்
நீங்கள் எம்முடன் வாழ்வீர்கள் என்று

எம் தந்தையின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி.
18.12.2014 இன்று வியாழக்கிழமை மதியம் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மாதா கோயிலடி, துன்னாலை வடக்கு, கரவெட்டி. (சி-9402)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org